33 / 31

# உதயன்

28 பக்கங்கள்

■ பதிப்பு: யாழ். ■ விலை: ரூபா 25

■ சுடர் 28 ■ கதிர் 137

■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 30, வெள்ளி 12.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com


# இராணுவத்தினர் குற்றவாளிகளே!

## இராணுவ நீதிமன்ற அறிக்கையை நிராகரித்து அடித்துக் கூறுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## தமிழர்களைக் கொன்று விட்டு பொய்கூறி தப்பிவிட முடியுமா என்றும் கேள்வி

கொழும்பு, ஏப்.12

இறுதிப்போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையை அடியோடு நிராகரித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை எனவும், போர்க்குற்றங்களில் படையினர் ஈடுபட்டனர் எனவும் அது உறுதிபடக் கூறியுள்ளது.

அத்துடன், இறுதிப் போரில் பல்லாயிரக்

பார்க்க பக்கம் 04

## 19 தமிழர்களை நாடு கடத்துவதை இடைநிறுத்தியது டுபாய் அரசு

லண்டன்,ஏப் 12

விடுதலைப் புலிகள் அமைப்பினால் நடத்தப்பட்ட தொலைக்காட்சிசேவையில் செய்தி வாசிப்பாளராக பணியாற்றிய லோஹினி ரதிமோகன் உட்படத் தற்போது டுபாயில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 19 இலங்கைத் தமிழர்களையும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை லண்டனிலுள்ள அவர்களின் சட்டத்தரணி குலசேகரம் கீதார்த்தனன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அபுதாபியிலுள்ள அகதிகளுக்கான ஐ.நா தூதரக அதிகாரியிடமிருந்து எழுத்து மூலமான தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர்

பார்க்க பக்கம் 04

## தென்னிந்திய திரையுலகுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

கொழும்பு,ஏப் 12

தமிழகத்தில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களைக் கண்டித்தும் இலங்கையின் உண்மை நிலைமையை நேரில் வந்து பார்க்குமாறு வலியுறுத்தியும் இலங்கையின் சிங்கள நடிகர், நடிகைகள் நேற்றுச் சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தினர்.

தமிழகத்தில், இலங்கைக்கு எதிராகத் தென்னிந்தியத் திரையுலகக் கலைஞர்கள் அண்மையில் முன்னெடுத்த போராட்டத்தைப்

பார்க்க பக்கம் 04


இந்தியர்கள் மோசமாக நடந்தாலும் தரம் குறையமாட்டார்கள் இலங்கையர் 9

நல்லிணக்கச் செயற்பாடுகளில் இலங்கை இறங்க வேண்டும் 11

இந்தியாவில் புலிகளுக்குப் பயிற்சியா? விசாரணை நடத்தலாம் கோத்தாவே 15

முகமாலைப் பிரதேசத்திலேயே அதிகளவான மிதிவெடிகள் 19


## மோசமான தாக்குதலில் 4 இந்திய மீனவர் காயம்



சென்னை.ஏப்.12

இந்திய மீனவர்கள் மீது, நேற்று முன்தினம் இரவும் விரட்டி விரட்டித் தாக்குதல் நடத்தப்பட்டதால் 4 பேர் மோசமாகக் காயமடைந்துள்ளனர் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாகை, கோடியாக்கரையைச் சேர்ந்த மீனவர்களே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு

பார்க்க பக்கம் 04

## இந்திய அரசு தொடர்ந்தும் ஈழத் தமிழருக்கு உதவும்

### வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலர் உறுதி

கிளிநொச்சி, ஏப்.12

ஈழத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தியா தன்னாலான உதவிகளைத் தொடர்ந்தும் வழங்கும் என்று இந்திய அபிவிருத்தி கூட்டு நிர்வாகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலாளருமான எஸ்.இராகவன் தெரிவித்தார்.

இறுதிக் கட்டப் போரில் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இந்திய உயர்மட்டக் குழுவினர் நேற்று வியாழக்கிழமை சென்றனர்.

இதன்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 230 வர்த்தகர்களுக்கு 91 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. முதல் கட்டமாக 20 பேருக்கு, கிளிநொச்சி கூட்டுறவு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே சிறப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

போரினால் பாதிக்கப்

பார்க்க பக்கம் 04

## ஐ.நாவிலிருந்து வெளியேறுவதற்கு இலங்கை முயற்சியா?

### கேட்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஏப்.12

அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பாவுடன் மட்டுமல்லாது, சீனாவுடனும் முரண்பட்டு சர்வதேசத்தைப் பகைத்துக்கொள்ளும் இலங்கை, ஐநா. அங்கத்துவத்திலிருந்து வெளியேறிச் செயற்படுவதற்கா

பார்க்க பக்கம் 04

## கைத்தொலைபேசி அழைப்பால் பயணிகளை மறந்தார் சாரதி

### கோப்பாயில் விபத்து; 5 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.12

கோப்பாய் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்து ஒன்றின்போது மோட்டார் சைக்கிளையும், வீதிக்கு அருகில் இருந்த மதிலையும் பந்தாடியது மினி பஸ். இதில் ஐவர் படுகாயமுற்றனர்.

பார்க்க பக்கம் 04



## காணியற்றோருக்காக புதிய சுற்றறிக்கை

### முள்ளியவளை குடியேற்ற முயற்சியை அடுத்து

கொழும்பு, ஏப்.12

முல்லைத்தீவு முள்ளியவளைக் காட்டை அழித்து மக்களைக் குடியமர்த்த எடுக்கப்பட்ட முயற்சிகளைத் தொடர்ந்து, காணியற்றவர்களுக்குக் காணி வழங்குவது தொடர்பில் புதிய சுற்றறிக்கையை வெளியிடக் காணி

பார்க்க பக்கம் 04

## 8 ஆயிரம் இலங்கை அகதிகள் இறுதிப் போரின் பின் ஆஸி.க்கு

கான்பரா,ஏப்.12

இறுதிப் போருக்குப் பின்னர் இலங்கையிலிருந்து சுமார் 8 ஆயிரம் அகதிகள் ஆஸ்திரேலியாவில் குடியேறியுள்ளனர் என்று ஆஸ்திரேலிக் குடிவரவுத்துறை அறிவித்துள்ளது.

இது குறித்துக் கூறியுள்ள குடிவரவுத்துறை அதிகாரி ஒருவர் ,2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்து 2013ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவுக்கு 8,170 இலங்கை அகதிகள் வந்துள்ளனர்.

பார்க்க பக்கம் 04

## 13ஆவது திருத்தம் அர்த்தமற்றது

### இந்தியாவிடம் கூறியது கூட்டமைப்பு

கொழும்பு,ஏப் 12

13ஆவது அரசமைப்புத் திருத்தம் அர்த்தமற்றது என இலங்கை வந்திருந்த இந்திய நாடாளுமன்றக் குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கை வந்த இந்திய நாடாளுமன்றக் குழுவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றுள்ளது. இதன்போது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் படியும், அதற்கு மேலாகவும் சென்று அதிகாரப் பரவலாக்கத்தை

பார்க்க பக்கம் 04

## 19 இந்திய மீனவர்கள் நேற்று விடுவிப்பு



மன்னார்,ஏப்.12

ஒரு மாதத்துக்கு முன்னர் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 19 பேர் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி, இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்ததாகக் கூறி இந்திய

பார்க்க பக்கம் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. திருப்பியனுப்பும் அகதிகளை ஏற்போம்

## கூறுகிறார் இலங்கைத் தூதுவர்

கான்பரா,ஏப்.12

ஆஸ்திரேலியாவுக்கு அடைக்கலம் தேடி வரும் இலங்கையர்களை அந்த நாட்டு அதிகாரிகள் திருப்பி அனுப்புவார்களானால் அவர்களை நாங்கள் வரவேற்று ஏற்றுக்கொள்வோம் என்று ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்க தெரிவித்துள்ளார்.

**இலங்கையில் பெரும் எடுப்பில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுவதைத் தூதவர் அடியோடு மறுத்தார் தூதுவர்.**

ஆஸ்திரேலியாவுக்கு அடைக்கலம் தேடிச் செல்கின்றவர்களின் படகுகளை திருப்பி அனுப்புகின்ற முன்னாள் பிரதமர் ஜோன் ஹவார்ட்டின் கொள்கை மீண்டும் பின்பற்றப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலிய எதிர்க் கட்சித் தலைவர் டோன் அபோட் தெரிவித்திருப்பது தொடர்பாக ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு இலங்கைத் தூதுவர் பதில் அளித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அதிகாரிகளால் இலங்கை அகதிகளின் படகுகள் எமது கடற்பகுதிக்குத் திருப்பிக் கொண்டுவரப் படுமானால் நாம் அவற்றைப் பொருத்தமான இடங்களில் வரவேற்று பொறுப்பேற்றுக் கொள்வோம் என இலங்கைத் தூதுவர் திசார சமரசிங்க கூறியுள்ளார்.

''இவை மிகச் சாதாரண விடயங்கள். ஆனால் இந்தக் கடல் மார்க்கங்கள் படகுகளுக்கு அதிகப் பாதுகாப்பானதாக இல்லை; எமது மக்களின் பாதுகாப்பு முக்கியம்'' என்றும் அவர் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கு ஆஸ்திரேலியா ஜெரால்டன் துறைமுகத்தில் வந்திறங்கிய 66 இலங்கை அகதிகளும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.



இலங்கையில் பெரும் எடுப்பில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுவதைத் தூதவர் அடியோடு மறுத்தார்.

பொருளாதாரக் காரணங்களுக்காகவே மக்கள் அடைக்கலம் தேடி புறப்படுகிறார்கள் அவர்கள் உயிர்களைப் பணயம் வைத்து ஆஸ்திரேலியாவுக்கு வரத் தேவையில்லை. அவர்கள் உயிரைக் காக்கப் போவதானால் இதைவிட அருகாமையில் பல இடங்கள் இருக்கின்றன - என்றார் அட்மிரல் சமரசிங்க. (த-ப)

## கண்ணகை அம்மன் துறைக்கு படகுகள் செல்ல தடையில்லை

### கடற்படையினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.12

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறை முகத்திலிருந்து நயினாதீவுத் துறைமுகத்துக்குப் படகுகள் நேரடியாகச் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை என்று கடற்படையினர் தெரிவித்துள்ளார்

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஊர்காவற்றுறை துறைமுகத்தில் காணப்படும் இரும்புக் கேடர்களை அகற்றித் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனை அகற்றுவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலும் ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறை முகத்திலிருந்து நேரடியாக நயினாதீவு துறைமுகத்துக்குச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது, குறிகாட்டுவான் சென்றே நயினாதீவுக்குச் செல்லுமாறு பணிக்கப்படுகின்றது, சில வேளைகளில் நயினாதீவுக்கு

**அங்கு படகுகள் கட்டுவதற்கு உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்**

எமது படகுகள் சென்றாலும், அங்கு அவற்றைக்கட்டுவதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி ஏற்படுகின்றது, நயினாதீவுக்கு வரும் சுற்றுலாப் படகுகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து படகு கட்ட இடம் வழங்கப்படுகின்றது என்று மக்கள் தெரிவித்தனர்.

இதற்குக் கடற்படையினர், ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறைமுகத்திலிருந்து நேரடியாக நயினாதீவு துறைமுகத்துக்குச் செல்வதற்கு எந்தத் தடையுமில்லை என்றும் அங்கு படகுகள் கட்டுவதற்கு உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

(த-5)

# ஓட்டோவை மோதியது ஹைஏஸ் பொலிஸார் உட்பட மூவர் காயம்

## யாழ்.வேம்படிச் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

தனியார் தொலைபேசி நிறுவனம் ஒன்றின் ஹைஏஸ் வாகனம் எதிரே வந்த ஓட்டோவுடன் மோதியதில் ஓட்டோ சாரதி உட்பட மூவர் கடுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்.வேம்படிச் சந்தியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ். பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் அவரது மனைவியையும் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து ஏற்றிக் கொண்டு ஓட்டோ சென்று கொண்டிருந்தபோது யாழ். வேம்படிச் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஹைஏஸ் வாகனம் மோதியதில் ஓட்டோ மறுபக்கம் தூக்கி வீசப்பட்டது.

இதனால் ஓட்டோ சாரதியான குருநகர் ராஜேந்திரா வீதியைச் சேர்ந்த ஆம்ஸ்ரோங் இராஜசூரி (வயது-40) ஓட்டோவில் பயணித்த பொலிஸ் உத்தியோகத்தரான அத்தபத்து (வயது - 41) அவரது மனைவியான குமாரசூரி (வயது-40) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த மூன்று பேரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் பொலிஸ் உத்தியோகத்தரும் அவரது மனைவியும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-14)

## நாய் குறுக்கே பாய்ந்ததில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

வீதியின் குறுக்கே நாய் பாய்ந்ததில்மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கீழே விழுந்து படுகாயடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கோண்டாவில் டிப்போவீதியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

உரும்பிராயைச் சேர்ந்த ஐங்கரன் செல்வநாயகம் (வயது-32) என்பவரே காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-14)

## ஆஸி. அகதிகள் குறித்து கடற்படை விசாரணை

கொழும்பு,ஏப். 12

இலங்கையர்கள் 66 பேர் ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பரப்பைச் சென்றடைந்தமை தொடர்பாக இலங்கைக் கடற்படைப் புலனாய்வுப் பிரிவு தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது எனக் கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

அடைக்கலம் கோரும் நோக்கம் கொண்ட 66 பேர் நிரம்பிய ஒரு மீன்பிடிப் படகே கண்காணிப்பைக் கடந்து ஆஸ்திரேலியாவின் பிரதான நிலப்பரப்பிலுள்ள துறைமுகம் ஒன்றை சென்றடைந்துள்ளது.

ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களை ஏற்றிச் சென்ற இந்தப் படகு இலங்கையிலிருந்து வந்தது என மேற்கு ஆஸ்திரேலியா பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இது பேர்த் நகரிலிருந்து வடக்கில் 425 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒரு துறைமுகத்தை ஆறு வார கடல் பயணத்தின் பின் சென்றடைந்தது என்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கைக் கடற்படையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனக் கடற்படைப் பேச்சாளர் கூறினார்.

(த)

## அமெ. தூதுக் குழுக்கள் இலங்கை வர ஏற்பாடு

கொழும்பு,ஏப் 12

அமெரிக்காவின் ஆசிய பசுபிக் நிகழ்ச்சித் திட்டத்தை ஆதரிப்பதாக இலங்கை அரசு உறுதியளித்துள்ளதைத் தொடர்ந்து அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தவர்களைக் கொண்ட இரு தூதுக் குழுக்கள் இந்த வருடமும் அடுத்த வருடமும் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளன.

**இந்த வருடமும் அடுத்த வருடமும் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளன.**

ஆசிய பசுபிக் நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கை ஆதரிக்கப் போவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் சாலிய விக்கிரமசூரிய அமெரிக்க அரசுக்கு அறிவித்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

இதன்படிக்கு அமெரிக்க காங்கிரஸின் தூதுக் குழுவினரின் இரு பயணங்களையும் ஒழுங்குசெய்யும்பொறுப்பு தொம்ஸன் ஆலோசனைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கலாநிதி டி சில்வா இது தொடர்பான ஆவணங்களை ஊடகங்களுக்குக் கொடுத்தார்.

இந்தச் சேவைகளுக்காக தொம்ஸன் ஆலோசனைக் கம்பனிக்கு 800,000 அமெரிக்க டொலர் கட்டணம் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் மத்திய வங்கி தொம்ஸன் ஆலோசனைக் குழுவுடன் ஓர் ஒப்பந்தத்தை செய்துள்ளதை ஆதாரப்படுத்தும் ஆவணங்களையும் ஹர்ஷடி சில்வா வெளியிட்டார். (த)

## வீதியைக் கடந்த சிறுவனை மோதித் தள்ளிய ஓட்டோ

யாழ்ப்பாணம்,ஏப்.12

வீதியைக் கடந்த சிறுவனை எதிரே வந்த ஓட்டோ மோதியது. இதனால் அந்த நான்கு வயதுச் சிறுவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் அச்சுவேலி ஆலயத்தடிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த டி.டானியஸ் போல் (வயது-4) என்ற சிறுவன் முகம், மற்றும் கை கால்களில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

(த-14)

# அதிவேக வீதியில் விபத்து; ஜீப்பில் சென்ற வர்த்தகர் சாவு

கொழும்பு,ஏப் 12

தெற்கு அதிவேகப் பாதையில் அதி சொகுசு ஜீப் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த வர்த்தகர் உயிரிழந்தார். அவரின் மனைவி மற்றும் மகள் படுகாயமடைந்தனர்.

அந்த வாகனத்துக்குள் சிக்கிக் கொண்ட அவரின் மகன் மற்றும் செல்லப் பிராணியான நாய்க்கு எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை. இவர்கள் மஹரகமவில் இருந்து விடுமுறையைக் கழிப்பதற்காக தங்காலைக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



வாகனத்தைச் செலுத்திச் சென்ற குறித்த வர்த்தகர் இருக்கைப்பட்டியை அணியாமல் சென்றார் எனவும் குறித்த வாகனம் சுமார் 50 அடி உயரத்துக்கு மேலெழும்பி கீழே விழுந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினர்.

தெற்கு அதிவேகப் பாதையில் 14 ஆவது மைல் கல்லுக்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் வாகனத்தைச் செலுத்திச்சென்ற குறித்த வர்த்தகர் வாகனத்திலிருந்து வெளியே வீசப்பட்டு அதே வாகனத்தின் கீழ் சிக்கி நசியுண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைபாதை வியாபாரிகளால் கிராமங்கள் ஆக்கிரமிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 12

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.குடாநாட்டின் கிராமப்புறங்களையும் நடைபாதை வியாபாரிகள் முற்றுகை யிட்டு வீதியோரங்களில் புடைவை விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நடைபாதை வியாபாரிகளின் இத்தகைய நடவடிக்கைகள் தமது புத்தாண்டு வியாபாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக குடாநாட்டு புடைவை நிலைய வர்த்தகர்கள் விசனம் தெரிவித்தனர்.

தென்பகுதியில் இருந்து வாகனங்களில் உடுபுடைவைகளுடன் வருகை தரும் நடைபாதை வியாபாரிகள் குடாநாட்டில் கிராமப்புறங்களில் பந்தல் அமைத்தும் மற்றும் நடமாடும் வாகனங்கள் ஊடாக புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகமான இடங்களில் மக்கள் உடுபுடைவைகளின் விலை குறைவை பார்த்து குவிந்து நின்று பெற்றுச் செல் கின்றனர். இவ்வாறு வாங்கிச் செல்லும் உடுபுடைவைகளால் மக்கள் சிலர் ஏமாற்றமடைந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது. (வ-17)



கொழும்புத்துறை மேற்கில் அமைக்கப்பட்டு வரும் குடி தண்ணீர் விநியோகத்துக்கான தாங்கியின் கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் இடம்பெற்று வருகின்றன.யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் இந்தக் குடிதண்ணீர் விநியோக நீர்த் தாங்கி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-17)

## பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு யாழ்.நகரில் நிரந்தரத் தரிப்பிடங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்.நகரில் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு நிரந்தரத் தரிப்பிடங்கள் நகரின் பிரதான வீதிகளில் ஒதுக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் ராஜ்குமார் தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபையின் மேற்பார்வையில் நகரின் பிரதான வீதிகளில் ஓட்டோக்கள் தரித்து நிற்பதற்கான தரிப்பிடங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன.

சங்கத்தில் பதிவு செய்யப்படாத ஓட்டோக்கள் வீதிகளில் கண்ட கண்ட இடங்களில் தரித்து நின்று மக்களை ஏற்றிச் செல்கின்றன.

சங்கத்தில் பதிவு செய்து சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் கண்ட கண்ட இடங்களில் தரித்து நிற்க முடியாது.

குறிப்பாக நகரின் வைத்தியசாலை வீதி, பஸ்தரிப்பிடத்தின் வைரவகோயிலடி, சத்திரச்சந்தி, வேம்படிச் சந்தி உட்பட முக்கிய பிரதான வீதிகளில் ஓட்டோக்களுக்கான தரிப்பிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட ஓட்டோக்கள் தற்போது சேவையில் ஈடுபடுகின்றன.

குறித்த ஓட்டோக்கள் எங்கு தரித்து நிற்கவேண்டும் என்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இதேவேளை பதிவு செய்யாது சேவையில் ஈடுபடும் ஓட்டோ உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். (ம-14)

## சொட்டு நீர்ப்பாசனம் மூலமான மிளகாய்ச் செய்கை நல்ல விளைச்சல்

யாழ்ப்பாணம்,ஏப். 12

நாரந்தனைப் பகுதியில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் நல்ல விளைச்சலை பெற்றுள்ளார்.

ஐந்நூறு கண்டு பரப்பளவில் இவர் இந்த மிளகாய் செய்கையில் ஈடுபட்டார். எம்.ஜ.கிறீன் இனத்தைக் கொண்ட இந்த மிளகாய்ச் செய்கைக்கு இவர் சூரிய மின் கலத்தின் உதவியுடன் சொட்டு நீர்ப்பாசனம் செய்துள்ளார்.

இந்த விவசாயியால் மேற்கொள்ளப்பட்ட மிளகாய்ச் செய்கையின் அறுவடை யின் போது அந்த மிளகாயைச் செத்தலாக்கி விதைக்கு பயன் படுத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று கூறப்பட்டது.(ம-17)

# நயினாதீவுத் துறைமுகத்தில் நெடுந்தீவுப் படகுகள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

*நெடுந்தீவில் இருந்து வரும் பயணிகள் படகுக்கு நயினாதீவுப் படகு உரிமையாளர்கள் துறைமுகப் பாலத்தில்இடமளிப்பதில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.*

நெடுந்தீவில் இருந்து மிகக் கூடுதலான மக்களுடன் வரும் படகுகள் குறிகட்டுவான் துறைமுகத்தில் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படகுகள் காரணமாக துறை முகத்தில் அணைக்க முடியா மல் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தில் நிறுத்தப் பட்டிருக்கும் ஏனைய படகுகள் அங்கிருந்து வெளியேறிய பின்னரே நெடுந்தீவில் இருந்து வரும் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் அதுவரை பயணிகளுடன் கடலில் சுற்றிக் கொண்டிருக்க வேண்டிய நிலை எற்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் பயணிகள் சில சமயங்களில் பஸ்சைத் தவற விட வேண்டியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

துறைமுகத்தில் நிற்கும் அதிகாரிகள் கூட இது தொடர்பில் கவனம் எடுப்பதில்லை எனவும், நெடுந்தீவுப் படகுகள் துறைமுகத்திற்கு வரும் போது ஏனைய படகுகள் அதற்கு வழி விட வேண்டும் என்ற விதிமுறை கவனிக்கப் படுவதில்லை எனவும் கூறப் படுகின்றது.

இது தொடர்பாக குறிகட்டுவான் துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் அண்மையில் கலந்துரையாடப்பட்டு நெடுந்தீவுப் படகுகள் வரும் போது பாலத்தின் மேற்குப் பகுதியில் வேறு படகுகள் எதுவும் நிறுத்தக் கூடாதென முடிவெடுக்கப்பட்டிருந்தது.

எனினும் எடுத்த முடிவை நடைமுறைப் படுத்த அதிகாரிகள் விரும்புகிறார்கள் இல்லை எனவும், இந்த நிலைமை நீடித்தால் நெடுந்தீவுப் படகுகளை குறிகாட்டுவானில் நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-7)

## இருதயத்தில் கிருமி இளம் தாய் சாவு

யாழ்ப்பாணம்,ஏப். 12

இருதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டதால் 2 நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இளம் தாய் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிந்துள்ளார்.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த எட்டு மாதக் குழந்தையின் தாயாரன மோகனதாஸ் அஸ்வினி (வயது-20) என்பவர் ஏற்க னவே இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்.

இந்த நிலையில் இருதயத்தில் கிருமி தொற்று ஏற்பட்டதன் விளைவாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந் தார்.

எனினும் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று உயிரிழந்தார். இந்த மரணம் தொடர்பாக விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி என்.பிறேம் குமார் மேற்கொண்டார். (ம-14)

## கைதடி முதியோர் இல்லத்தில் 179 முதியோர்கள் பராமரிப்பில்

யாழ்ப்பாணம்,ஏப்.12

கைதடி அரச முதியோர் இல்லத்தில் இதுவரை 179 முதியோர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களில் 105 பேர் ஆண் முதியோரும் 74 பேர் பெண் முதியோரும் உள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி,மார்ச் ஆகிய மாதங்களில் 3 பேரும் ஏப்ரலில் 12 நாள்களில் 3 பேரும் இணைக் கப்பட்டுள்ளனர்.

இவர்கள் எவரது பராமரிப்பும் இன்றி இருந்தமை இனங்காணப்பட்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் இணைக் கப் பட்டவர்களாவர்.

இதேவேளை இல்லத்தில் தங்கியிருந்த ஒன்பது முதியோர் அவர்களின் உறவினர்களுடன் இணைக்கப் பட்டுள்ளனர்.

இந்த மாதம் இல்லத்தில் இணைக்கப்பட்ட முதியோர்களில் ஓர் ஆண் முதியவர் தானாக வந்து இல்லத்தில் இணைந்து கொண்டவர்.

> பராமரிப்பு இன்றி நோய்வாய்ப்பட்டிருந்த இவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே இவர்கள் இல்லத்தில் இணைக்கப் பட்டனர்

ஏனைய இருவரும் வடமராட்சி கரவெட்டிப் பிரதேசத்தில் பராமரிப்பாளர் எவரும் இன்றி இருந்த நிலையில் பொது மக்களால் இல்லத்தில் சேர்க்கப்பட்டவர்களாவர்.

பராமரிப்பு இன்றி நோய் வாய்ப்பட்டிருந்த இவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே இவர்கள் இல்லத்தில் இணைக்கப் பட்டனர் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (ம-14)

# உடுத்துறை ம.வியில் திருத்தப்பட்ட கட்டடங்கள் கையளிக்கப்பட்டன

வடமராட்சி,ஏப்.12

உடுத்துறை மகா வித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதும், புனரமைப்புச் செய்யப்பட்டதுமான எட்டுக் கட்டடங்கள் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்திடம் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினால் ஒப்படைக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் வி.புவனேந்திர ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் செல்வி டோறா, மற்றொரு பணிப்பாளரான செல்வி டெனி ஆகியோர் வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தனர்.

நிகழ்வில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்து கொண்டார்.

இவ் வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கான ஆண், பெண் விடுதிகள், அதிபர் விடுதி, மனையியல் ஆய்வுகூடம் ஆகிய நான்கு கட்டடங்களும் புதிதாகவும் ஏனைய வகுப்பறைகள் கொண்ட நான்கு கட்டடத் தொகுதியும் புனரமைப்புச் செய்து கையளிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# ஆண் பனைகளை மட்டும் சீவலுக்குப் பயன்படுத்துக

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 12

ஆண் பனைகளை மட்டுமே சீவல் தொழிலுக்குப் பயன்படுத்த வேண்டும். பெண் பனைகளைச் சீவல் தொழிலுக்குப் பயன்படுத்தும் பட்சத்தில் பணம், பொருள் உற்பத்தியில் வீழ்ச்சி நிலைமை ஏற்படும்.

பனை அபிவிருத்திச் சபை யின் தலைவர் பசுபதி சீவரெத் தினம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

கடந்த வருடம் குடாநாட்டில் பனம்பழத்தின் உற்பத்தி மிகவும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. காலநிலை வேறுபட்டால் தான் இதில் வீழ்ச்சி நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் பெண் பனைகளையே சீவல் தொழிலாளர்கள் அதிகம் பயன் படுத்துகின்றனர்.

இது தவிர்க்கப்பட வேண்டியது அவசியம்.

இந்த ஆண்டில் பனம் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியாளர்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை நுங்கு வெட்டுவதும் குறைக்கப்பட வேண்டும். [illegible] வெட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் - என்று கூறினார். (ம-17)

# 28, 424 பழ மரக்கன்றுகள் புது வருட தினத்தில் நடுகை

தென்மராட்சி,ஏப்.12

யாழ்.மாவட்டத்தில் வாழ்வு எழுச்சித் திட்டத்தின், கீழ் 28 ஆயிரத்து 424 பழ மரக்கன்றுகள் புது வருடத் தினமான நாளை மறுதினம் சுப வேளையில் காலை 7.05 மணிக்கு நடப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் கிராம அலுவலர் ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தலா இரண்டு பழ மரக்கன்றுகளே நடப்படவுள்ளன.

தென்மராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்பட்ட தேசி, கொய்யா, மாதுளை, றோஸ்,200 ஆப்பிள் ஆகிய பழ மரக் கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும், 20 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு பழப் பயிர்களையும் ஏனைய நீண்ட காலம் பயன்தரக் கூடிய பழ மரக்கன்றுகளையும் வாழ்வின் எழுச்சித் திட்டத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 200 குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பழ மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 தமிழர்களை...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

மேலும் கூறினார்.

புகலிடம் தேடி வருபவர்களுக்கு அகதி அந்தஸ்து அளிக்கும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள ஐரோப்பிய நாடுகள் மற்றும் பாதுகாப்பான இதர நாடுகளிடம் இவர்களை அகதிகளாக ஏற்கும்படி தாங்கள் மீண்டும் விண்ணப்பிக்கப் போவதாகவும் அகதிகளுக்கான ஐ.நா தூதரக அதிகாரி தனது பதிலில் தெரிவித்துள்ளதாகவும் கீதார்த்தனன் தெரிவித்தார்.

தற்போது டுபாயில் தமது எதிர்காலம் கேள்விக் குறியாக உள்ள நிலையில் இருக்கும் இவர்களில் சிலர் இறுதிப்போர் நேரத்தில் இலங்கை அரசிடம் சரணடைந்து, பின்னர் முகாம்களிலிருந்து தப்பித்து இந்தியா சென்று தஞ்சம் புகுந்திருந்தார்கள் எனவும் கீதார்த்தனன் தெரிவித்துள்ளார். (த)

## 8 ஆயிரம்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

இலங்கையில் போர் முடிவடைந்த பின்னர் தான் இவ்வாறு அதிகமாக இலங்கை அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ளனர்.

2008ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு வந்த இலங்கை அகதிகளின் எண்ணிக்கை வெறும் 16 தான். அதே சமயம் 2012 ஆம் ஆண்டில்தான் அதிகபட்சமாக 6,428 பேர் அகதிகளாக வந்துள்ளனர் என்று அவர் கூறியுள்ளார். (த)

## இந்திய அரசு...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

பட்டுள்ள பிரதேசங்களின் போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கும், இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவதற்கும் அவர்களுக்குரிய வாழ்வாதாரத்துக்கும் இந்திய அரசு தொடர்ந்தும் உதவி வழங்கும்.

வடபகுதியில் அழிந்து போயுள்ள ரயில் பாதைகளை அமைப்பதிலும், காங்கேசன் துறைமுகத்தை மீளக்கட்டியெழுப்பவும் உதவியுள்ள இந்திய அரசு, கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையைப் போன்று தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையையும் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்.

இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் நல்ல முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. குருநகர் மீன் வலை உற்பத்தி தொழிற்சாலை, பனை ஆராய்ச்சி நிலையம் என்பவற்றை மேம்படுத்த உதவிகள் வழங்கப்படும்- என்றார். (த-5-6)

## 13ஆவது ...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

ஏற்படுத்துவோம் என்று இலங்கை ஜனாதிபதி இந்தியப் பிரதமரிடமும் மற்றவர்களிடமும் தெரிவித்ததை இந்தியக் குழுவினர் தம்மிடம் சுட்டிக்காட்டினர் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார்.

அந்தச் சட்டத் திருத்தம் ஏன் அர்த்தமற்றது என்பதைத் தாம் இந்தியக் குழுவினருக்கு எடுத்துக் கூறினர் எனவும் தெரிவித்தார். அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ள வகையில் நடைமுறைபடுத்துவதற்கு இலங்கையின் அரசமைப்புச் சட்டம் மாற்றிய மைக்கப்பட வேண்டும் எனவும் கூட்டமைப்பு அவர்களிடம் கூறியதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

இந்தப் பேச்சின் போது வடக்கில் இடம் பெற்று வரும் இராணுவ ஆக்கிரமிப்பு, காணி அபக ரிப்பு, படைகளின் பிரசன்னம் ஆகியன குறித்து கூட்டமைப்பு இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் விரிவாக எடுத்துரைத்ததாகவும் சுமந்திரன் மேலும் கூறினார். (த)

## தென்னிந்தியா...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

போன்றே நேற்று இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டமும் இடம்பெற்றது.

(த)

## 19 இந்தியா...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

மீனவர்கள் 53 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் நெடுந்தீவில் கைது செய்யப்பட்டிருந்த 34 மீனவர்களும் 3 தினங்களில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

எஞ்சிய 19 மீனவர்களும் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் நீதிமன்றில் நேற்று இராமேஸ்வரம் மீனவர்கள் 19 பேரும் முற்படுத்தப்பட்டனர். இதன்போது இவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளுக்காகவே கடல் எல்லையைத் தாண்டினார்கள் என்றும், வேறு நோக்கத்துக்காக வரவில்லையென்றும் மன்றில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 19 மீனவர்களும் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட 19 மீனவர்களும் நேற்று மாலை இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(த-5-12)

## மோசமான...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

கோடியாக்கரையைச் சேர்ந்த மீனவர்கள் வழமை போன்று மீன்பிடி நடவடிக்கைக்காகக் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே, இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் காரணமாக 4 இந்திய மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இலங்கைக் கடற்படையினரே இவ்வாறு இந்திய மீனவர்களைத் தாக்கியதாக இந்திய மீனவர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. எனினும் இலங்கைக் கடற்படையினர் இந்தக் குற்றச் சாட்டை மறுத்துள்ளனர். (த-5)

## இராணுவத்தினர்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்த இராணுவம் எந்த மனச்சாட்சியோடு பொய்களைக் கூறுகின்றது என்றும் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

2009 இல் வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின் இறுதி நாட்களில் பொது மக்கள் இருந்த பகுதிகளை நோக்கி இலங்கை இராணுவம் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியது என்ற குற்றச்சாட்டிலிருந்து இராணுவத்தை விடுவித்து இராணுவ நீதிமன்றம் மேலும் ஒரு புதிய அறிக்கையை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றத்தின் விசாரணைகள் தொடர்பான அறிக்கையின் முதல் பகுதி நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் கையளிக்கப்பட்டது.

இராணுவ நீதிமன்றுக்கு வழங்கப்பட்ட சாட்சியங்களின்படி தமிழீழ விடுதலைப்புலிகள், பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தியும் பொதுமக்கள் மத்தியில் கனரக ஆயுதங்களை வைத்துக்கொண்டும், வயதானவர்கள், சிறுவர்கள் ஆகியோரைப் படைகளில் சேர்த்தும் அவ்வாறு அவர்களை அபாயத்துக்குட்படுத்தியும் பல்வேறு குற்றங்களை புரிந்துள்ளனர் என்பது தெரியவந்துள்ளதாகவும் அந்த விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைவாகப் பொதுமக்கள் தரப்பில் சேதங்கள் எதுவும் இல்லாத வகையில் போர் நடத்தப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இராணுவ நீதிமன்றம் வந்துள்ளது.

மேலும் சர்வதேச சமூகமானது புலிகள் நடத்திய போர்க்குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தவறிவிட்டது என்று இராணுவ நீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இராணுவ நீதிமன்றத்தின் இந்த அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் நேற்று மாலை 'உதயன்'வினவியது.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

இறுதிப் போர் சம்பவங்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றமானது இரண்டாவது தடவையாக மாபெரும் பொய்களைக்கூறி அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை இராணுவத்தைப் பாதுகாக்கும் நோக்குடனும், உலகத்தைத் திசைதிருப்பும் நோக்குடனுமேயே வெளியிடப்பட்டுள்ளது.

இராணுவ நீதிமன்றம் முதலாவது தடவையாக வெளியிட்டுள்ள அறிக்கையில் காணாமல்போனவர்கள் என எவரும் இல்லை எனக் குறிப்பிட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இறுதிப் போரில் 5 ஆயிரம் மக்கள்தான் கொல்லப்பட்டனர் என்று அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேயசிங்க தெரிவித்திருந்தார். அதேவேளை, வன்னியில் நடத்தப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் மூலம் 7 ஆயிரம் மக்கள் மட்டும் பலியாகினர் என்று தெரியவந்துள்ளது எனக் குறிப்பிட்ட பாதுகாப்பு அமைச்சு அவற்றில் விடுதலைப் புலிகளே அதிகம் உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறு இறுதிப் போர் சம்பவங்கள் தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை இராணுவ நீதிமன்றமும், அரச நாடாளுமன்ற உறுப்பினரும், பாதுகாப்பு அமைச்சும் ஏற்கனவே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இறுதிப் போரின் இறுதி நாட்களில் பொதுமக்கள் மீது இராணுவத்தினர் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டிலிருந்து இராணுவத்தை விடுவித்து இராணுவ நீதிமன்றம் தனது இரண்டாவது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகளினாலேயே பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனவும், சர்வதேச சமூகமானது விடுதலைப் புலிகளின் போர் மீறல்களை தடுத்து நிறுத்தத் தவறிவிட்டது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இராணுவ நீதிமன்றத்தின் இந்த அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். அத்துடன் அந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

உலகத்தைத் திசைதிருப்பவே இந்தக் குற்றச்சாட்டுக்களை இராணுவ நீதிமன்றம் சுமத்தியுள்ளது. அத்துடன் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தினரைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்த அறிக்கை நன்கு திட்டமிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை நேர்மையற்றது; நீதியற்றது; சர்வதேசத்தின் பார்வைக்கு பிரயோசனமற்றது. இது இராணுவத்தின் மற்றுமொரு பொய் முகத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதிப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கொன்று குவித்த இராணுவம் எந்த மனச்சாட்சியோடு பொய்களைக் கூறுகின்றது? பொய்களைக் கூறி தப்பித்துக் கொள்ள முடியுமா?

எனவே, இராணுவ நீதிமன்றம் இந்த அறிக்கையை குப்பைத் தொட்டியில் போடட்டும்.

இதேவேளை, இலங்கை அரச தரப்பினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஒன்றைக் கேட்க விரும்புகின்றோம். அதாவது தங்கள் படைத்தரப்பினர் இறுதி யுத்தத்தில் குற்றமிழைக்கவில்லை என்றால் சர்வதேச விசாரணைக்கு நீங்கள் தயங்குவதேன்?

எனவே, பெரும்பாலான உலக நாடுகள் எதிர்பார்க்கும் சர்வதேச விசாரணை இறுதிப் போரில் நடந்த சம்பவங்களை வெளிக் கொணரும். அதனூடாகவே நீதியைப் பெற்றுக் கொள்ளலாம். இதனை [illegible] அடுத்தகட்ட நடவடிக்கையை எடுக்க வேண்டும் - என்று தெரிவித்தார் சுரேஷ். (த-சி)

## காணியற்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காணி ஆணையாளரினால் 2013/1 சுற்றறிக்கை வெளியிடப்படவிருந்தது. இதில் காணியற்றவர்களுக்குக் காணிகளை வழங்கும் நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தில், அமைச்சர் ஒருவரின் தலையீட்டினால், காணியற்றவர்களுக்குக் காணி வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்காக ஜனாதிபதி விசேட செயலணியினால் காணி வழங்கல் தொடர்பான சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் இனங்களுக்கிடையில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

முள்ளியவளையில், மக்கள் தங்களுக்குக் காணிகள் வழங்கிய பின்னரே ஏனையோருக்குக் காணிகளை வழங்குமாறு போராட்டமும் நடத்தியிருந்தனர்.

இந்த நிலையில் 2013/1 சுற்றறிக்கைக்கு மேலதிகமாகக் காணியற்றவர்களுக்கு காணி வழங்கும் நடவடிக்கையை முன்னெடுப்பது தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியிடுவதற்குக் காணி ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(த-5)

## கைத்தொலை..

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

25க்கும் மேற்பட்ட பயணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் மினி பஸ் ஒன்றின் சாரதி கைத் தொலைபேசியில் உரையாடியபடியே பஸ்ஸைச் செலுத்தியமையாலேயே இந்த விபத்து நேர்ந்ததாக பஸ்ஸில் இருந்த பயணிகள் தெரிவித்தனர்.

இதன்போது அவர் முன் வீதியைக் கவனிக்கத் தவறிவிட்டதால் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை பஸ் மோதியது. அதே வேகத்தில் தனியார் பாடசாலை ஒன்றின் மதிலையும் பதம்பார்த்தது. இதன்போது பஸ்ஸின் ஒருபக்கக் கண்ணாடிகள் நொருங்கின. அந்தப் பக்க ஜன்னல்களும் பலத்த சேதத்துக்குள்ளாகின.

இதன் போது பஸ்ஸில் பயணித்த 25 இற்கும் மேற்பட்ட பயணிகள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். எனினும் இரண்டு பயணிகள் பலத்த காயங்களுக்குள்ளாகினர்.

இதேவேளை, மினிபஸ் பந்தாடிய மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐந்து வயதுச் சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களான குலசேகரம் இளங்குமரன்(வயது-35), இளங்குமரன் சர்மினி (வயது-31), இளங்குமரன் அக்யுன்(வயது-5) ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பஸ்ஸில் பயணித்த 2 பேர் காயங்களுக்கு சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினர்.

பஸ்ஸில் பயணித்த இன்னும் சில பயணிகள் சிறுகாயங்களுக்கு உள்ளாகி கோப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த விபத்து இடம்பெற்ற உடனேயே சாரதியும், நடத்துநரும் தப்பியோடிவிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும், ஒன்றரை மணித்தியாலங்களின் பின்னரே அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். தற்போது இது தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ங-14-17-ரி)

## ஐ.நாவிலிருந்து...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

முயற்சிக்கின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் கேள்வி எழுப்பியது.

ஐ.நாவின் சிறப்புரிமையைப் பெறும் நாடு என்ற வகையில் அதற்குப் பொறுப்புக் கூறுவதற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஐ.நாவில் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கிறோம் என அரசு கூறுவது பேராபத்தைத் தோற்றுவிக்கும் எனத் தெரிவித்த ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் விஜேவர்த்தன, ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளிடம் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நாம் நடைமுறைப்படுத்தத் தயார் என அரசு கூறவேண்டும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு முழுமையாக நிராகரிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றில் திட்டவட்டமாக அறிவித்தார். இது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் அறிவிப்பாகும்.

ஐ.நாவில் அங்கத்துவமுடைய நாடு என்ற வகையில் அதன் சிறப்புரிமையைப் பெறும் நாம், அதற்குப் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளோம். ஐ.நாவில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையொன்று பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்படுமாயின், அதனை நாம் ஏற்கவேண்டும்.

ஐ.நா. தீர்மானத்தை நிராகரிப்பதனூடாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைகளையும் அரசு நிராகரிக்கிறதா? இவ்வருடம் செப்ரெம்பர் மாதத்துக்குள் வடக்குத் தேர்தல் நடத்தப்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது. அதையும் அரசு நிராகரிக்கிறதா?

இவை அனைத்தையும் அரசு நிராகரிப்பதனூடாக இலங்கையில் மனித உரிமைகள், ஜனநாயகம், நீதித்துறைச் சுயாதீனம் முதலானவை பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் அரசு நிராகரிக்கிறதா?

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு நாம் முகம் கொடுத்தே ஆகவேண்டும்-என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மறுவளமாகச் சுற்றுவதற்கு தயங்கும் அரச இயந்திரம்

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது, மக்கள் தங்கியிருந்த பிரதேசங்களை நோக்கி அரச படைகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தின என்று அனைத்துலக மட்டத்தில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து இராணுவம் தன்னைத்தானே விடுவித்துள்ளது. இரண்டாவது தடவையும் அது சார்ந்த புதிய அறிக்கை ஒன்றை இராணுவ நீதிமன்றம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இராணுவ நீதிமன்றம் முதல் தடவை நடத்திய விசாரணைகள் தொடர்பில் அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் பலவும் சந்தேகமும் ஆட்சேபமும் வெளியிட்டதைத் தொடர்ந்தே, இரண்டாவது முறையாகப் புதிய அறிக்கை பாதுகாப்புச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

எதுவோ, எப்படியோ பொதுமக்கள் தரப்புக்கு சேதங்கள் இல்லாத வகையிலேயே தாக்குதல் நடத்தப்பட்டன என்று ''கனகச்சிதமான'' தீர்ப்பை வழங்கியுள்ளது இராணுவ நீதிமன்றம்.

அத்தோடு, விடுதலைப் புலிகள் நடத்திய போர்க்குற்றங் களைத் தடுத்து நிறுத்த அனைத்துலக சமூகம் தவறிவிட்டது என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

இறுதிப்போரின் போது, சுமார் 40 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டனர், படையினரால் பிடிக்கப்பட்ட புலிப் போராளிகள் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என்று படையினர் மீது குற்றச் சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன. இக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க வேண்டும் என்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

போர்க்குற்றம் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வந்த வேளையிலேயே, அரசு மூடிய அறைக்குள் விசாரணை நடத்தியமை வெளிப்பட்டுள்ளது, வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விசாரனை முறை, நீதியானதாகவும் நியாயமானதாகவும் இருக்கும் என்று எதிர் பார்க்க முடியாது.

போர்க் குற்றச் சாட்டுகள் குறித்து உள்நாட்டில் நம்பகத் தன்மையுள்ள, நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐ.நா.தீர்மானம் கூறுகிறது. ஆனால் மூடிய அறைக்குள் இராணுவம் மீதான குற்றச்சாட்டுகளை இராணுவ அதிகாரிகளே விசாரணை செய்துள்ளனர். இது வெறும் ஒப்பியாசாரத்துக்கான ஏற்பாடே என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாதே.

இன்னும் சில மாதங்களில் இலங்கையின் கொலைக் களங்கள் நான்காவது பகுதியை 'சனல்–4' வெளியிடும் என்று எதிர் பார்க்கப்படுவதால் 'சனல்–4' தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து விசாரணை செய்ய வேண்டிய நிலைக்கு இராணுவ நீதிமன்றம் தள்ளப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மொத்தத்தில், 2009 ஆம் ஆண்டு ஆரம்பித்து 'சனல்–4' இதுவரை இலங்கைப் போர் தொடர்பாக மூன்று காணொலி களை வெளியிட்டு விட்டது. அவை போலியானவை என்று இலங்கை அரசு கூறினாலும் அதனை நிரூபிக்க முடியவில்லை என்பதே இன்றைய நிலை. அதாவது அவை போலியானவை என்பதை அரசால் நிரூபிக்க முடியவில்லை.

இராணுவ நீதிமன்றம் யார், யாரை எல்லாம் விசாரித்தது என்ற விவரமும் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையினரில் படைத்துறையைச் சேர்ந்தவர்களே அனேகர் என்று தெரியவந்துள்ளது.

அதே வேளை பொது மக்கள் தரத்தில் சேதங்கள் இல்லாத வகையில் போர் நடத்தப்பட்டுள்ளதாகவும் இராணுவ நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட விடுதலைப்புலிப் போராளிகள் விசாரணை எதுவும் இன்றிக் கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுக்கள் குறித்தும் இராணுவ நீதிமன்றமே விசாரணை நடத்தும் என்றும் கூறப்படுகின்றது.

எது எப்படியோ, இலங்கை அரசு மீதான குற்றச் சாட்டுக்களை அனைத்துலகத் தரம் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நிறுவிப் பகிரங்க விசாரணை நடத்த வேண்டும். அப்போதே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும்.

அது வழி நின்று செயற்பட அரசு ஏன் முன் வரக்கூடாது? அனைத்துலகப் பிரச்சினை ஆகிவிட்ட இது விடயத்திலும், ஏனைய விவகாரங்களில் நடந்து கொள்வது போல் ஒழித்துப் பிடித்து விளையாட முயல்வது பொருத்தமா?

அத்தகைய போக்கு ''பூமராங்'' போன்று மீண்டும் அரசின் மடியிலேயே வந்து விழும் என்று ஏன் மறுவழமாகச் சிந்திக்கக் கூடாது........?

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 200 கோடி ரூபா எரிபொருள் கடன்

## மின்சார சபை செலுத்தியது; மீளவும் எரிபொருள் விநியோகம்

கொழும்பு,ஏப். 12

பெற்றோலியக் கூட்டுத்தாப னத்திடம் இருந்து பெறப்படும் எரிபொருள் தேவைகளுக்கு ஏற் கனவே செலுத்தப்பட வேண்டி யிருந்த நிலுவைத் தொகையான 200 கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளது என்று மின் சார சபையின் தலைவர் டபிள்யூ.பீ. கணேகல தெரிவித்துள்ளார்.

இந்த நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்காக மக்கள் வங்கியி டமிருந்து கடன் தொகை பெறப் பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய கடந்த வெள்ளிக் கிழமையில் இருந்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார சபைக்கு மீளவும் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்தது. பணம் செலுத்தினால் மட்டுமே எரிபொருள் விநியோகம் என்ற பெற்றோலியக் கூட்டுத்தாப னத்தின் புதிய தீர்மானத்தால் மின்சார சபைக்கான எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக கெரவலப் பிட்டிய மின் உற்பத்தி நிலையத் தின் மின் உற்பத்திச் செயற்பாடுகள் பத்துத் தினங்களாக நிறுத்தி வைக் கபட்டிருந்தன.

இவ்வாறு தற்காலிகமாக கெரவ லப்பிட்டிய மின் உற்பத்தி நிலை யம் நிறுத்தி வைக்கப்பட்டதன் காரணமாக களனிதிஸ்ஸ ஏ.ஈ.எஸ் டீசல் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து மின்சாரத்தைப் பெறவேண்டி நேர்ந்திருந்தது. அது தொடர்பான 150 கோடி ரூபா மேலதிகச் செல வினத்தை மின்சார சபை ஏற்க வேண் டியிருந்தது. கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் மீள் இயங்க ஆரம்பித்ததுடன் களனி திஸ்ஸ ஏ.ஈ. எஸ் மின்சார உற்பத்தி நிலை யத்தின் மின் உற்பத்திச் செயற் பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மின்சார சபை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற் றுக் கொள்ளும் எரிபொருளுக்கு மாதாந்தம் ஆயிரத்து 300 மில்லி யன் ரூபாவைச் செலுத்தி வந் துள்ளது. அவ்விதமான ஒழுங்கு முறை மேற்கொள்ளப்பட்டு வந் துள்ள நிலையிலேயே கூட்டுத்தா பனம் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தியிருந்தது என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

# இலங்கை அரசு ஏற்கும் வகையில் அரசியல் தீர்வை முன்வைத்து வலியுறுத்துக

## இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் ஆனந்தசங்கரி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.12

இலங்கை இனப் பிரச்சினைக் குத் தீர்வாக இந்திய முறை மையி லான அரசியல் தீர்வை முன்வைப் பதோடு அதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும் வகையில் வலியு றுத்த வேண்டும் என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு விடம், தமிழர் விடுதலைக்கூட்ட ணியின் செயலாளர் வீ.ஆனந்த சங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவால் கொண்டு வரப் பட்ட 13 ஆவது திருத்தச்சட்டம் இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வாகாது என்று ஒட்டுமொத்த தமிழ் சிவில் சமூகமும், இந்திய நாடாளுமன்ற குழுவிடம் வலியு றுத்தியுள்ள நிலையில் வீ.ஆனந்த சங்கரி மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இந்தவிடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இடம்பெயர்ந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியும், கொடு மையும் வார்த்தைகளில் அடக்க முடியாதவை. இது போன்ற சம்ப வங்கள் எந்த நாட்டிலும் எந்தக் கொடிய ஆட்சியிலும் நடந்த தில்லை. இத்தனை இடர்களையும் அனுபவித்த மக்கள் நரகலோகம் பற்றி என்ன கணிப்பு வைத்திருந் தார்களோ அதைவிட பல மடங்கு மோசமான நிலைமையிலேயே போரின் கடைசிக் கட்டத்தில் வாழ்ந் துள்ளனர்.

எமது மக்களுக்கு ஆறுதல் கூறவேண்டிய நேரத்தில் இந்த அரசு தொடர்ந்து துன்பத்தையே கொடுக்கின்றது.

எமதுமக்கள் மத்தியில் பிற இன மக்களைக் கொண்டு வந்துகுடியேற் றுவதும் அவர்களின் பாரம்பரிய மான வணக்கத்தலங்களில் இருந்து இரவோடு இரவாக விக்கிரகங்களை அகற்றி வேறுவிக்கிரகங்களை அவ் விடத்தில் வைப்பதும் முஸ்லிம் சகோ தரர்களுடைய வணக்கத் தலங் கள் தாக்கப்படுவதும், சிறு பான்மை மக் களின் நிலங்களை அடாத்தாகப் பிடிப் பதும் மக்களின் துன்ப நிலையை உணராமல் செய்யும் செயலாகும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியும், கொடுமையும் வார்த்தைகளில் அடக்க முடியாதவை.

அப்பாவி மக்களின் காணிகளை இல்லாத ஏற்க முடியாத நொண்டிக் காரணங்களைக் கூறி அந்தக் காணி களைச் சுவீகரிக்க எடுக்கும் நடவ டிக்கையைக் கண்டிக்க வேண்டும்.

இத்தனை அனர்த்தங்களையும் அதிகாரம் படைத்தவர்கள் நினைத் திருந்தால், மனம் வைத்திருந்தால் ஒரு கட்டளையோடு ஒரு சில நிமி டங்களில் நிறுத்தியிருக்க முடியும்.

இந்திய முறையிலான அரசியல் தீர்வை இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இலங்கை அரசை ஏற்கு மாறு ஆலோசனை வழங்குமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கி றேன் -என்றுள்ளது. (ம-5)

# சித்திரைப் புத்தாண்டு முழுநாளும் ஆலயங்கள் திறந்திருக்க வேண்டும்

## யாழ்.இந்து ஆலய வழிபடுவோர் சபையினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.12

சித்திரைப் புத்தாண்டில் முழு நாளும் ஆலயங்கள் திறந்திருக்க வேண்டும். மக்கள் வழிபாடு களில் ஈடுபட ஊக்கமளிக்கப்பட வேண் டும். இது பூசகர்களதும் ஆலய பரிபாலகர்களதும் கடமையாகும்.

இவ்வாறு யாழ்.இந்து ஆலய வழிபடுவோர் சபை தெரிவித்துள் ளது. இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்ட தாவது:-

தற்போது புலம் பெயர்ந்து வாழும் மக்களின் பேராதரவுடன் ஆலயங் கள் புனரமைக்கப்பட்டு அழகுற விளங்குகின்றன.

ஆலயங்களில் விசேட நிகழ்வு கள் நிறைவடைந்ததும் அடியவர் களை ஆலயப் பக்கங்களில் காண்பது என்பது அரிது.

எனவே ஆலயங்கள் தாம் கடைப்பிடிக்கும் பஞ்சாங்கத் துக்கு அமைய சித்திரைப் புத் தாண்டு பிறக்கும் நேரத்தில் இருந்து முழு நாளும் ஆலயங்க ளைத் திறந்து வைத்து வழிபாட் டுக்கு விடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஏப்.12

இணுவில் ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று இரவு 7 மணியளவில் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலய மணிமண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

ஒன்றியத்தலைவர் பு.பால குமாரி தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் ஒன்றிய லண் டன் இணைச்செயலாளர் ச.சபே சன் சிறப்புரையாற்றுவார். (ம)

# வெளிநாட்டு உதவிகள் குறைவடைவதால் கண்ணி அகற்றும் நிறுவனங்கள் சிக்கலில்

## கண்ணிவெடி அகற்றும் எவ்.எஸ்.டி அமைப்பின் முகாமையாளர் தெரிவிப்ட

கொழும்பு,ஏப்.12

வெளிநாட்டு உதவிகள் குறை வடைவதால் கண்ணிவெடிகள் அகற்றும் நிறுவனங்கள் சிக்கலில் உள்ளன என்று கண்ணிவெடி அகற் றும் நிறுவனங்களில் ஒன்றான எவ்.எஸ்.டி அமைப்பின் முகாமை யாளர் கிளிங்ரன் ஸ்மித் தெரிவித் துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் இடம்பெற்ற பிரதேசங்க ளில் நிலக்கண்ணிகளை அகற்றும் [illegible] வெளிநாடு களால் இலங்கைக்கு வழங்கப் பட்டு வரும் உதவிகளின் தொகை சடுதியாகக் குறைக்கப்பட்டது.

இதன் காரணமாக கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்கள் பல் வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றன.

சர்வதேச நிலக்கண்ணி அகற் றும் தினத்தை முன்னிட்டு, முல் லைத் தீவு கொக்குத்தொடுவாய், தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிலக்கண்ணி வெடிகள் சம்பந்தமாக பொதுமக்க ளுக்கு அறிவுறுத்தும் கண்காட்சிக்குச் சமுகமளித்திருந்தபோதே இந்த விடயத்தை அவர் கூறியுள் ளார்.

எப்.எஸ்.டி நிறுவனம் சுவிஸ் உதவிகளின் கீழ் பத்து ஆண்டு கள் இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றியுள்ளது.

தற்போது வடக்கில் நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள் ளது என்று அவர் மேலும் கூறி னார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடங்காது இலங்கை

## அதை உணர்ந்து உலகநாடுகள் செயற்பட வேண்டும்: பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் மணியரசன்

சென்னை, ஏப்.12

இலங்கை அந்த நாட்டுச் சட்டங்களுக்கோ அல்லது மனித உரிமைச் சட்டங்களுக்கோ, ஐ.நா. சபைக்கோ கட்டுப்படாது என்பது அண்மையில் அந்நாட்டு இராணுவ நீதிமன்றம் இறுதிப் போர் தொடர்பாக வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கை மூலம் தெளிவாகின்றது. சண்டியன் போல் செயற்பட்டு வரும் இலங்கை அரசு மீது உலகநாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இவ்வாறு கூறியிருக்கிறார் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் பெ.மணியரசன்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப்போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உயிரிழந்தனர். பல்வேறு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அவைகுறித்து இலங்கை அரசு விசாரணை நடத்த வேண்டும் என்று உலக நாடுகளும், ஐ.நா. சபையும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் இலங்கை இராணுவ நீதிமன்றம் அது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறப்பட்டது. தற்போது அந்த விசாரணைகளின் முதலாவது பகுதி இலங்கை பாதுகாப்புச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அதில் ''இலங்கை இராணுவத்தினரால் பொதுமக்கள் ஒருவரும் உயிரிழக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலிலேயே பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூன் அமைத்த மூவர் குழு விசாரணைகளின் முடிவில், போரின் கடைசி நாள்களில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும், இலங்கைப் படையினர் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர் என்றும் கூறியிருக்கிறது. இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவும் கீழ்நிலை இராணுவ அதிகாரிகள் போர்க் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று அறிக்கையிட்டுள்ளது.

இந்தநிலையில், இராணுவ நீதிமன்றம் பொதுமக்கள் ஒருவர் கூட உயிரிழக்கவில்லை என்று கூறியுள்ளது. இதன் மூலம் இலங்கை அரசு எதற்கும் கட்டுப்படாது சண்டியன் போல் நடந்து கொள்கிறது என்பது உண்மையாகுகிறது. இந்தியா உட்பட உலகநாடுகள் இலங்கையுடன் கொண்டுள்ள உறவுகளைத் துண்டித்து அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை அரசு தனது குற்றச்செயல்களை நேர்மையாக விசாரித்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நம்புவதற்கு எள்ளளவும் இனி இடமில்லை என்பதை உலக நாடுகள் உணர்ந்து செயற்பட வேண்டும்.- என்றார்.(ற)

### தனுஷ்கோடி அருகே கரையொதுங்கிய இரு உடல்கள் இலங்கையரதா?

சந்தேகம் வெளியிடுகின்றனர் தமிழகப் பொலிஸார்

சென்னை, ஏப்.12

தனுஷ்கோடி அருகே உருக்குலைந்த நிலையில் இரு ஆண்களின் உடல்கள் நேற்றுமுன்தினம் கரையொதுங்கியுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனுஷ்கோடி அருகே நடுத்துறை எனும் கடற்கரைப் பகுதியிலே உடல்கள் கரையொதுங்கியுள்ளன. அடையாளம் காணமுடியாத நிலையில் தலை, கை, கால்கள் உருக்குலைந்துள்ளன என்று கூறப்படுகிறது. உடல்கள் அடையாளம் காணமுடியாத நிலையில் உடற்கூறுப் பரிசோதனைகளின் பின்னர் அங்கேயே உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் எவரும் காணாமற்போனதாக முறைப்பாடுகள் பதிவாகவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், இந்த உடல்கள் இலங்கையைச் சேர்ந்த மீனவர்களுடையதாக இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்துள்ளனர். உடல்களை அடையாளம் காணும் பொருட்டு இது குறித்த தகவல்கள் இலங்கை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற)

### மீனவர்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம்

சென்னை, ஏப்.12

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி நெல்லை மாவட்டத்தின் பல்வேறு கிராம மீனவர்கள் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 22 கிராம மீனவர்களே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### மேற்கு வங்கத்தில் தொடரும் வன்முறைகள்



மேற்கு வங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியினர் நேற்று 2ஆவது நாளாகவும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் புதுடில்லி சென்றிருந்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கும், மாநில நிதியமைச்சர் அமித் மித்ராவுக்கும் எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும், நிதியமைச்சர் மீது தாக்குதலும் நடத்தப்பட்டன. அதனைக் கண்டித்தே மேற்கு வங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸினர் தொடர் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். (ற)

## ஈழத் தமிழர் விவகாரத்தில் துரோகம் இழைத்தது யார்?

### சமாளிக்கிறார் கருணாநிதி

சென்னை, ஏப்.12

ஈழத் தமிழர் பிரச்சினையாக இருந்தாலும் சரி, காவிரி நதி நீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி தமிழக சட்டசபையில் உடனே தி.மு.க. துரோகம் இழைத்துவிட்டார்கள் என்றே கூறுகின்றனர். ஆனால் யார் உண்மையில் துரோகம் இழைத்தார்கள் என்று மக்களுக்குத் தெரியும் என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழக சட்டமன்றத்தில் நேற்றுமுன்தினம் தென்பெண்ணையாற்று தண்ணீரைக் கர்நாடக அரசு திருப்பி விடுவதைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திமுக சட்ட மன்ற உறுப்பினர் எ.வ.வேலு சமர்ப்பித்திருந்தார். அப்போது பொதுப் பணித்துறை அமைச்சரும், அவையை அமைதியாக நடத்திச் செல்லும் பொறுப்பு மிக்க அவை முன்னவரும் எழுந்து தேவையில்லாமல், காவிரிப் பிரச்சினை பற்றியும், இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியும் பேசி, அதில் தி.மு.கவும், நானும் துரோகம் இழைத்து விட்டதாகப் பேசியிருக்கிறார்கள். அதற்கு பதிலளிக்க முயன்ற முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரான துரைமுருகனை பேசவிடாமல் தடுத்திருக்கிறார்கள்

உண்மையில் துரோகம் இழைத்தது யார்?

இலங்கையில் போர் நிறுத்தம் நிரந்தரமாக ஏற்பட ஆவன செய்யும்படி மத்திய அரசை வலியுறுத்திட 23.4.2009 அன்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வதற்கு நான் அழைப்பு விடுத்தபோது, இலங்கையில் நடைபெறும் போர், தமிழர்களை எதிர்த்து அல்ல விடுதலைப் புலிகளை எதிர்த்துத்தான் என்று ஜெயலலிதா கூறினாரே அதுதான் துரோகம். இலங்கையில் ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டபோது, ஒரு போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம் தான் என்று 17.1.2009 அன்று ஜெயலலிதா சொன்னாரே, அதைவிட ஒரு பெரிய துரோகம் இருக்க முடியுமா?

காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தால் கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால்தான் காவிரி நீர் தமிழ்நாட்டுக்கு வரும். கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால் தான் நடுவர் மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமைய முடியும் என்று ஜெயலலிதா கூறியது தான் துரோகம்.

தமிழகச் சட்ட சபையில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் தி.மு.க துரோகம் இழைத்து என்று எந்த வித அடிப்படையுமின்றி, எதையும் முழுமையாக அறிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள். அதைவிடுத்து நடந்தது என்ன என்பது பற்றி சட்ட சபை உறுப்பினர்கள் ஆராய்ந்து பேச வேண்டும் - என்றுள்ளது. (ற)

### ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக வாழ்வுரிமைக் கட்சி வீதிமறியல்

சென்னை, ஏப்.12

இலங்கை அரசு ஈழத் தமிழர்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகளைக் கண்டித்து தரங்கம்பாடியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் போது ஈழத் தமிழர்கள் மீது இலங்கை அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் அடக்குமுறைகள், இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், கச்சதீவு விவகாரம் தொடர்பாகக் கண்டனம் வெளியிடப்பட்டது.

வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் பொம்மையையும் தீயிட்டு எரித்தனர். அதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 100 பேரை பொலிஸார் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. (ற)

### ஈழத் தமிழர் விவகாரத்தில்

## தமிழக கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லை

### குற்றஞ்சாட்டுகிறது பா.ஜ.க.



சென்னை, ஏப்.12

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேரும் ஒன்றுசேர்ந்து குரல் கொடுத்ததாக இதுவரை சரித்திரம் இல்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் பா.ஜ.க. மாநிலத் தலைவர் பொன். இராதாகிருஷ்ணன்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

கேரளாவில் இரு மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது அங்கிருந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாகக் குரல் கொடுத்தனர். ஆனால் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலோ அல்லது தமிழக மீனவர்கள் பிரச்சினையிலோ இதுவரையில் தமிழக மீனவர்கள் அனைவரும் ஒன்றாகக் குரல் கொடுத்ததாகச் சரித்திரம் இல்லை.

இலங்கையில் இறுதிப் போரை இலங்கை அரசு மட்டும் நடத்தவில்லை. சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆயுதங்களுடன் தி.மு.க., காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவுடனேயே நடத்தியது.

போர் நடந்த வேளையில் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி உண்ணாவிரதம் இருந்தார். உண்ணாவிரதம் இருந்த 3 மணி நேரத்தில் போரைக் இலங்கை கைவிட்டதாக அப்போதைய மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியதை தொடர்ந்து கருணாநிதி உண்ணாவிரதத்தை கைவிட்டார். ஆனால் போர் முடியவில்லை என்பதுதான் உண்மை.

தற்போது மாணவர்கள் நடத்தும் போராட்டத்தை பா.ஜ.க. வரவேற்கிறது. எனினும் 1965ஆம் ஆண்டு நடைபெற்ற மாணவர் போராட்டத்தால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்படைந்தன. அதைப் போன்று பிரிவினை சக்திக்கு, மாணவர்கள் துணை போய் விடக்கூடாது பா.ஜ.க. வலியுறுத்துகிறது - என்றார். (ற)

### கர்நாடக சட்டமன்றத் தேர்தல்

## வேட்பாளர்களிடம் கட்டணம்; விளக்கம் கேட்கிறது மன்று

பெங்களூர், ஏப்.12

சட்டசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்களிடம் இருந்து காங்கிரஸ் கட்சி பணம் பெறுவதைத் தடை செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்குத் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்திக்கு உத்தரவிட்டுள்ளது பெங்களூர் உயர்நீதிமன்றம்.

கர்நாடக சட்ட சபைக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட விருப்பம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ரூ.10 ஆயிரம் கட்டணம் செலுத்த வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு பணம் பெறுவது சட்ட விதிகளுக்கு முரணானது என்று தெரிவித்து கர்நாடக பொலிஸ் மகாசங்க அமைப்பின் தலைவர் வி.சசிதர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிமன்றத்துக்கு அளித்த மனுவில் 'வேட்பாளர்களிடம் பணம் வசூலிக்க காங்கிரஸ் அரசியல் சட்டத்தில் இடமில்லை. வேட்பாளர்களிடமிருந்து பணம் வசூலிப்பதை தேர்தல் ஆணையம் அங்கீகரித்தால் அது கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கவே வழி வகுக்கும். ஆகவே இவ்வாறு பணம் பெறுவது தடை செய்யப்பட வேண்டும்'- என்று தெரிவித்துள்ளார்.

மனுவை விசாரித்த நீதிமன்றம் இதுகுறித்து உடனடியாக போதிய விளக்கத்தை அளிக்குமாறு தேர்தல் ஆணையகத்துக்கும், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்திக்கும் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை- தேர்தலில் போட்டியிடுவதற்கு சுமார் 2 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் அதன் மூலம் ரூபா.2.5 கோடி நிதி பெறப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள்
தராதரத்தை
உயர்த்திக் கொள்வதற்கான
அரிய சந்தர்ப்பம் !



ஒளிமயமான எதிர்காலத்துக்கான முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் !!

காலம் : 03 மாதங்கள் / 120 மணித்தியாலங்கள்

USAID | SRI LANKA
FROM THE AMERICAN PEOPLE

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள்,
கணனித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள்
அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான
கற்கைநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

ICDL
International Computer Driving Licence
Just 6,500/= ONLY

e - Citizen
Just 3,500/= ONLY

மேலதிக தகவல்களுக்கு :

GATEWAY
LANGUAGE & ICT CENTRE Nelliyady
55,Pointpedro Road, Nelliyady.
Phone:- 0212262395 / 0215677606

உடன் செய்திகளுக்கு :
www.onlineuthayan.com

உதயன்

தமிழ் தேசிய நாளிதழ்
Uthayan - National Tamil Daily

# 361, KASTHURIYAR ROAD, JAFFNA
# 70, DAVIDSON ROAD, COLOMBO - 04

Editorial : 021 567 9933, 021 222 9933
Fax : 021 222 9944
Circulation : 021 567 7222
Advertisement : 021 567 1111, 021 567 6666
General : 021 567 7602, 021 567 7600
Fax : 021 222 9731

E-mail
News & Photographs : news@uthayan.com
Advertisement : advt@uthayan.com

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சிஸ் சேவியர் (மகேந்திரன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் சேவியர் நேற்று (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றேமன் கெனத் மற்றும் றொபின்சன் கிறிஸ்ரி இசபெல்லா, ஜெபமணிதாஸ் ஆகியோரின் சகோதரனும் மொறின் நளினியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை சடங்குகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனோகரன்
(சகோதரன்)

மாட்டின் றோட்,
யாழ்ப்பாணம்.

(35953) (23)

## இராசையா நடராசா (பத்தர்)



அல்வாய் தெற்கு, மாலுசந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நடராசா நேற்று (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற புவிராஜசிங்கம் மற்றும் ஜெகதீஸ்வரியின் அன்பு மருமகனும் ஜெயமணியின் அன்புக் கணவரும் வசந்தாதேவி, நந்தகுமார், சசிகுமார், தமயந்தி, சதீஸ்குமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் குனேந்திரா, திருநிறைச்செல்வி, கமலலோஜினி (ஆசிரியை), சுரேந்திரன் (சுரேஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் பாலகிருஷ்ணன், சோமசுந்தரம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மாலுசந்தி, அல்வாய்
தெற்கு, அல்வாய்.

(சி/3504) (23)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சிறிமோகன் (மோகன்)



(மேனகா அச்சக உரிமையாளரின் அன்புச் சகோதரன்)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிறிமோகன் நேற்று (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் தம்பையா மற்றும் நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற திரு.திருமதி இளையதம்பி தம்பதியரின் மருமகனும், ஜெனோவாவின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (குமார்-உரிமையாளர், மேனகா அச்சகம்), உதயராணி, மேனகா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மயூரனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் துயர்பகிர்வு நிகழ்வுகள் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிவரை இலக்கம் 103, சில்வஸ்டர் லேன், பிறவுண் வீதி, கொக்குவிலில் உள்ள அவரின் தாய் வீட்டில் இடம்பெறும். இறுதிக்கிரியைகள் ஆவரங்காலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் ஆவரங்கால் நவோதயா வீதியில் உள்ள இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தாய், சகோதரர்கள், மைத்துனர்.
0776128707

இல.103, சில்வஸ்டர் லேன்,
பிறவுண் வீதி, கொக்குவில்.

(35955)(14.9)

## திருமதி தங்கரத்தினம் ஆறுமுகசாமி

குமரகோட்டம் பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் ஆறுமுகசாமி நேற்று (11.04.2013) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகசாமியின் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை) அன்பு மனைவியும் குமரகுருமூர்த்தி (கொழும்பு), சர்வேஸ்வரி, சோதிமதி, செந்திலாதிபன், பஞ்சரத்தினம் (மலேசியா), கலைராணி (ஆசிரியை), குமார் சின்னக்குட்டி (நைன்ஸ்ரார் ஸ்ரூடியோ), நிர்மலன் (பொறியியலாளர், சிமெந்துத் தொழிற்சாலை புத்தளம்), பகவதி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் தேவி, இரகுநாதன், காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் அற்புதராணி, கார்த்திகேசு, மகாதேவன், சாந்தி, வசந்தா, தணிகாசலம் ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
டாக்டர் இ.மணிவண்ணன் குடும்பம்,
ம.ஜெகஜீவன் குடும்பம்.

குமரகோட்டம்,
பண்ணாகம்,
சுழிபுரம்.

(சி/3504) (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மி பிரிண்டர்ஸ்
# Lukshmee Printers



Offset-Printing
Paper Cutting
Book Binding

**அனைத்து வேலைகளும்**
**குறைந்த விலையில் தரமான**
**முறையில் செய்து கொடுக்கப்படும்.**

**TP.021 567 0256**

107, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

# Lukshmee Transport



* 9 தொன் சுமை ஏற்றக் கூடிய TATA லொறி வாடகைக்கு விடப்படும்.

* 38 ஆசனங்கள் உடைய அரைச்சொகுசு TATA BUS வாடகைக்கு விடப்படும்.



சுற்றுலா செல்பவர்கள், பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், தொண்டுநிறுவனங்கள், ஏனைய விசேடவைபவங்களுக்கு, மிகக் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

**TP.021 567 0256**

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரியாவின் முக்கிய புரட்சிக் குழு அல் குவைதாவுடன் இணைந்தது

டமஸ்கஸ், ஏப்.12

சிரிய உள்நாட்டுப் போரில் அரசுக்கு எதிராகப் போராடும் அமைப்புக்களில் முன்னணியில் திகழும் அல் நுஸ்ரா அமைப்பு இனிவரும் காலங்களில் அல் குவைதா அமைப்புடன் இணைந்து பணியாற்றும் என்று அறிவித்துள்ளது.

அதன் தலைவர் அல் ஜவலானி இதுகுறித்த அறிவிப்பை விடுத்துள்ளார். அல் குவைதாவுடன் இணைந்து பணியாற்றும் போதிலும் சிரியா குறித்த தமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈராகில் உள்ள அல் குவைதா இயக்கம் அல் நுஸ்ராவுடன் இணைந்து கொண்டதாக அறிவிப்பு வெளியான மறுநாள் ஜவலானியின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சர்ச்சைக்குரிய தீவுப்பகுதியில் மீன்பிடிக்க தைவானுக்கு அனுமதி

பீஜிங், ஏப். 12

சர்ச்சைக்குரிய தீவுப் பகுதியில் மீன்பிடியை மேற்கொள்வதற்கு ஜப்பான் அனுமதியளித்துள்ளது.


கிழக்கு சீனக்கடல் பகுதியில் எண்ணெய் வளமும், மீன்பிடி பகுதிகளாக விளங்கும் ஜப்பான் கட்டுப்பாட்டில் உள்ள தீவுகளை உரிமை கொண்டாடுவதில் ஜப்பானுக்கு சீனாவுக்கும் பிரச்சினை இருந்து வருகிறது.

சென்காகு என்று ஜப்பானும், டையோயு என்று சீனாவும் அழைக்கும் இந்த தீவுகளுக்கு தைவானும் உரிமை கொண்டாடி வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாகத் தற்போது ஜப்பான், சீனா நாடுகளிடையே பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் இந்த தீவுப்பகுதிகளில் மீன்பிடித்துக் கொள்ள தைவானுக்கு ஜப்பான் அனுமதியளித்துள்ளது. கடந்த ஒரு வருடமாக நடைபெற்ற பேச்சுக்களுக்குப் பின்னர் ஜப்பானுக்கும் தைவானுக்கும் இந்த உடன்பாடு எட்டப்பட்டது என்று கூறப்படுகிறது.

ஜப்பானின் இந்த முடிவால் சீனா அதிருப்தி அடைந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் சீனா இதுகுறித்து எந்த விதக் கருத்துக்களையும் இது வரை வெளியிடவில்லை. (ற)

## எந்நேரமும் வெடிக்கலாம் போர்.....!




### எரிபொருள் நிரப்பப்பட்ட நிலையில் ஏவுகணைகள்

சியோல், ஏப்.12

தென் கொரியா மற்றும் அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக ஏவுகணைகள் எரிபொருள் நிரப்பப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று வடகொரியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடகொரியாவின் கிழக்கு கடற்கரைப்பகுதியில் உள்ள ஹம்கியாங் மாகாணத்தின் எல்லை பகுதியிலேயே இந்த ஏவுகணைகள் தயார் நிலையில் உள்ளன. இதனால் கொரியாப் பிராந்தியத்தில் தற்போது பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. (ற)

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் எந்நேரமும் போர் வெடிக்கலாம் என்ற நிலையில் வடகொரியாவின் தாக்குதல்களை எதிர்கொள்ள வசதியாக தென்கொரிய இராணுவம் எல்லைப் பகுதி எங்கும் முகாமிட்டுள்ளனர்

# பொதுமக்கள் இலக்கு

## சிரிய அரசை குற்றஞ்சாட்டுகின்றன மனித உரிமை அமைப்புக்கள்

டமாஸ்கஸ், ஏப். 12



கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிரியாவில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், சிரிய இராணுவத்தினர் பொது மக்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கு போரில் ஈடுபடும் இரு பகுதியும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், முன் எப்போதும் இல்லாத வகையில் பொதுமக்களின் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்றும் அவை தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட சிறிய காலப் பகுதிக்குள் சிரியாவின் வடக்குப் பகுதியில் பொதுமக்கள் செறிந்துள்ள 54 இடங்களில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை சிரிய இராணுவத்தினரின் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களே என்றும் அந்த அமைப்புக்கள் கூறுகின்றன.

சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை சுமார் 75 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள அந்த அமைப்புக்கள் அந்த நாட்டுக்கு எதிரான ஐ.நா. நடவடிக்கை எடுப்பதற்கு ரஷ்யாவும், சீனாவும் முட்டுக்கட்டை போட்டு வருவது கவலையளிப்பதாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளன. (ற)

# மீண்டும் வடகொரியா ஏவுகணைச் சோதனை

## உறுதிப்படுத்துகிறது தென்கொரியா

சியோல், ஏப்.12

வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை ஒன்றை மேற்கொள்ளும் முயற்சிகளில் தீவிரமாக இறங்கியுள்ளது என்று தென்கொரியா உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடகொரியாவின் கிழக்குப் பகுதியில் மத்திய ரக ஏவுகணை ஒன்றைச் சோதனை செய்யும் இறுதிக்கட்ட வேலைகள் நடைபெற்று வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்புக் கூறுகின்றது.

இதுகுறித்து எந்தவிதக் கருத்துக்களையும் வடகொரியா வெளியிடவில்லை. எனினும் அதன் நட்பு நாடான சீனா இவ்வாறான முயற்சிகளை நிறுத்தி கொரிய தீபகற்பத்தில் அமைதி ஏற்பட வடகொரிய ஒத்துழைக்க வேண்டும் என்று கோரியிருந்தது. எனினும் எவற்றையும் சட்டை செய்யாது தனது முயற்சிகளை வடகொரியா தொடர்ந்து மேற்கொண்டு வருவது செயற்கைக் கோள் படங்கள் மூலம் தெளிவாகியுள்ளது என்று தென்கொரிய உளவு அமைப்பு கூறுகின்றது.

கொரியாத் தீபகற்பத்தில் போர் எந்நேரமும் வெடிக்கலாம் என்ற சூழ்நிலையில் வடகொரியாவின் இந்தச் செயற்பாடு வலிந்து போரை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் வடகொரியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான எல்லைப் பாலம் சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியாத வகையில் மூடப்பட்டுள்ளது என்று சீன அதிகாரிகளைக் குறிப்பிட்டு தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# சினிமாப் பாணியில் அதிரடிக் கொள்ளை இத்தாலியில் 13 கோடி தங்கம் அபேஸ்

ரோம், ஏப்.12

இத்தாலியின் அதிவேக நெடுஞ்சாலை ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் 13 கோடி டொலர் பெறுமதியான தங்கக் கட்டிகள் கொள்ளையிடப்பட்டன.

இத்தாலியில் இருந்து சுவிட்ஸர்லாந்து நோக்கி தங்கக் கட்டிகளுடன் சென்று கொண்டிருந்த இரு லொரிகள் வீதியின் நடுவே ஒரு டிரக் வண்டி தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்ததால் மேலே செல்ல முடியாது நின்றன. அப்போது பொலிஸ் உடையுடன் சம்பவ இடத்துக்கு வந்த 12 பேர் புகையுடன் கூடிய சிறிய குண்டுகளை தமது கார்களுக்கும், லொரிக்கும் இடையே வீசி தீயை உண்டாக்கினர். பின்னர் துப்பாக்கிகளால் சுட்டுக் கொண்டே லொரிகளின் கதவை உடைத்து அதிலிருந்த தங்கக் கட்டிகளையும் பணத்தையும் தாம் வந்த 3 கார்களில் மாற்றிக் கொண்டு தப்பிச் சென்றனர். தப்பிச் செல்லும் போது பொலிஸார் தம்மைத் துரத்தி வருவதைத் தடுப்பதற்காகப் பாதையெங்கும் கூர்மையான ஆணிகளை வீசியவாறு சுவிட்ஸர்லாந்துக்குள் தப்பிச் சென்றுவிட்டனர்.

தற்போது பொலிஸார் தடயம் எதுவும் இன்றி கொள்ளையர்களை வலைவீசி வருகின்றனர். (ற)

# பாகிஸ்தானுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள்

## அமெரிக்கர்களுக்கு அறிவுறுத்து

நியூயோர்க், ஏப்.12

அவரச தேவைகள் இன்றி பாகிஸ்தானுக்கு அமெரிக்கர்கள் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிட்ட பயண அறிவுரையைத் திரும்பப் பெற்றுள்ள அமெரிக்கா, அண்மையில் கிடைத்த தரவுகளின்படி பாகிஸ்தானில் வசிக்கும் அல்லது சுற்றுலா மேற்கொள்ளும் அமெரிக்கா மற்றும் வெளிநாட்டினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

உலகெங்கும் உள்ள அமெரிக்கர்கள் தொடர்பில் தாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, பாகிஸ்தானில் இருந்து முடிந்தளவு சீக்கிரம் அமெரிக்கர் வெளியேறவேண்டும் என்றும் அவசரத் தேவைகள் இல்லாமல் அமெரிக்கா செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளது. (ற)

### சோதனைக் குழாய் மூலம் குழந்தை

# சாதனை விஞ்ஞானி நேற்று காலமானார்



லண்டன், ஏப்.12

சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெறும் முறையைக் கண்டுபிடித்த பிரிட்டன் விஞ்ஞானி றொபேட் எட்வேர்ட்ஸ் 87 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

இவர் நீண்ட நாள்களாக நோய்வாய்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். எட்வர்ட்ஸ் சோதனை குழாய் மூலம் குழந்தை பெறும் முறையைக் கண்டுபிடித்தமைக்கான இவருக்கு 2010 ஆம் ஆண்டு அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. 1978ஆம் ஆண்டு முதலாவது சோதனை குழாய் குழந்தை முறை வெற்றி கண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பணயக் கைதிகளாக்கப்பட்ட நான்கு தீயணைப்பு வீரர்கள்

நியூயோர்க், ஏப்.12

அமெரிக்காவின் அட்லாண்டாப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 4 தீயணைப்பு வீரர்கள் துப்பாக்கிதாரி ஒருவரால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

ஐந்து பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த நபர் பின்னர் ஒருவரை விடுவித்துள்ளார் என்று தெரிவித்துள்ள பொலிஸார் அவர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டமைக்கான நோக்கம் எதுவுவென்று தெரியவில்லை என்றும் கூறுகின்றனர்.

தற்போது பணயக் கைதிகளை மீட்பதற்காக விசேட பொலிஸ் குழு ஒன்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்றும் பணயக் கைதிகளாக்கப்பட்டுள்ள தீயணைப்பு வீரர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் அந்தக் குழு மேற்கொண்டு வருகின்றது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற)

## வேட்பு மனு நிராகரிப்பு; முஷாரப் வழக்கு

லாகூர், ஏப்.12

வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடர முடிவு செய்துள்ளார் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்.

முஷாரப் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நான்கு தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்திருந்தார். அதில் 3 தொகுதிகளில் அவரது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. சித்ரால் தொகுதியில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் கசூர் தொகுதியில் தனது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு தொடர முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிதண்ணீருக்கு வருடாந்தம் பதினெட்டு லட்சம் ரூபா செலவு

## பூநகரிப் பிரதேச சபைத் தலைவர் தகவல்

கிளிநொச்சி,ஏப். 12

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கு வருடாந்தம் பதினெட்டு இலட்சம் ரூபா வரையான நிதி தேவைப்படுவதாக பூநகரி பிரதேச சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடம் முழுவதும் குடிதண்ணீரை விநியோகிக்க வேண்டிய ஒரு பகுதியாக பூநகரிப் பிரதேசம் காணப்படுகின்றது.

எனினும் பூநகரிப் பிரதேசத்தில் சபையினரால் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் தமக்கு போதுமானதாக இல்லையென மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக பூநகரி பிரதேச சபையின் தலைவர் பி.சிறிஸ்கந்தராசாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

**கிளிநொச்சி மாவட்டத்தில் வருடம் முழுவதும் குடிதண்ணீரை விநியோகிக்க வேண்டிய ஒரு பகுதியாக பூநகரிப் பிரதேசம் காணப் படுகின்றது.**

''பூநகரிப் பிரதேசத்தில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தத் தட்டுப்பாட்டைத் தவிர்க்க பிரதேச சபையின் அனைத்து வளங்களையும் ஒன்றிணைத்து குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகிறோம்'' இவ்வாறு விநியோகிப்பதற்கு வருடம்தோறும் பதினெட்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் பிரதேச சபையின் செயலாளர் மேரி மெற்றலின் சிவகுமார் கூறுகையில்;

இரண்டு நாள்களுக்கு ஒருதடவை சுழற்சி முறையில் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

பத்துக் குடும்பங்களுக்கு ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் என்ற அடிப்படையிலேயே விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது.

குடிதண்ணீரை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் போது தட்டுப்பாடு அதிகரிக்கும். வழங்கப்படும் குடிதண்ணீரை ஒவ்வொரு குடும்பமும் சரியாகப் பயன்படுத்தினால் தட்டுப்பாட்டைத் தவிர்க்க முடியும் என்றார். (ஐ-6)

# மக்களுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கு மன்னாரில்





மன்னார், ஏப்.12

மக்கள் பிரதிநிதிகள் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் கருத்தரங்கு ஒன்று மன்னார் சர்வோதய அமைப்பினரால் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் இடம்பெற்றதாக சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளரான சி.யுகேந்திரா தெரிவித்தார்.

தேர்தலின் போது மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றார்களா, இல்லையா என்பதைக் கண்காணிக்கும் ஆற்றலை மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாக மேற்படி கருத்தரங்கு அமைந்திருந்தது.

கருத்தங்கில் மன்னார் மற்றும் நானாட்டன் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து கிராமமட்டத் தலைவர்கள் 50 பேர் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் நகரசபையின் உபதலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளார் உட்படப் பலர் கலந்து கொண்டு விளக்கமளித்தமை குறிப்பிடத்தக்கது. (க-12)

## புதியவர்கள் இணைப்பு

வவுனியா,ஏப். 12

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் இயங்கி வரும் இனிய வாழ்வு இல்லத்தில் புதிய பயனாளிகளை இணைத்துக் கொள்ளவுள்ளதாக அதன் முகாமையாளர் ச.திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

கட்புலன், செவிப்புலன், பேச்சுத்திறன் குன்றிய மாற்றுத்திறன் கொண்டவர்கள் இந்த இல்லத்தில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், நலன்விரும்பிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் இயங்கி வரும் இந்த இல்லத்தில் 5 தொடக்கம் 21 வயது வரையான ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-402)



கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்துக்கு வருகை தந்த செல்வா பவுண்டேசன் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மாலை அணிவிக்கப்பட்டு இல்லத் தலைவர் சகிதம் அழைத்து வரப்படுகின்றனர். (க)

## நெடுங்கேணியில் சந்தை

வவுனியா,ஏப். 12

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் புதுவருட சந்தை நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் சங்கத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தச் சந்தையில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பொருள்களைக் கொள்வனவு செய்வதை அவதானிக்க முடிகின்றது.

தமிழரின் வாழ்வியலை எடுத்துக்கூறும் வகையில் பனம் பொருள்கள், தென்னையில் இருந்து பெறப்பட்ட பொருள்கள், மரக்கன்றுகள் என்பன இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டன. (க-402)

# செஞ்சிலுவைச் சங்கத்தினால் முதலுதவிப் பயிற்சிகள்



மன்னார்,ஏப். 12

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையினால் முதலுதவிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்த முதலுதவிப் பயிற்சிகள் மன்னார்-மதவாச்சி வீதியில் உள்ள கேட்போர் கூடமொன்றில் இடம்பெற்றது.

இதில் வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டுவரும் ஊழியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரியான ருக்ஸன் ஒஸ்வேல்ட் தெரிவித்தார்.

பயிற்சிகளை செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்ட அலுவலரான செல்வி றோகிணி முன்னெடுத்தார்.

இதில் மன்னார், நாவற்குழி மற்றும் புத்தளம் மறிச்சுக்கட்டி வீதி ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய செஞ்சிலுவைச் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரியான ருக்ஸன் ஒஸ்வேல்ட் மேலும் தெரிவிக்கையில்;

முதலுதவி முதன்மையானதும், அடிப்படையானதுமாகக் காணப்படுகின்றது. எதிர்பாராத தருணங்களின் போது முதலுதவியின் அவசியம் தொடர்பாக இங்கு [illegible] என்றார். (க-12)

# சிறுபோக நெற்செய்கையின்போது விதிகளை மீறுவோர் மீது நடவடிக்கை

## துணுக்காய் பிரதேச செயலர் அறிவிப்பு

அக்கராயன்,ஏப். 12

விவசாயிகள் இருப்பதைக் கொண்டு வினைத்திறனான செயற்பாட்டால் இழப்புக்களை ஈடுசெய்து மேன்மை, பெறலாமே தவிர சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டால் அது எல்லோருக்கும் பாதிப்பையே ஏற்படுத்தும். இவ்வாறு தெரிவித்தார் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன்.

தென்னியன்குளம், கோட்டை கட்டிய குளம் அம்பலப்பெருமாள் குளம் ஆகிய மூன்று குளங்களுக்கான சிறுபோகக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்; விவசாயிகள் அவர்களுக்கென வழங்கப்படும் அறிவுறுத்தல்களை முழுமையாகப் பின்பற்றுதல் வேண்டும்.

குறிப்பாக சிறுபோக நெற்செய்கையின் போது குறிக்கப்பட்ட குளத்தின் நீர் கிடைப்பதைக் கொண்டே ஒவ்வொரு விவசாகளுக்கும் காணி அளவு பகிரப்படுகிறது. அந்த அளவை மீறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டால் பாதிக்கப்படுவது அனைவருமே.

எனவே இனி வரும் காலங்களில் எவராவது அறிவுறுத்தல்களை மீறிச்செயற்பட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

கடந்த காலபோக நெற்செய்கையில் பலருக்கு பெரு நட்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையைக் கைவிடக் கூடாது.

நல்ல விதைகளைத் தெரிவுசெய்து அதிக இலாபம் பெறக்கூடிய வகையில் பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும்.

காலப்போகத்தில் அறுவடை இயந்திரத்துக்காக காத்திருந்த நிலையிலேயே அனேகமான நெற்காணிகள் மழையில் மூழ்கின. அந்த நிலைமை இனிமேல் வரக் கூடாது மனிதவலுவைப் பயன்படுத்தியாவது பருவ காலத்தை முடித்துக்கொள்ளவேண்டும்- என்றார். (க-ஐ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியர்கள் மோசமாக நடந்தாலும் தரம் குறையமாட்டார்கள் இலங்கையர்

## எங்கள் நாட்டில் தீவிரவாதத்தை வளர்த்தமை குறித்து விசாரணை நடத்த ஆராய வேண்டும் என்கிறார் சம்பிக்க



**சிறிய குழுவாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் இராணுவமாக வளர்த்து விட்டது இந்தியாதான்.**

கொழும்பு,ஏப்.12

இந்தியாவுக்கு சென்ற பயணிகள், பிக்குகள், கலைஞர்கள் மற்றும் அமைச்சர்கள் மோசமாக நடத்தப்பட்டமைக்கு பதிலாக அங்கிருந்து இங்கு வருபவர்கள் நடத்தப்படமாட்டார்கள். இலங்கையர்கள் அவர்களைப் போல தரம் தாழ்ந்து போகமாட்டார்கள்.

இவ்வாறு அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலருமான சம்பிக்க ரணவக்க கூறினார்.

பத்தரமுல்லவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தீவிரவாதத்தை ஊக்குவித்ததற்கு இந்தியாவே பொறுப்பு.

1984 - 1990 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பயிற்சி கொடுத்து, ஆயுதங்களை கொடுத்து, அடைக்கலம் கொடுத்து இந்தியாவே இலங்கையில் தீவிரவாதத்தை ஊக்குவித்தது.

சிறிய குழுவாக இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் இராணுவமாக வளர்த்து விட்டது இந்தியா தான்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்படுவது வழக்கமானதே.

வர்த்தக நோக்குக்காகவோ, யாத்திரையாகவோ இந்தியா செல்லும் இலங்கையர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு சென்ற பயணிகள், பிக்குகள், கலைஞர்கள் மற்றும் அமைச்சர்கள் மோசமாக நடத்தப்பட்டமைக்கு பதிலாக அங்கிருந்து இங்கு வருபவர்கள் நடத்தப்படமாட்டார்கள்.

இலங்கையில் தீவிரவாதத்தை ஊக்குவித்ததில் இந்தியாவின் பங்கு குறித்து முழுமையான விசாரணையை நடத்துவது குறித்து அனைத்துலக சமூகம் ஆராயவேண்டும்.-என்றார். (ச)



சனல் 4 பிரிட்டிஷ் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து இராணுவ நீதிமன்றம் நடத்திய விசாரணையின் மற்றொரு அறிக்கையை இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

# தனியார் துறையினருக்கும் விசேட விடுமுறை தேவை

## தொழில் உறவுகள் அமைச்சு கோரிக்கை

கொழும்பு,ஏப்.12

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 15ஆம் திகதி விசேட விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் தனியார் துறையினருக்கும் அன்றையதினம் விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

புத்தாண்டு காலப்பகுதியில் மக்களுக்கு ஏதுவாக எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமையை விடுமுறை தினமாக பிரகடனம் செய்ய வேண்டும் என்று தனியார் துறையினரும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளும் கேட்டுக் கொண்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# தஞ்சம் கோருவோரால் ஆஸி. நெருக்கடியில்

## தூதர் ஜெப்ரி பிலியச் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.12

தஞ்சம் கோருவோரின் நிலைமை துயரமாக இருந்த போதிலும், ஒருவகையில் அது ஆஸ்திரேலியாவுக்கு நெருக்கடியாகவே உள்ளது.

இவ்வாறு ஆஸ்திரேலியாவுக்கான அமெரிக்கத் தூதர் ஜெப்ரி பிலியச் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா தற்போது முகம்கொடுத்துள்ள பிரச்சினை குறித்து அமெரிக்கா தெளிவு பெற்றுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். அமெரிக்காதமது ஒப்பந்தங்களை நிறைவேற்ற முயன்ற போது தஞ்சம் கோருவோரின் பிரச்சினை மிக நெருக்கடியாக இருந்ததாக அவர் கூறினார்.

'ஸ்கை நியூஸ்' செய்தியாளருக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். இரண்டு நாடுகளும் திறந்த சமூக நிலைமையை கொண்டுள்ளதன் காரணமாக இந்தப் பிரச்சினையை அடை யாளம் கண்டு தீர்வு காண வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்க நாடுகள் தமது எல்லைப் பாதுகாப்பு குறித்து தொடர்ந்தும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**வாகனம் விற்பனைக்கு**

43-XXXX இசூசு டிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 077 5656
(35314)(5-6)

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியில் இராமலிங்கம் வீதியில் இருந்து செல்லும் அம்மன் வீதியில் நூறு யார் தூரத்தில் சந்திரசேகரனார்வளவு ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 801 2242
(35806)(5-6)

**தவறிவிட்டது**

அ.வள்ளிப்பிள்ளை ஆகிய எனது 486160691V இலக்க NIC மற்றும் ஓய்வூதிய அடையாள அட்டை அடங்கிய நீலநிற பேர்ஸ் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தனியார் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். (சன்மானம் வழங்கப்படும்)
தொடர்பு: 077 889 2934 / 077 594 9666
(35918)(5-6)

**வீடு வாடகைக்கு**

சாவகச்சேரியில் சகல நவீன வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குண்டு. அரச உத்தியோகத்திலுள்ள குடும்பத்தினருக்கு மட்டும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 539 3728
(35858)(5-6)

**கனடா ஜெயசாயி சுப்ப சென்ரரின் SALE**
சித்திரை புதுவருட அதிரடி மலிவு விற்பனை
ஆரம்பம் 01.04.2013-15.04.2013 வரை
வண்ணமயமான புத்தம் புதிய டிசைன்கள்
கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள்
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்-
சாறி, சல்வார் வாங்குபவர்களுக்கு அதற்குரிய
காப்பு, நெக்கிலஸ் செட் இலவசம்
எம்மிடமுள்ள எல்லா நவநாகரிக
உடுபுடைவைகளும் 10% , 50%
விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
SALE
CANADA JAYASAJI SUPER CENTRE,
114, Navalar Road, Jaffna.
(Kasthiriyar/Navalar Road Junction)
Tel-021-2219393
STORE HOURS-வாரத்தில் 7 நாள்களும்
காலை 9.00-இரவு 9.00 வரை

**ஈர விழிகளுடன் 13 ஆம் ஆண்டு நினைவில்**

**நமசிவாயம் ஞானலிங்கம்**

(கண்ணன்)

தோற்றம் 09.07.1968
மறைவு 12.04.2000



ஆயிரம் உறவுகள் இருந்தும் ஆறவில்லை உன் அம்மா மனம்
ஏக புதல்வனாய் எல்லோருக்கும் சகோதரனாய்
ஆசை மாமனாய் உன் மருமக்களுக்கு இருந்து இன்று எங்க விட்டு
எங்கு சென்றாயோ! நிழலாய் இருந்தவனே மகனே இன்று
நிழல் படமாகி விட்டாயே மண்ணை விட்டு விண்சென்று
பதின் மூன்று ஆண்டுகள் ஆனாலும் மண்ணில்
உள்ளவரை மறப்போனா மகனே நித்தம்
எங்கள் நெஞ்சிலே நீ பதிந்து உன் கனவுகளுடன் ஒன்றித்து
உருகித்தவிக்கிறதே! என்தெய்வமே! உன் ஆத்மா சாந்தி கொள்ளும் ஐயா!

நமசிவாயம் பூமணி
A 9, வீதி, No. 389,
மக்கள் வங்கி அருகில்,
கிளிநொச்சி.
(26274) (45.6)

பூமணி (தாய்).

யாழ். மண்ணில் புதியதோர் உதயம்
**இவன்ஸ் ஆடையகம்**
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 14.04.2013 ஆம் திகதி வரை 5000/= ரூபாவுக்கு மேல் உடுபுடைவைகள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு
Side Hand Bag இலவசம்
- பெண்களுக்கான நவநாகரிக சாறிவகை, சுடிதார், ஸ்கேட் பிளவுஸ் வகைகள்.
- சிறுவர்களுக்கான ஆடைத்தினுசுகள்
- ஆடவர்களுக்கான ரீ. சேட், ரவுசர் மற்றும் சேட் வகைகள்
- மகளிர்களுக்கான அழகு சாதனப் பொருள்கள்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
வித்தியாசத்தை அறிவீர்கள்
இவன்ஸ் ஆடையகம்
23, கஸ்தூரியார் வீதி,
(றொலெக்ஸ் பேக்கரி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(E.8280) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்லானி பள்ளிவாசலுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது

## பாதுகாப்புச் செயலர் உறுதி



கொழும்பு,ஏப்.12

பலாங்கொடை, கடரகல, ஜெய்லானி பள்ளிவாசலில் முஸ்லிம்கள் மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாது என்று பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இந்தப் பள்ளிவாசலை உடைப்பதற்கோ அல்லது பள்ளிவாசலில் முஸ்லிம்கள் சமய வழிபாடுகளை மேற்கொள்வதை தடுப்பதற்கோ அரசிடம் எவ்விதமான எண்ணமும் இல்லை. வதந்திகளை முஸ்லிம்கள் நம்பக்கூடாது.

இனங்களுக்கிடையே சமாதானத்தைப் பேணிப் பாதுகாப்பதுடன் தொல்லியல் முக்கியத்துவம் மிக்க புனித பிரதேசத்தையும் பேணிப் பாதுகாப்பது சகலரதும் பொறுப்பு.-என்றார்.

இதேவேளை-இந்தப் பள்ளிவாசலுக்கோ, மதவழிபாடுகளில் ஈடுபடும் முஸ்லிம்களுக்கோ எதுவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் தேசிய மரபுரிமையைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாக ஆராய் வதற்காக விசேட சுயாதீன குழுவொன்றை நியமிக்குமாறு தொல்பொருள் திணைக்கள ஆணையாளருக்கு பாதுகாப்புச் செயலர் ஆலோசனை வழங்கியுள்ளார். (ச)

# ஜனாதிபதியின் ஆணைக்குழு மீது நம்பிக்கையில்லை ஜே.வி.பிக்கு

## அநுரகுமார திஸாநாயக்க எம்.பி.



மாத்தளை,ஏப்.12

மாத்தளை மனித புதைகுழி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் மீது தமக்கு நம்பிக்கையில்லை என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

மாத்தளை மனித புதைகுழி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக் குழு நடத்தவுள்ள விசாரணைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இந்த விசாரணைகள் மிக நீண்ட காலத்துக்கு இழுத்தடிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே, சுயாதீன நீதிமன்ற விசாரணைகளின் மூலம் மாத்தளை மனித புதைகுழி குறித்த சம்பவத்தை விசாரணை செய்ய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகவுள்ளது.

இந்தச் சம்பவங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே காரணமல்ல. இந்த மனித புதைகுழி குறித்த சம்பவத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி மட்டுமே பொறுப்பாக இருந்திருந்தால், அதனை மிக மகிழ்ச்சியுடன் கொண்டாடி, குற்றச்சாட்டுக்களை அரசு அவர்கள் மீது சுமத்தியிருக்கும்.

இந்தச் சம்பவங்களுடன் அரசுக்கும் தொடர்பு இருக்கக் கூடும் என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது. இதன் காரணமாகவே விசாரணைகள் மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.-என்றார். (ச)

# 'ரெலோ' வின் நிர்வாகிகள்

மன்னார், ஏப்.12

தமிழீழவிடுதலைஇயக்கத்தின் (ரெலோவின்) 8ஆவது தேசிய மாநாட் டின் போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் நிர்வாகிகள் விவரத்தை வெளியிட்டுள்ளார்.

தலைவர்-செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்), செயலாளர் நாயகம்-ஹென்றி மகேந்திரன்,(கல்முனை மாநகர சபை முன்னாள் எதிர்க்கட்சி உறுப்பினர்), தேசிய அமைப்பாளர்- எம்.கே.சிவாஜிலிங்கம், (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), பொருளாளர்-விந்தன் கனகரத்தினம், (யாழ். மாநகர சபை உறுப்பினர்), உப தலைவர்கள்-நித்தியானந் தம் இந்திரகுமார் (கிழக்கு மாகாண சபை உறுப்பினர்), கோவிந்தன் கருணாகரன், (கிழக்கு மாகாண சபை உறுப்பினர்), நிர்வாக செயலாளர்-பி. நித்தியானந்தம், பிரசார செயலாளர்-செல்வி விஜயமாலா, சர்வதேச அமைப் பாளர்-வி.சிறிகரன், இவர்களுடன் தலைமைக்குழு உறுப்பினர்களாக, என்.சிறிக் காந்தா, (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்), எஸ்வினோ நோகராதலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்), சத்திய சீலராஜா ரூபராஜா,(திருமலை நகர சபை முன்னாள் உறுப் பினர், எஸ். சிறிஸ்கந்தராஜா, கே.கணேசலிங்கம், ஆர்.விஜய ரட்ணம் ஆகியோர் தெரிவு செய் யப்பட்டுள்ளனர். (ம-12)


22ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

துரைராஜா கோணேஸ்வரி



சீவனாய்: 01.01.1939

சிவமாய்: 12.04.1991

திதி:- திரயோதசி

கண்முன்னே வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனதுவோ
இனிவான உங்கள் பேச்சுக்கள்
இடைநடுவில் நின்றதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் - எம்
அன்னைக்கு ஈடாகுமோ
மண்ணைவிட்டு விண்சென்று
இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆனதுவோ
மண்ணில் நாம் உள்ளவரை மறந்திடாது உங்கள் நினைவு.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

95,சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (34707)(2.6)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 05.04.1925

மறைவு 13.03.2013

திருமதி சின்னையா அன்னலட்சுமி

ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆக நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆயிரம் ஆண்டுகள் தான் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம் அம்மா

இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நொதேன் மருந்தகம், பலாலி வீதி, கோண்டாவில்.
சி.சிவயோகநாதன், இராமகிருஷ்ணர் வீதி, கோண்டாவில் கிழக்கு.
(35629)(2.6)



MARSHA SYSTEMS (PVT) LTD
SOLUTION TO THE PEOPLE
www.marshasystems.lk

Special Offer
FREE 1 year key Antivirus

CLASSIC
Intel Pentium 3rd Generation
Intel® Dualcore® Processor G2020
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
49000.00

HP G4 Pavilion
Intel Core i3 370M 2.40Ghz
2GB DDRIII SDRAM
500GB HDD 7200rpm
14" HD LED Display
69000.00

CLASSIC
3rd Generation
Intel® Core i3 Processor 3.30GHz
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
58000.00

சித்திரைப்புத்தாண்டு சிறப்புத்தள்ளுபடி
கையிருப்பு உள்ளவரை மட்டுமே..

எம்மிடம் கணனிகளை கொள்வனவு செய்து கணனி பராமரிப்பு சேவையினை எப்பொழுதும் இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் அருகில் இருக்கும் எமது காட்சியறைக்கு விரையுங்கள்..

யாழ்ப்பாணம்
இல : 232 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
TP :021 4924437

நெல்லியடி
MMV Road, Nelliady
TP : 021 4924118

(சி/8288)(2.6)



8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சங்கரப்பிள்ளை வரதராசா

(வள்ளல் வரதன் - நகரசபை, சாவகச்சேரி)



அன்னை மடியில் 02*06*1953
அன்னை தவிக்க 10*04*2005
திதி: துதியை
(12.04.2013)

அன்னையவள் அரவணைக்க குடும்பத்தின் முத்தாய்,
மூத்தமகனாய் வம்சத்தின் பெயர்காக்க வந்துதித்தவரே!
வள்ளலாய், வழிகாட்டியாய் குடும்பத்துடன் எமது ஊரையும்
வளர்த்து வாழ வைத்த சிகரமே!
எங்கள் அப்பா என்று நாம் சொல்லி மகிழ
வாழ்ந்துகாட்டிய எம் தெய்வமே!

கடின உழைப்பையும், கண்ணியத்தையும், தன்மானத்தையும்
அன்புடன் எமக்கு எடுத்துரைத்த எம் வாழ்க்கையின் கருவே!
பெற்றவள் இன்றும் வரதா, வரதா என்று உங்கள் நினைவுடனே
உங்களுடன் உறவாடி வாழ்கின்றாரே!
நேசமிகு கணவராய் நேர்மையுடன் வாழ்ந்து அனைவரையும்
நெகிழ வைத்த அண்ணலே!

என் பிள்ளைகள், என் வாரிசுகள் என்று நிமிடத்துக்கு நிமிடம்
பிள்ளைகளின் நினைவையே சுவாசித்து வாழ்ந்த பாசக்கடலே!
எட்டுப்பேருடன் கூடப்பிறந்து அனைவருக்கும் அண்ணனாய்
அரவணைத்து வலம் வந்த அருமை சகோதரனே!
உங்களது உழைப்பே நாம் வாழும் எம் வாழ்க்கை!

எம்மை நீங்கள் விட்டுச் செல்ல எப்படி முடிந்தது என்று எம்மால் கேட்க முடியவில்லை!!!
எம்மை விட்டு நீங்கள் செல்ல உங்கள் இறுதி மூச்சு வரை நீங்கள் விரும்பவில்லை என்பதே நியம்!
உங்கள் நினைவுடன் உங்கள் பணி தொடரும்
வாழும் நீங்கள் விட்ட விழுதுகள்!
அப்பா இன்று உங்களுக்கு எட்டாவது அகவை நினைவஞ்சலி எழுதும் என் கரங்கள்
உங்களுக்கு 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தையே எழுதத் துடிக்குதப்பா...... என் செய்வேன்?
ஆண்டவன் அடியில் அர்ப்பணமாகிய உங்களை எம் நெஞ்சங்கள்
என்றும் தாங்கியவாறே கலங்கி நிற்கின்றன!

பிறப்பிற்கு அர்த்தம் தந்த உங்களை மீண்டும் மீண்டும் கண்டு உறவாடத் துடிக்கும்
உங்கள் குடும்பத்தினர்.

சந்நிதி இல்லம்
கைதடி கிழக்கு, கைதடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலஸ்தீன் மதவிவகார அமைச்சர் மஹ்மூத் அல் அப்பாஸ் தலைமையிலான தூதுக் குழுவினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தபோது...

# குப்பைகளை வகைப்படுத்தி சேகரிக்கும் புதிய திட்டம்

## ஜூனில் நடைமுறைக்கு

கொழும்பு,ஏப்.12

கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் குப்பைகளை வகைப்படுத்திச் சேகரிக்கும் புதிய திட்டமொன்று எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது என்று கொழும்பு மாநகரசபை முதல்வர் ஏ.ஜே.எம். முசம்மில் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு நகரிலுள்ள மக்கள் குப்பைகளை வகைப்படுத்தி, மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியாத குப்பைகளை மாத்திரமே வழங்கவேண்டும். அவ்வாறான குப்பைகள் மாத்திரமே எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து சேகரிக்கப்படும்.

பிளாஸ்டிக், கண்ணாடி, பேப்பர்கள் போன்ற மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய குப்பைகளை வகைப்படுத்துவதற்கு ஏதுவாக பொது இடங்களில் சேகரிக்கும் கொள்கலன்கள் வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக கொழும்பு நகரிலுள்ள மக்களுக்கு சனசமூக நிலையங்களின் ஊடாக அறிவுறுத்தப்படும். குப்பைகளை வகைப்படுத்துவதற்கான விசேட பைகளும் வழங்கப்படும்.

கொழும்பில் நாளாந்தம் 750 தொன் குப்பை சேகரிக்கப்படுகிறது. குப்பைகளை அகற்றுவதற்கு மாதமொன்றுக்கு ஒரு கோடிக்கும் அதிகமான பணம் செலவாகிறது. குப்பைகளை வகைப்படுத்தி வழங்குவதன் மூலம் சேகரிக்கப்படும் குப்பையின் தொகையை 25 வீதமாகக் குறைக்க முடியும். -என்றார்.(ச)

# நல்லிணக்கச் செயற்பாடுகளில் இலங்கை இறங்க வேண்டும்

## அமெ.படைத் தளபதி வலியுறுத்தல்

வொஷிங்டன்,ஏப்.12

பல ஆண்டு காலம் உள்நாட்டுப் போருக்கு முகம் கொடுத்து வந்துள்ள இலங்கை அதன் சமீபகால வரலாற்றை வேகமாகக் கடந்து செல்லும் வகையில் நல்லிணக்கச் செயற்பாடுகளில் இறங்க வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் சாமுவல் லொக் லியர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் அமர்வொன்றின் முன் விளக்கமளிக்கையிலேயே நேற்றுமுன்தினம் அட்மிரல் சாமுவேல் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அமெரிக்க நாடாளுமன்றக் குழுவின் முன் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்தியாவில் மும்பையில் நடந்த குண்டுத் தாக்குதலுக்கும் வேறு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் காரணமாக இருந்துள்ள லக்ஷர்-இ-தொய்யபா தென் ஆசியாவில் மிக சக்திவாய்ந்த அமைப்பாகச் செயற்பட்டு வருகிறது என்று கூறினார்.

**இந்திய-சீனா நாடுகளுக்கிடையில் போர் ஒன்று மூழ்வதற்கான சாத்தியமோ காரணமோ காணப்படவில்லை**

இந்திய சீன உறவுகள் பற்றி அட்மிரல் சாமுவேல் தெரிவிக்கையில்,

இரு நாடுகளும் தமது பொருளாதார வர்த்தக உறவுகளை சமீப காலத்தில் விஸ்தரித்துக் கொண்ட போதிலும் இரு நாடுகளுக்குமிடையில் எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. ஆயினும் இரு நாடுகளுக்குமிடையில் போர் ஒன்று மூழுவதற்கான சாத்தியமோ காரணமோ காணப்படவில்லையென்றும் சொன்னார். (த-ப)

# தூக்குத் தண்டனை வழங்குவது குறைவு

## சர்வதேச மன்னிப்புச் சபை தகவல்

கொழும்பு,ஏப்.12

உலகளாவிய ரீதியில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகின்றமை குறைவடைந்துள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

எனினும் அமெரிக்கா, இந்தியா, சீனா, சவுதி அரேபியா உள்ளிட்ட சில நாடுகளில் இன்னும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகின்றது. சீனா, ஈராக், ஈரான், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் கடந்த வருடம் அதிக எண்ணிக்கையானோருக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டதாக தரவுகள் குறிப்பிடுகின்றன.

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகின்ற நடைமுறையை நிறுத்துவதற்கு பல்வேறு நாடுகள் தற்போது இணங்கியுள்ளன. தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுகின்றமை மனித உரிமைகளையும், மனிதாபிமானத்தையும் மிக மோசமாக மீறும் செயல் என்று சர்வதேச அமைப்புக்கள் பல தெரிவித்துள்ளன. இந்தநிலையில், தூக்குத்தண்டனை நிறைவேற்றும் நாடுகளின் எண்ணிக்கையில் தற்போது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறைக்குள் விழுந்தது கஞ்சா பந்து!

**கைதியொருவரைக் குறி வைத்து மர்ம நபரொருவர் பந்தை வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.**

கொழும்பு, ஏப்.12

மதிலுக்கு மேலாகப் பறந்து வந்த பந்துக்குள்ளிருந்து கஞ்சா மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் பொறளை மகஸின் சிறைச்சாலையில் கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாகச் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையைச் சுற்றி அதிக பாதுகாப்பு போடப்பட்டுள்ளாதால் விடுமுறை தினமான குறித்த தினத்தில் திட்டமிட்டே போதைப் பொருள் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதியொருவரைக் குறி வைத்து மர்ம நபரொருவர் இந்தப் பொருளை வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

எனினும் அங்கு காவல் கடமையிலிருந்த அதிகாரியிடம் அந்தப் பந்து மாட்டியுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-16-22)

# மடுவுக்கு இம்முறை ரயிலில் செல்லலாம்

## இரவு பகலாகப் புனரமைப்புப் பணிகள்



கொழும்பு, ஏப்.12

மன்னாரிலிருந்து மடுவரையிலான ரயில் பாதையைச் செப்பனிடும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

மடுமாதா ஆலய பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளதால், பயணிகளின் நன்மை கருதியே இந்தப் பணிகள் அவசர அவசரமாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

போரினால் சேதமடைந்த மதவாச்சி ரயில் நிலையத்திலிருந்து தலைமன்னார் இறங்குதுறை வரையான சுமார் 106 கிலோமீற்றர் நீளமான இந்தப் பாதையைச் செப்பனிடும் பணிகளை இந்திய நிறுவனமான 'இர்கோன்' மேற்கொண்டு வருகிறது.

இதில் முதற்கட்டமாக மதவாச்சியிலிருந்து மடு வரையான 43 கி.மீற்றர் பாதையின் திருத்தப் பணிகள் மடு தேவாலய வருடாந்த பெருந்திருவிழாவுக்கு முன்னர் முடிக்கப்பட்டு ரயில் சேவை ஆரம்பிக்கப்படுமென நம்பப்படுகிறது.

இதன்மூலம் மடுதேவாலயத்துக்கு மதவாச்சி ஊடாகச் செல்லும் பயணிகள் பெரிதும் நன்மையடைவரென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பாதை திருத்தப் பணிகள் தற்போது செட்டிகுளம் பகுதியில் இரவு பகலாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-16-22)

# இ.போ.ச. சபை ஊழியர்கள் ஒருவார பணிப் புறக்கணிப்பு

## ஐம்பது லட்சம் இழப்பு

கொழும்பு, ஏப்.12

கதிர்காமம் இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போ ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒருவார காலப் புறக்கணிப்பால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சுமார் 50 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று டிப்போ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்பு கடந்த மார்ச் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

கடந்த 2012 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததால் கடந்த டிசெம்பரில் சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பொன்றை மேற்கொண்டிருந்த குற்றச்சாட்டு மூலம் ஊழியர்கள் ஏழுபேர் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அதனையடுத்தே இந்தப் பணிப் புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

சாரதிகள் மற்றும் நடத்துநர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணிப்புறக்கணிப்பில் கடந்த 2 ஆம் திகதி தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த ஊழியர்களும் இணைந்து கொண்டனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்பால் புத்தாண்டை முன்னிட்டு தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக கிராமத்திலிருந்து நகரத்துக்குச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# மிஹின் லங்கா விமான சேவைகளை நிறுத்தத் தீர்மானம்

கொழும்பு,ஏப்.12

திருச்சி மற்றும் கொழும்பு நகரங்களுக்கு இடையிலான மிஹின் லங்காவின் வாராந்த விமான சேவைகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சென்னையைத் தளமாக கொண்டு இயங்கும் பொது வர்த்தக முகவர் நிறுவனமான டிரான்ஸ்லகாவின் நிறைவேற்று பணிப்பாளர் எஸ்.கே.மிட்டல் தெரிவித்தார்.

அதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியுடன் சேவைகள் நிறுத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் திருச்சிக்கு இடையிலான சுற்றுலாப் பயணிகளின் சஞ்சாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டமையே இதற்கான காரணம் என்று அவர் கூறினார்.

தற்போது வாராந்தம் 4 தடவைகள் மிஹின் லங்கா விமானங்கள் கொழும்பிலிருந்து திருச்சி நோக்கி பயணிக்கின்றன. அண்மையில் தமிழகத்தில் இலங்கை சுற்றுலாப் பயணிகளும், யாத்திரிகர்களும் தாக்கப்பட்டமையை அடுத்து மிஹின் லங்கா ஊடாக பயணிப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதுதவிர, ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசிய நாடுகளுக்கு கொழும்பிலிருந்து திருச்சி, ஷார்ஜா மற்றும் பஹ்ரேன் ஊடாக பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கன் விமான சேவை வாராந்தம் 18 சேவைகளை கொழும்பு மற்றும் திருச்சி நகரங்களுக்கு இடையில் மேற்கொள்கின்றபோதும், எந்தவொரு இந்திய வானூர்தி சேவையும் இரு நகரங்களுக்கு இடையிலும் சேவையில் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய வருடப் பிறப்பு கருமம்

## திருக்கணித பஞ்சாங்கம்

நந்தன வருஷம் பங்குனி மாதம் 31ஆம் திகதி (13-04-2013) சனிக்கிழமை பின்னிரவு உதயாதி நாழிகை 48.36 மணி 01.29 இல் விஜய என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் கார்த்திகை 4-ம் பாதம், திதி பூர்வபட்ச சதுர்த்தி, அமிர்தசித்த யோகம். இது 60 வருட சுற்றுவட்டத்தில் 27-வது வருஷமாகும். அன்று இரவு நாழிகை 38.36 (மணி 09.29) முதல் பின்னிரவு நாழிகை 58.36 (மணி 5.29 விடியும்) வரையும் மேட சங்கிரமண புண்ணிய காலம் எனப்படும். வருஷம் பிறக்கும் போது உதய லக்கினம் "மகரம்" ஆக அமைகிறது.

புதுவருஷத் தினமான ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நித்திரை விட்டெழுந்து சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து, தலையில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானம் செய்து, நீலநிறப் பட்டாயினும் அல்லது நீலக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினும் தரித்து, இந்திர நீலம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலான மங்கலப் பொருள்களைத் தரிசித்து, விநாயகர் முதலிய இஷ்ட குல தேவாராதன தரிசனங்கள் செய்து, தத்தம் இல்லங்களில் புதுவருட சூரியனுக்கு பொங்கல், பூஜை வழிபாடுகள் செய்து, குரு, பெற்றோர் முதலான பெரியோர்களை வணங்கி, பிதிர் விரதானுசாரிகள் சிராத்தம், தர்ப்பணம் என்பன செய்து, நண்பர்கள், விருந்தினரை வரவேற்று, சுற்றத்தினருடனிருந்து எள்ளன்னம், வேப்பம்பூ, நெல்லிக்காய்த் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனம் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஷ்பாதிகளையணிந்து, புதுப் பஞ்சாங்க பலன்களைக் கேட்டு புது வருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்கலகரமாக வாழ்வார்களாக.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்:** கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1-ம், 2-ம் கால்கள், உத்தரம், சித்திரை 3-ம், 4-ம் கால்கள், சுவாதி, விசாகம் 1-ம், 2-ம், 3-ம் கால்கள், உத்தராடம்

**மருத்து நீர்:** தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

### கைவிசேடம்

சித்திரை 1 ஞாயிறு இரவு 10.26 தொடக்கம் 12.02 வரை
2-திங்கள் காலை 6.02 தொடக்கம்07.14 வரை
2 திங்கள் காலை 9.14 தொடக்கம் 10.01 வரை

## வாக்கிய பஞ்சாங்கம்

கலியுகாதி சுத்ததினம் 1867930, நாடி 44 விநாடி 41, தற்பரை 15 இக்குச் சரியான நந்தன வருடம் பங்குனிமாதம் 31 ஆம் திகதி (13.4.2013) சனிக்கிழமை முன்னிரவு நாடி 44 விநாடி 41 (மணி 11-58) பூர்வபக்க சதுர்த்தித் திதியில், கார்த்திகை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் ஆயுஷ்மான நாமயோகத்தில், வணிசக் கரணத்தில், தனு லக்கினத்தில், கன்னி நவாம்சத்தில், சூரியன் காலவோரையில், குரு சூக்குமவோரையில், ராசத குணவேளையில் நட்சத்திர பக்ஷியாகிய வல்லூறு நடைத்தொழிலும் சூக்கும பக்ஷி அரசுத் தொழிலும் செய்யும் காலத்தில் இந்தப் புதிய விஜய வருடம் பிறக்கின்றது. அன்று முன்னிரவு நாடி 34 விநாடி 41 (மணி 7-58) முதல் அன்று பின்னிரவு நாடி 54 விநாடி 41 (மணி 3-58) வரை விஷு புண்ணிய காலமாகும்.

இந்தப் புண்ணியகாலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் புங்கமிலையும், காலில் ஆலமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து மஞ்சள், நீல நிறமுள்ள பட்டாடையாயினும், மஞ்சட்கரை, நீலக்கரை அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து புஷ்பராகம், நீலக்கல் இழைத்த ஆபரணமணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேசுவரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, இயன்ற தானதருமங்களை செய்து, குரு பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று, பந்து மித்திரர்களுடன் அளவளாவி, அறுசுவை அமைந்த உண்டிகளுடன் வேப்பம்பூ, பிட்டு என்பவை சேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து புதிய வருட பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரிய தவற்றாற் பெற்ற மானிடப் பிறவியிற் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்கலகரமாக சயனிக்கக்கடவர்.

மறுநாளாகிய விஜய வருடம் சித்திரை மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைகறையிற் துயிலெழுந்து முன்சொல்லிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து, நித்திய நைமித்திய கருமங்களை முடித்து, வீடுகளில் சூரியனுக்கு பொங்கல் பூஜைகள் செய்து முன்போல மங்கலமாக வாழக்கடவர்.

**மருத்து நீர் :** தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு, இவைகளை சுத்த ஜலத்திட்டு காய்ச்சிக்கொள்க.

**சங்கிரம தோஷநட்சத்திரங்கள்:** கார்த்திகை, ரோகிணி,மிருகசீரிடம் 1,2 ஆம் கால்கள் உத்தரம், சித்திரை 3 ஆம் 4 ஆம் கால்கள், சுவாதி விசாகம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் கால்கள், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து தானதரும வழிபாடு செய்துசங்கிரம தோஷ நிவர்த்தி செய்யக்கடவர்.

**குருசார பலன்:** குரு வருஷாதியாக வைகாசி மாதம் 13 ஆம் திகதி வரை இடபராசியில் நிற்கையால் நன்மழை அகவிலை சமம், பசுக்கள் சிசுக்கள் கர்ப்பஸ்திரீகளுக்கு பீடையுமுண்டாம் மிதுனராசியில் நிற்கையால் மழைக்குறை இராஜகலகம், சோரபயம் உண்டாம்.

**சனிசார பலன்:** சனிவருடம் முழு மலிதுலாம்,நிறுப்பன ஒறுக்க லும் உண்

### கைவிசேடம்

சித்திரை 1 - ஞாயிறு
முற்பகல் 10.04 தொடக்கம் 12.03 வரை
பிற்பகல் 12.15 தொடக்கம் 2.10 வரை
பிற்பகல் 2.22 தொடக்கம் 4.11 வரை
இரவு 8.25 தொடக்கம் 9.04 வரை

சித்திரை 2-திங்கள்
முற்பகல் 9.14 தொடக்கம் 9.48 வரை
முற்பகல் 10.09 தொடக்கம் 11.58 வரை



சாவகச்சேரி, நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் சுவாமி தேரில் எழுந்தருளி உலா வருகிறார். (ம-9)



பருத்தித்துறை வியாபாரிமூலை பழவத்தை காளியம்மன் ஆலய வருடாந்தத் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது. அதன்போது காளியம்மன் தேர் வீதி வலம் வருவதைக் காணலாம். (ந)

## வருடாந்த பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.12

புங்குடுதீவு கண்ணகிபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் (கண்ணகி அம்மன் கோயில்) ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம்பெறும் திருவிழாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ந-7)

## நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

நவாலி, ஏப்.12

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் வே.தம்பாப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி தேமலோஜினி குமரன் கலந்து கொள்வார். (ந-100)

## சிரமதானம்

குருநகர், ஏப்.12

கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை சிரமதானம் நடைபெற்றுள்ளது.

இல்லத்தில் பணிபுரியும் ஊழியர்கள், எவரெடி சுத்திகரிப்புத் தொழிலாளர்களுடன் இணைந்து இந்தப் பணியில் ஈடுபட்டனர். இவர்களுடன் முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்களும் இணைந்து தாம் தங்கியுள்ள விடுதிகளின் தூசிகளைத் துடைத்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனின் அனுமதியுடன் இந்தச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. (ந-51)

## தர்மம் செய்வோம்

கர்மத்தைப் போக்க தர்மம் ஒன்றே உகந்த வழி. ஆதலால் இயன்றளவு முடியுமானவரை மனிதன் தர்மம் செய்து வாழப் பழகிக் கொள்ளவேண்டும். பஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டு அதனை பாவ மன்னிப்பு மூலம் போக்க முடியுமா?

நாம் செய்த வினைகளை நாமே அனுபவித்தாக வேண்டும். இதேதான் இந்து சமயம் உறுதியாகக் கூறுகின்றது. வினை விதைத்தவன் வினைதான் அறுக்க முடியும். தினை அறுக்க முடியாது. இவைகளில் இருந்து விடுபட நன்மையான காரியங்களை நாடுங்கள். தான தர்மங்களில் தாமதியாதீர்கள். தர்மம் தக்க சமயத்தில் தலை காக்கும். தர்ம காரியங்களை இன்றே அதை நன்றே செய்வோம்.

ஞானக்கதிர்

## முதியவர்களுக்கு உலர் உணவு

யாழ்ப்பாணம், ஏப்.12

அமரர் சின்னையா பரராசசிங்கம் ஞாபகார்த்தமாக நவாலியில் உள்ள 50 முதியவர்களுக்கு அண்மையில் உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் உபதலைவர் செல்லத்துரை மகேந்திரன் முயற்சியினால் நவாலியில் உள்ள முதியவர்களுக்கு இந்த உலர் உணவு பொதிகள் விநியோகிக்கப்பட்டன

அமரர் பரராசசிங்கம் வாழும் காலத்தில் பல்வேறுபட்ட பொதுச் சேவையை முன்னெடுத்தவர்.

இவரது மறைவுக்குப் பின்னர் இவரது கடந்த கால சேவையை மையமாக வைத்து இவரது வெளிநாட்டு உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் முதியவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

(எ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
வன்னிப் பணிமனை:
9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வீதி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
தானை வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' மாவடி சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'ஜோதி க் சென்டர்' மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிசைாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி லைலக்சிற்றி' முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அம்பரசன்' சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571.

# கலிகாலக் கடவுள் கண் திறப்பதில்லை

அசைவு அசைவாக இரைதேடிக் கொண்டிருந்தது அந்தப் பன்றி. பன்றியின் வயிறு நிரம்பினால் மட்டுமே அதனை நம்பியிருக்கும் குட்டிகளுக்கும் வயிறாறப் பால் கிடைக்கும். குட்டிகளுக்காக இயலுமான வரை தன் இரைதேடும் படலத்தைப் பன்றி தொடர்ந்து கொண்டிருந்த போது ஒரு வேடனின் பார்வையில் சிக்க நேர்ந்து விட்டது. விடுவானா வேடன். அவனின் அம்பில் சிக்கி உயிர்துறந்தது பன்றி.

தாய்ப் பன்றியைக் காணாமல் குட்டிகள் துடித்தன. பசியால் தவித்தன. ஒரு கட்டத்தில் பிரிவும், பசியும் மேலெழ அவை அழத் தொடங்கின. குட்டிகளின் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் சிவபெருமான், தாய்ப் பன்றியாக உருமாறி குட்டிகளின் பசியைப் போக்கினார்.

இதெல்லாம் பாடப் புத்தகங்களில், புராணங்களிலும் சொல்லப்பட்ட கதை. இப்போதும் கடவுளுக்கு வேலைப் பளு அதிகம் போலும். சிறுசுகளின் பசிக் கதறல் கடவுளின் காதுகளில் விழுந்தாலும் அவர் கண்திறக்க மறுக்கிறார்.

அண்மையில் சகல வறுமையும், மூட நம்பிக்கையும் ஒரு சிசுவின் உயிரைக் காவு கொண்டுள்ளன. புத்தூரில் கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணொருவரின் ஏழு மாதச் சிசுவுக்கு வயிற்றோட்ட நோய் வந்துள்ளது. ஆனால் உரிய சிகிச்சை அளிக்க அந்தப் பெண்ணின் கையில் காசு இல்லை. வேறு வழியின்றி "கடவுள் என்ர பிள்ளையை சுகப்படுத்தினால் உனக்குப் பொங்கல் வைப்பன்" என்று நேர்த்திக் கடன் வைத்து கடவுள் தலையில் பழியைப் போட்டு இருந்துவிட்டார்.

ஆனால் இந்தக் கலிகாலத்தில் பன்றிக்கு கருணை காட்டிய கடவுள் அந்த ஏழு மாதச் சிசுவின் வயிற்றோட்டத்தைத் தீர்க்க மறந்துவிட்டார். ஒருநாள் குழந்தை நோயின் தீவிரம் அதிகரித்து உயிரிழந்து விட்டது. அந்தப் பெண்ணுக்கு சட்டம், விசாரணை என்பன பற்றிய புரிதல்கள் இல்லையாதலால் உறவினர்களைக் கூட்டி மரணச் சடங்கை செய்து உடலை மயானத்தில் புதைத்து விட்டார்.

ஆனால் விடயம் அறிந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், தாயாரையும் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். இவ்வாறு வீடுகளில் இறப்பு ஒன்று நிகழும்போது, அது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதோ இல்லாவிட்டால் சட்ட ரீதியான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதோ நம்மில் பலருக்கும் தெரிந்திருப்பதில்லை.


யாரேனும் உங்களுக்கு வேண்டாதவர்கள் குறித்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாக ஒப்புக்கேனும் ஒரு புரளியைக் கிளப்பி விட்டால், அது உங்களுக்கு பாரதூரமான பிரச்சினைகளைக் கொண்டு வந்துவிடும். எனவே இத்தகைய சம்பவங்களின்போது உடனடியாக பொலிஸிக்குத் தெரியப்படுத்துவதே எதிர்காலப் பிரச்சினைகளில் இருந்து தப்பிப்பதற்கான வழியாகும். இல்லாவிட்டால் இயற்கை இறப்புகள் கூட கொலை என்று திரிவுபடுத்தப்பட்டு இறந்தவரின் உறவுகளுக்கு தேவையற்ற பிரச்சினைகளை பரிசளித்துவிடக்கூடும். எனவே இறப்புகள் பற்றிய தகவல்களை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தல் பற்றிய விழிப்புணர்வை உரியவர்கள் சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும்.

# குடிதண்ணீர் பிரச்சினை தீருமோ? ஏங்கும் தீவகப் பிரதேச மக்கள்

■ தீவகன்

கோடை காலம் ஆரம்பித்துவிட்டது. குடிதண்ணீருக்கே பஞ்சம். இப்படிப் புலம்பித் தவிக்கிறார்கள் தீவகப் பிரதேச மக்கள். நமது வாழ்வில் குடிதண்ணீர் அன்றாடம் தேவையாகவே இருக்கிறது. இவர்கள் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினையாக மாறி வருகிறது குடிதண்ணீர். அங்கு தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபையினரால் குடிதண்ணீர் திட்டத்தின் மூலம் பைப் (லைன்) வழியாக குடிதண்ணீர் ஒவ்வொரு வீட்டுக்கும் செல்கிறது. ஆனால், அங்கே பல வீடுகளுக்கு இன்னமும் கொடுக்கப்படவில்லை. அநேக மக்கள் விண்ணப்பித்தும் இது வரை எதுவித நடவடிக்கைகளும் தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படவில்லை. வேலணைப் பிரதேசத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறையைக் குறைக்க தேசிய குடிதண்ணீர் வடிகாலமைப்புச் சபையினர் ஒரு புதிய நவீன தொழில் நுட்ப முறையைப் புகுத்தி



யிருக்கிறார்கள். அந்தத் தொழில் நுட்பத்தில் பைப் லைனில் மீற்றர் பொருத்தி ஒவ்வொரு வீட்டுக்கு செல்கிறது. இது குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அதற்கும் மாதாந்த கட்டண அறவீடு உண்டு. சில வீடுகளில் கிணறு இருக்கிறது. கோடை காலங்களில் கிணறு வற்றிய கிணறாகவே காட்சியளிக்கிறது. எப்படிச் சமாளிப்பார்கள் தீவகத்தில் வாழும் மக்கள்? அதுவும் குறிப்பாக வேலணைத்துறையூர், கண்ணபுரம், அம்பிகைநகர் போன்ற பின்தங்கிய கிராமங்கள். இந்தப் பிரதேச பொதுமக்களது குடிதண்ணீர் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பது குறித்து அக்கறை காட்டிச் செயற்பட வேண்டியது, பிரதேச சபையினரின் முக்கிய பொறுப்பு ஆகும். இந்தப் பிரச்சினையை எப்படி கையாளப்போகின்றனர் வேலணைப் பிரதேச சபையினர்.

அப் பகுதிகளில் கடும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் நிலையில் அங்கு பிரதேச சபைகளில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அரசியல் [illegible] மைப்புச் சபை அப் பிரதேசத்தில் என்ன செய்கிறது? தொழில் வளர்ச்சியை மட்டும் முன்னிலைப்படுத்திக் கொண்டு கடற்தொழிலுக்கு தேவையானவை, விளையாட்டு நிகழ்வுகளுக்கு தேவையானவைகளை மட்டுமே செய்கிறது. பிரதேச செயலக அலுவலகக் கூட்டங்களில் அபிவிருத்தி குறித்து மட்டும் கதைத்தால் போதுமா?

பிரதேச சபை உறுப்பினர்கள் தங்கள் அரசைப் பயன்படுத்தி குடிதண்ணீருக்குக் குளங்களை மட்டும் புனரமைத்து எதிர்வரும் காலங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் இருப்பதற்கே வழி செய்கின்றனர்.

நெடுந்தீவு மக்களுக்கும் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. வேலணை சாட்டியில் இருந்து தான் குடி தண்ணீரைப் பெறுகின்றனர்.

வேலணைப் பிரதேச செயலகக் கூட்டங்களில் குடிதண்ணீரை எங்கேயோ இருந்து கொண்டு வரலாம் என்று சில அரசியல் தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். எவ்வளவு ஒரு கீழ்த்தரமான பேச்சு. இது பேச்சளவில் மட்டும் நின்றுவிடும். செயல் அளவில் ஒப்பேறாது.

வேலணைப் பிரதேச சபை, அங்கே ஒரு பெரிய குடிதண்ணீர் தொட்டியை ஒன்றை அமைப்பதே காலச் சிறந்தது ஆகும். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக நகர மத்தியில் பெரிய குடிதண்ணீர் தாங்கியை காணக்கூடியதாக இருக்கிறது. நகர்ப்பகுதியில் வாழும் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் நல்ல தண்ணீர் கிணறு உள்ளது. அப்படியிருந்தும் மக்களின் தேவைக்காக இவ்வளவு மிகப் பெரிய தண்ணீர் தாங்கியை அமைத்து கொடுத்திருக்கிறார்களே.

அங்கு வாழும் மக்கள் பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியதாக இருக்கிறது அதில் இன்னொன்று வேலைவாய்ப்பு. இதைத் தீர்க்க பிரதேச சபை என்ன முடிவு எடுத்துக்கொள்கிறது. பிரதேச சபையிடம் வேலை வாய்ப்பை பதிவு செய்து கொள்ளும் முறையும் ஒன்று இருக்கிறது. அதிலும் முறைகேடு உள்ளது. இதைப்பற்றி பிரதேச சபைத் தலைவரிடம் கேட்டால் வேலை ஒன்றும் இப்போதைக்கு இல்லை என்றே கூறுகிறார். அப்படி வேலை அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டால் தங்கள் பிரதேச சபையில் வேலை செய்யும் தற்காலிக பணியாளர்களே அந்த அரச வேலையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றே ஒரு பதிலை கூறிமுடிக்கிறார். தீவக பிரதேச இளைஞர்கள், பெண்கள் அரச வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வது என்பது கடினமான விடயமாக உள்ளது. பல்கலைக் கழகத்திற்கு சென்று பட்டப்படிப்பை முடித்தால் மட்டுமே வேலை வாய்ப்பு பெற்றிட முடியும் என்று கருத்து அங்கேயும் நிலவுகிறது. க.பொ.த சாதாரணதர, உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சிபார்சு முறையில் அரசாங்க சேவையில் இணைத்துக்கொள்கிறார்கள். பிற மாணவர்களின் நிலை என்ன? கடைகளில் தொழிலாளர்களாகவும் மேசன், தச்சுத்தொழில், கடற் தொழில்கள் போன்ற வேலைகளுக்கே அமர்த்தப்படுகின்றார்கள். சிலர் வேலை தேடி வெளிநாடுகளுக்கே செல்கிறார்கள். நமது தமிழ்ச் சமூகம் இனி வரும் காலங்களில் எப்படி வளமாக வாழப் போகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது.

யாழ்.மத்தியில் இருந்து வெகு தூரங்களில் இருக்கும் வளமான ஊர்களுக்கு அரசாங்கம் தொழிற் பேட்டையை அமைத்துக் கொடுக்க வேண்டும். இதன் மூலமாக வேலைச் சுமையை ஓரளவு வேணும் குறைக்க முடியும். எல்லாத் தொழிற்சாலைகளையும் அரசாங்கம் கொழும்பு, யாழ் நகரிலும், சிங்கள பிரதேசங்களிலும் அமைத்துவிட முயல்கிறதே தவிர தமிழ் மக்கள் செறிந்து வாழும் தீவகப்பிரதேசங்களில் அமைத்துக்கொள்ள விரும்பவில்லை.

மறுபுறத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை வாசி மக்களின் அடுத்தபடியான தலையிடி தரும் பிரச்சினையாகவே காணப்படுகிறது. இதற்கு என்ன வழியைக் காட்டப்போகிறது அரசு? பொருள்களின் விலை பல மடங்காக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இது தமிழ் மக்களைப் பொருளாதாரச் சிரமங்களுக்கு உட்படுத்தி வருகிறது. தற்போது முன்னர் போல இந்த நாட்டில் ஆயுதப்போராட்டங்கள் எதுவும் இல்லை. அரசு, அபிவிருத்தி என்ற போர்வையில் பொருட்களின் விலையைக் கூட்டுவது எப்படி பொருத்தமாகும்? எப்படி தமது பொருளாதாரச் சிரமத்தை தமிழ் மக்கள் வென்றெடுக்க போகிறார்களோ தெரியவில்லை.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரதேசமும் முன்னேறினால் மட்டுமே ஒவ்வொரு மாவட்டமும் முன்னேற முடியும் ஒவ்வொரு மாவட்டமும் முன்னேறினால் மட்டுமே இலங்கை நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற முடியும்.

யாழ்.குடாநாட்டில் பத்திரிகைகள் தீவக பிரதேச குடி தண்ணீர் பிரச்சினைகளைப்பற்றி இன்னமும் எழுதிக்கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் போர் முடிந்தபாடாயில்லை.

தீவகத்தில் மின்சார பிரச்சினை ஓரளவு தீரக்கூடிய நிலை, தெரிகிறது. ஆனால் குடி தண்ணீர் பிரச்சினை முடிந்தாற் போல தெரியவில்லை.

தீவக மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினைகளில் குடிதண்ணீர் பிரச்சனையை முக்கியமான எப்படியோ எல்லா வீடுகளுக்கும் குடி தண்ணீர் கிடைக்கிறது தானே என்று கூறிக் கொண்டு இனி மேலும் இருக்காது இப் பிரச்சினையில் தேசிய குடிநீர் வடிகாலமைப்புச் சபையினரும் இதற்கான முயற்சியை எடுத்து நடைமுறையில் இறங்க வேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** முக்கிய விடயங்களை நீங்களே நேரடியாகச் சென்று செய்வது நல்லது. குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். யாரையும் தாக்கிப்பேச வேண்டாம். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்யாதீர்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**இடபர்:** உணர்ச்சிவேகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வந்துச் செல்லும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மிதுனர்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்துகொள்வார்கள்.

**கடகர்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதர, சகோதரிகளால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கர்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாக செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**கன்னி:** சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். அடுத்தவர்களை குறை கூறுவதை நிறுத்துங்கள். சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் பதற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**நாளை**

*பங்குனி-31 சனிக்கிழமை 13.04.2013*
*திதி: திருதியை மு.இ. 07.08 வரை*
*நட்சத்திரம்: கார்த்திகை பி.இ. 03.30 வரை*
*சுபநேரம்: 03.06- 04.36 வரை*
*இராகுகாலம்: 09.06- 10.36 வரை*

**துலாமர்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகர்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**தனுசு:** நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. கனவுத்தொல்லை, தூக்கமின்மை விலகும். பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளை சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**மகரர்:** சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவினர் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**கும்பர்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மீனர்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | 2 | 8 | 5 | |
| | 1 | 4 | | 8 | | | | |
| | | | | | | | 7 | 4 |
| | 9 | | | 5 | 4 | 1 | 2 | 6 |
| | | | 9 | | 3 | | | |
| 8 | 4 | 2 | 7 | 6 | | | | |
| 9 | 2 | | | | | | | |
| | | | | 3 | | 4 | 1 | |
| | 6 | 3 | 2 | 1 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 9 | 2 | 4 | 8 | 7 | 1 | 5 |
| 1 | 7 | 2 | 9 | 5 | 6 | 8 | 4 | 3 |
| 8 | 4 | 5 | 3 | 7 | 1 | 6 | 9 | 2 |
| 3 | 9 | 1 | 6 | 8 | 7 | 5 | 2 | 4 |
| 5 | 6 | 7 | 1 | 2 | 4 | 9 | 3 | 8 |
| 4 | 2 | 8 | 5 | 9 | 3 | 1 | 6 | 7 |
| 7 | 5 | 6 | 4 | 1 | 2 | 3 | 8 | 9 |
| 2 | 8 | 3 | 7 | 6 | 9 | 4 | 5 | 1 |
| 9 | 1 | 4 | 8 | 3 | 5 | 2 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

MEGA SALE

சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு
மாபெரும்
விற்றுத் தீர்த்தல்



சகல விதமான புடைவை
தினுசுகளை 5000/= ரூபாவுக்கு
மேல் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களின் பற்றுச்
சீட்டு இலக்கம் (Bill Number)
குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்
பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு

முதலாம் பரிசு குளிர்சாதனப் பெட்டி
2 ஆம் பரிசு - DVD Player
3 ஆம் பரிசு - Stand Fan
4 ஆம் பரிசு - Mixer Grainder
5 ஆம் பரிசு - Rice Cooker



மேலும் 5 ஆறுதல் பரிசுகள்
இன்றே விரையுங்கள்.
5000 ரூபாவுக்கு
உடு புடைவைகள் கொள்முதல் செய்து
அதிர்ஷ்டசாலியாகுங்கள்.



(வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளின் சிட்டை இலக்கம் (Bill Number)
18.04.2013 வியாழன் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்)

யாழ் ரெக்ஸ் YARL TEX
13 A, நவீன சந்தை வெளிபுறம், சாவகச்சேரி
(C/8277)

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

LIGHT DISPELS DARKNESS

24ஆவது வருடாந்தப்
பொதுக்கூட்டம்

தலைவர்: க. சண்முகசுந்தரம்
இடம்: யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
(பேராசிரியர் அ.துரைராசா நினைவு மண்டபம்)
காலம்: 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி

நிகழ்ச்சி நிரல்
1. மங்கல விளக்கேற்றல்
2. இறைவணக்கம்
3. தலைமையுரை
4. அதிபர் உரை
5. 23ஆவது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை
6. செயலாளர் ஆண்டறிக்கை
7. நுண்கலை மன்ற செயலாளர் அறிக்கை
8. பொருளாளர் அறிக்கை
9. பிரேரணைகள்
10. புதிய ஆண்டுக்கான செயற்குழு தெரிவு
11. பொதுச் சபையின் கருத்து
12. புதிய ஆண்டுக்கான செயற்றிட்டங்கள்
13. நன்றியுரை

முக்கிய குறிப்பு : பிரேரணைகள் 20.04.2013 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பழைய மாணவர் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை.

கு.மனோகரன்
செயலாளர்.

(35327)(5.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் கொலை: விசாரணைக்கு குழு

மட்டக்களப்பு,ஏப்.12

மட்டக்களப்பு, செங்கலடியில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைகள் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் இந்தக் கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட புலனாய்வாளர்கள் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தடயவியல் நிபுணர்கள் மற்றும் புலனாய்வாளர்களைக் கொண்டு விசாரணைகள் பல கோணங்களில் முடுக்கி விடப்பட்டிருப்பதாக புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 8 ஆம் திகதி செங்கலடிச் சந்தி, பதுளை வீதியிலுள்ள வீடொன்றில் வர்த்தகரும், அவரது மனைவியும் இனந்தெரியாத நபர்களினால் கொல்லப்பட்டனர்.

செங்கலடியைச் சேர்ந்த சிவகுரு ரகு, ரகு விப்ரா ஆகிய இருவருமே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவர் ஆவார். இந்தச் சம்பவம் செங்கலடி மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவு

மலர்வு
17.03.1964

உதிர்வு
24.04.2012

திதி:
13.04.2013



**அமரர் ஞா. கருணாதேவி**


ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
அம்மா எங்கள் ஆருயிரே!
அம்மா உங்கள் நினைவுகளோடு
கண்களில் நீர் சுமந்து கனத்த இதயங்களோடு
கண்ணீரால் ஆராதிக்கின்றோம்.

- எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு சாந்திக் கிரியைகள் நாளை13.04.2013)சனிக்கிழமை நடைபெற உள்ளது. ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2 ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு

பொ.ஞானம்பலம் (கருணை) குடும்பத்தினர்.

## எம்பெருமானே கோணேஸ்வரா உன் அருள் தா..!



திருக்கோணேஸ்வரம் மாதுமை அம்பாள் உடனுறை கோணநாதரின் வருடாந்தத் தேர் திருவிழா நேற்று வியாழக்கிழமை நடைபெற்றபோது பக்தர்கள் கூட்டம் பெருமானை வழிபட அலைமோதும் காட்சி. (ச-40)

# இந்தியாவில் புலிகளுக்கு பயிற்சியா? விசாரணை நடத்தலாம் கோத்தாவே

## சர்வதேசம் கேட்பது இறுதிப் போரில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையையே என்கிறார் ஹரிஹரன்

கொழும்பு,ஏப்.12

விடுதலைப்புலிகளுக்கு இந்தியா ஆயுத பயிற்சியளித்தமை குறித்து சர்வதேச நாடுகள் விசாரிக்கவேண்டும் என்று கோருவதற்கு பதிலாக, அப்படியான விசாரணையை இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவே நடத்தலாம் என்று இந்திய அமைதிப்படையில் இலங்கையில் பணிபுரிந்த இந்திய இராணுவ அதிகாரி கேணல் ஹரிஹரன் தெரிவித்தார்.

இலங்கையின் இறுதிப் போரின் போது நடந்த போர் குற்றங்கள் பற்றி விசாரிக்க வேண்டும் என்று கோரும் சர்வதேச நாடுகள், அப்படியான தொரு விசாரணையை, இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு விடுதலைப்புலிகளுக்கு பயிற்சியளித்த காலத்திலிருந்து துவங்கவேண்டும் என்று இலங்கையின் பாதுகாப்பு செயலர் கூறியிருந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கோத்தபாயவின் இந்தக் கோரிக்கையானது, இலங்கைக்குள்ளும் சர்வதேச ரீதியிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு மீது அதிகரித்துவரும் அழுத்தங்களை திசைதிருப்பும் ஒரு முயற்சியாகவே பார்க்கப்படும் என்று ஹரிஹரன் கூறினார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு மட்டுமல்லாமல், இலங்கையின் வேறு பல தமிழ்ப் போராளி குழுக்களுக்கும் கூட 1980 ஆம் ஆண்டில் இந்திய அரசு பயிற்சியளித்ததாக தெரிவித்த ஹரிஹரன், அந்தப் பிரச்சனையெல்லாம் 1987 ஆம் ஆண்டு இந்தியா - இலங்கை உடன்படிக்கையுடன் முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

ஆனால் தற்போது சர்வதேச சமூகமும் கோருவது 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் நடந்த இறுதிக் கட்டப் போரில் நடந்ததாக கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கவேண்டும் என்று தானே தவிர, 25 ஆண்டுகளுக்கு முன்பே முடிந்து போன விவகாரங்களை அல்ல என்று அவர் கூறினார்.

அவற்றையெல்லாம் விசாரிக்க வேண்டும் என்று உண்மையிலேயே கோத்தபாய ராஜபக்ஷ விரும்பினால் ஐ.நாவிடம் அதற்கான கோரிக்கையை முறையாக வைக்கலாம். ஒருவேளை ஐ.நாவோ, சர்வதேச நாடுகளோ இதை விசாரிப்பதற்கு மறுத்தால், இலங்கை அரசே அப்படியானதொரு விசாரணையை நடத்தலாம் என்று மேலும் சுட்டிக்காட்டினார். (ச)



NALIN IT
IN NEW YEAR OFFER
195/2,Palaly road, Parameswara Junction, Jaffna.
Hotline 0777667975
புது வருடப்பிறப்பை முன்னிட்டு விசேட விலைக் குறைப்பு சித்திரை 12ம் திகதி முதல் 18ம் திகதி வரை

hp g6-2230TU
i3 (3rd generation)
4GB DDR3 Ram
500GB HD,
DVD RW
15.6 LED Display
Bluetooth,wi-fi
Webcam,Mic
Free dos
Rs.67,500/=

DELL Vostro 1450
i5 Processor
4GB DDR3 Ram
500GB HD
DVD RW
14.0 LED Display
Bluetooth,wi-fi
Webcam,Mic
Free dos
Rs.69,000/=

FREE
HEADPHONE
MOUSE
LAP TOP BAG

hp HP 2000
i5 (3rd generation
2GB DDR3 Ram
500GB HD
DVD RW
15.6 LED Display
Bluetooth,wi-fi
Webcam,Mic
Free dos
Rs.77,000/=

DELL Inspirion
i5 Processor
8GB DDR3 Ram
320GB HD
DVD RW
14.0 LED Display
Bluetooth,wi-fi
Webcam,Mic
Free dos
Rs.74,000/=

FREE
RS 750/=
Gift Voucher
+
Headphone,
Mouse,Lap Bag

8GB Flash 1,100/=
16GB Flash 1,850/=
DDR3 2GB Ram- 2,200/=
DDR3 4GB Ram- 3,600/=
Dongle From 3,500/=

Assembled full set pc

Dual Core(3rd Gen.)
M/Board INTEL original 61
4GB DDR3 HP Memory
500GB Hard Drive
DVD-Rw
19' LED Hp Monitor
Powerlogic Casing 550w
Key Board & Mouse
Rs.48,900/=

i3 processor (3rd Gen.)
M/Board INTEL original 61
4GB DDR3 HP Memory
500GB Hard Drive
DVD-Rw
19' LED HP Monitor
Powerlogic Casing 550w
Key Board & Mouse
UPS 650w
Rs.57,800/=

நளின் வாடிக்கையாளர் அனைவருக்கும் எம்
இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

NALIN Information Technologies Pvt Ltd.
facebook.com/nalinit
TP:0212221121/1166

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமை உணர்வால் தோன்றிய நகைச்சுவை

## எதிர்க்கட்சியின் விமர்சனங்களுக்கு ஜனாதிபதி பதில்

இதுவொரு பொறாமையுணர்வால் தோன்றிய நகைச் சுவையென அரசின் அபி விருத்தி நடவடிக்கை தொடர் பான எதிர்க்கட்சியினரின் விமர்சனங்களுக்கு ஜனாதி பதி பதிலளித்துள்ளார்.

மத்தல சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமா னம் ஒன்றைச் செலுத்துவதற்கு மூன்று விமானிகள் தேவைப்படுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் அண்மையில் தெரிவித்திருந் தார்.

விமானிகளில் ஒருவர் பறவைகளை விரட்டுவதற்கும், மற்றொருவர் யானைகளை விரட்டுவதற்கும், மூன்றாம வர் விமான ஓட்டியின் இருக்கையில் அமர்வதற்கும் தேவைப் படுவதாக அந்த எதிர்க்கட்சி உறுப்பினர் நகைச்சுவை யாகத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி இதுவொரு பொறா மையுணர்வால் தோன்றிய நகைச்சுவையென விவரித் தார்.

மத்திய வங்கியின் கடந்த ஆண் டுக்கான ஆண்டு அறிக்கையை வெளியிடும் நிகழ்வில் பிர தான உரையை ஆற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்: பொரு ளாதார மந்த நிலையில் இருந்து உலக நாடுகள் இன்ன மும் விடுபடாத நிலையே காணப்படுகின் றது. இந்த நிலையில் ஈரான் மீது விதிக்கப் பட்டுள்ள பொருளாதாரத் தடை இலங்கை போன்ற சிறிய நாடுகளை வெகுவாகப் பாதித் துள்ளது.

இந்தநிலையில் சிறிய நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப் படுகின் றமை வேதனை அளிக் கின்றது.

இதேவேளை இலங்கை யின் பொருளா தார வளர்ச்சி 6.4 வீதமாக உள்ளமை தொடர் பாக ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும் வெளிநாடுகளி லிருந்து பெறப்ப டும் கடன் கள் மூலமாக உணவுப்பொருள்கள் கொள்வனவு செய்யப்படுவதில்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி மூலதனச் செலவுக ளுக்கே இவை பயன்படுவதாகவும் தெரி வித்தார். (க)


# 15 ஆவது திருமண ஆண்டு வாழ்த்து



[illegible]
காரைநகரைச் சேர்ந்த ... (ரவி ரயர்வேக்ஸ் உரிமையாளர்) இராஜேஸ்வரி
தம்பதியரின் மகன், மருமகளின்

திரு.திருமதி ரவிச்சந்திரன் சிமி

தம்பதியரின் திருமணநாளான இன்று (12.04.2013) [illegible]
[illegible]

வாழ்த்துவோர்:
புலோலி தெற்கு, சிங்கநகர். (35000)(45.6) பீற்றர் யோறா குடும்பம் (நண்பன்)



# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகர் (ஆனைக்கோட்டை),
வட்டாரம் -06,
யாழ். மானிப்பாய் றோட்,
ஆதன இலக்கம்: 133 A.

வட்டாராம், 06 யாழ். மானிப்பாய் றோட், ஆனைக் கோட்டை . ஆதன இலக்கம் 133 A அமைந்துள்ள (உறுதிப்படி: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய், கோயிற்பற்று சுதுமலை, இறை சண்டிலிப்பாய் பிரதேசசபைக்குட்பட்ட பிரதேசம், கிராம அலுவலர் பிரிவு J/132. ''நாலுவராக்காடு'' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டு குளி பதினேழு தசம் ஆறு நாலு (நில.பர 02 குளி 17.6 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது யாழ்ப்பாணம் கூழாவடி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பிரான்சில் வதியும் வைத்திலிங்கம் மகேஸ்வரன் என்பவரால் அறுதி மூலம் கூழாவடி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருஞானதீபன் றஜீத் ஆகிய இவரால் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 14545 ஆம் இலக்க 2012.08.09 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய்கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இந்த ''நாலுவராக்காடு'' நிலப்பரப்பு 02 குளி 17.6 இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் திருஞானதீபன் - றஜீத் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம்செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தரு கின்றேன்.

(35934) (45.6)

தவிசாளர்
வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.



# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் சிவபாக்கியம்



(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

பண்ணாகம் தெற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சிவபாக்கியம் நேற்று (11.04.2013) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -சின்னம்மா தம்பதியிரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிய ரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தச்சிதானந்தம், விவேகானந்தம் மற்றும் புவனேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர் - வலிகாமம்), அருளானந்தம் (Bsc கியூமெடிக்கா முன்னாள் - ஆசிரியர்), சத்தி யேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், குமாரசாமி, பரஞ்சோதிராசா, கலைவாணி ஆகியோ ரின் அன்பு மாமியும், மதுசாயினியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2013) வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம். (35933) (45.6) பிள்ளைகள்.


# வருடாந்தம் காசநோயால் 300 பேர் வரையானோர் சாவு

கொழும்பு,ஏப்.12

நாட்டில் காச நோய்ப் பாதிப்பின்காரணமாக ஆண்டு ஒன்றில் 300 பேர் வரையில் மரண மடைகின்றனர் என்று காசநோய்கள் மற்றும் இதய நோய் தடுப்பு செயற்றிட்டம் தெரிவிக் கிறது.

இந்த மரண விகிதாசாரம் கடந்த 2000 ஆம் ஆண்டை விடவும் நூற்றுக்கு மூன்று வீதம் வரையில் அதிகரித்துள்ளது என்று வைத்தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

2012 ஆம் ஆண்டில் நாட்டின் சனத் தொகையில் ஒரு இலட்சம் பேரில் 46 பேர் காச நோயாளர்களாக பதிவாகியுள்ளனர்.

அந்த ஆண்டில் 9,343 பேர் காசநோயா ளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று காசநோய்கள் மற்றும் இதய நோய் களைத் தடுக்கும் தேசிய செயற்றிட்டத்தின் பிரதிப் பணிப்பாளரான சுதத்சமரவீர தெரி விக்கிறார்.

காசநோய் மரண விகிதாசாரத்தை குறைத்துக் கொள்வதற்கான ஆற்றல் உள்ள மையால் சந்தேகத்துக்கு இடமான நோயாளர் கள் நோயைப் பூரணமாகக் குணப்படுத்தக் கூடிய நேரடிக் கண்காணிப்புச் சிகிச்சையை பெற்றுக் கொள்வதன் அவசியத்தை வைத் தியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுற்றாடல் மாசடைதல் நோய் பரவிச் செல்வதற்கு அதிகரித்த தாக்கத்தை ஏற் படுத்துவதோடு கடந்த ஆண் டில் அதிகரித்த நோயாளர்களின் எண்ணிக்கை கொழும்பு மாவட் டத்தில் பதிவாகியுள்ளது என்றும் சுகாதார அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.(ம-22)

# 3 மணி நேரம் தடைப்பட்டது போக்குவரத்து

தென்மராட்சி,ஏப்.12

கைதடி பாலத்திற்குள் இரு பெரிய வாகனங்கள் நேருக்கு நேர் மோதி பாலத்தை மறைத்து நின்றதால் ஏ-9 வீதி போக்குவரத்து 3 மணி நேரம் தடைப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. ஏ-9 வீதியூடாக வந்த வாக னங்கள் வேறு மார்க்கத்தில் போக்குவரத்தில் ஈடுபட்டன.

வாகனங்கள் தனங்கிளப்பு நாவற்குழி ஊடாக போக்கு வரத்தில் ஈடுபட்டன. சாவ கச்சேரி பொலிஸார் மேற் கொண்ட துரித நடவடிக் கையினை அடுத்து காலை 9 மணிக்குப் பின்னர் வாகனங் கள் ஏ-9 வீதியில் செல்ல அனுமதிக்கப்பட்டன.

(ந-9)


# தேவை

[illegible]
Roomboy [illegible]
தொடர்பு: 077 9530 496
(35937) (45.6)



# கற்றலில் தடம் பதித்த யா/சென் றோக்ஸ் றோ.க.வித்தியாலய மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

யா/ புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயம் கல்வி வரலாற்றில் தடம் பதித்துள்ளது.
க.பொ.த. சாதாரண தரம் தொடங்கப்பட்ட முதல் வருடத்திலேயே
அது தனது முத்திரையை ஆழப்பதித்துள்ளது எனலாம்.

முதல் தடவையாக 2012 இல் இப் பரீட்சைக்குத் தோற்றிய
இந்த மாணவர்கள் சிறப்பான இடத்தை பிடித்துள்ளமை
பாராட்டுக்குரியதாகும்.

இப்பரீட்சைக்குத் தோற்றிய 14 மாணவர்களில்

| | | | |
|---|---|---|---|
| 1. ந. தவபாலன் | - 2A, 4C, 3S. | 5. ம.மதியன் | - 1A, 1B, 6S. |
| 2. றெ. நயின்சிவி | - 1A, 2B, 3C, 2S. | 6. விவேக்கா | - 1A, 3C, 2S. |
| 3. கொ. அனுசியா | - 1A, 3C, 4S. | 7. உ.ஜெயன்சன் | - 1A, 2C, 3S. |
| 4. பு. கவிந்தா | - 3C, 5S. | | |

ஆகிய பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும்
மற்றும் சித்தியடைந்துள்ள மாணவர்களையும்
பாராட்டுகின்றோம்.

இந்த மாணவர்களின் முயற்சிக்கு ஆலோசனையும், வழிகாட்டலும் வழங்கிய யாழ். கல்வி வலய அதிகாரிகள், பணியாளர்கள், இந்த வெற்றிக்கு உறுதுணையாக உழைத்த அதிபர், பாட ஆசிரியர்கள் என்றுமே போற்றுதலுக்குரியவர்கள். இந்த மாணவர்களின் கற்றலை மேம்படுத்த நடத்தப்பட்ட பிரத்தியேக, மேலதிக மீட்டல் வகுப்புகளில் கற்பித்தோரையும் மிக நன்றியுடன் நினைக்கிறோம். இந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு பலவகையிலும் உதவிய நலன் விரும்பிகள், நிதி சார்ந்த, பொருள் சார்ந்த உதவி வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு நலன் விரும்பிகள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், நிறுவனங்களின் பணி யாளர்கள் இம் மாணவர்களை பரீட்சை வரை நெறிப்படுத்தி யோருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை இப்பாடசாலை தொடரும் காலத்தில் இன்னும் பல சாதனைகளைப் புரிய புனித ஆரோக்கியநாதரின் ஆசீரை வேண்டி நிற்கின்றோம்.

செபமாலை அன்ரன் யூட்,
(35936) (45.6) (பிரான்ஸ்)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் மாணிக்கம் பஞ்சவர்ணம் (சுப்ரமணியம்)

மண்ணுலகில்
01.08.1944

விண்ணுலகில்
13.03.2013

கடந்த 13.03.2013 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டி கிரியைகளும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுப்பிட்டி வீதி.
தொண்டைமானாறு. (35928) (45.6)
குடும்பத்தினர்.
தொ.பே. 077 9050 314



# 20 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
09 ★ 09 ★ 1919

மறைவு
12★04★1995

## அமரர் கந்தையா தம்பிப்பிள்ளை (JP)

(உரிமையாளர், லீலாவதி ஸ்ரோர் - கைதடி சந்தி, கைதடி)

திதி: துதியை

பாசத்தின் இருப்பிடமே பண்பின் சிகரமே
இனிய உங்கள் முகம் எங்கள் நெஞ்சைவிட்டு அகலாது
பாசமுடன் வாழ்ந்து எங்கள் இதயங்களில் நிறைந்துவிட்டீர்கள்
உங்கள் கனிந்த பேச்சும் அறிவுரைகளும் காதுகளில் தினம் தினம் கேட்கிறதே
ஆண்டுகள் இருபது சென்றும் எம்மை வழி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள் ஐயா!

அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றன.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

"இராஜேஸ்வரி பவனம்",
கைதடி தெற்கு,
கைதடி. (35907) (45.6)
தகவல்: தம்பிப்பிள்ளை புஸ்பராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மப்பும் மந்தாரமான காலநிலை நிலவும்.

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.12

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2012 பெறுபேறுகள். அண்மையில் வெளியாகி யிருந் தன. அதனடிப்படையில் பாட சாலை ரீதியாக எமக்குக்கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:-

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

ஈ.துஜீகரன்-8ஏபி, எஸ். மயூரன்-8ஏசி, ரி.சுஜிந்தன்-8ஏ சி, ரி.சிந்து ஜன்-7ஏபிசி, எஸ்.ஜங்கரன்-7ஏசிஎஸ், ஆர்.சுஞ் சீவன்-6ஏ2பிசி, ஜி.லிபி னாத்-6ஏ2பிசி, கே.புருஷோத்த மன்-6ஏ2பிசி, ஈ.தினேஸ்-6ஏ 2பிசி, ஆர்.விதுசாந்-6ஏ2பிசி, எஸ்.ரேணுஜன்-5ஏபி2சி, டி.டினோசன்-5ஏ3பிஎஸ், எஸ். ராதாகிருஷ்ணன்-5ஏ 2பி2சி, ஜெ.துவாரகன்-5ஏ 3பிசி, பி.குருபரேசன்-5ஏ 3பிசி, எம்.அபிசாந்-4ஏ 4பிஎஸ், எஸ்.சுவன்சன்-4ஏ 2பி3சி, பி.திவாகர்-4ஏ3பிசி எஸ், ஆர்.டினோஜன்-4ஏ 2பி3சி, ஜெ.ஜனிஸ்ரன்-3ஏ 2பிசிஎஸ். ரி.ரஜீபன்-3ஏ4பிசி, வி.தாருஷன்-3ஏபி2சி3எஸ், எஸ்.பிரதீபன்-3ஏபி3சிஎஸ், யு.மயூரன்-3ஏபி3சி2எஸ்,

**குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

ஜே.சுகன்யா 7ஏபிசி.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

இ.லாவண்யா-9ஏ, இ. லக்ஷி-8ஏபி, ச.சிந்துஜா-8ஏ சி, க.கயூரன்-7ஏபிசி, கு. மனோஜா-7ஏபிசி, ர.மதன் ராஜ்-7ஏ2சி, ச.இசையரசி-6ஏபி 2சி, பூ.கோகிலாத்-4ஏ3பி2சி, கு.காயத்திரி-3ஏ3பி2சிஎஸ், இ.சோபிஷா-3ஏ3பிசி2எஸ், அ.விஜிதா-3ஏ3சி3எஸ்.

**அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை**

ஸ்ரீ.கார்த்திகா-9ஏ, கு. விந்துஜன்-7ஏபிசி, நா.பிர சாத்-4ஏ2பி3சி, கு.சிந்து ஜன்-3ஏ 2பி4சி, சி.சித்திரா-2ஏ 2பி4சி எஸ், இ.தர்சினி-4சி4எஸ், சி.தயாகரன்-3சி4எஸ். (ந-8)

## அமைச்சர் எப்போது வருவார்? தண்ணீர் எப்போது கிடைக்கும்?

வட்டுக்கோட்டை, ஏப்.12

வட்டுக்கோட்டை முதலி கோயி லடியில் அமைக்கப்பட்டுள்ளது இந்தத் தண்ணீர்த் தாங்கி. இதிலிருந்து தமக்குத் தண்ணீர் தருவார்கள் என்று 700 க்கும் மேற்பட்ட மக்கள் நான்கு மாதங்களுக்கு மேலாகக் காத்துக் கிடக்கிறார்கள். 'அமைச்சர்' வந்து திறப்பதற்காகவே இந்தத் தாங்கி தவம் கிடக்கிறதாம். 'வேல்ட் விஷன்' என்ற தொண்டு நிறுவனமும், வலி. மேற்குப் பிரதேச சபையும் இணைந்து சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இந்தத் தாங்கி அமைக்கப்பட்டது. இதில் பெருமளவு பணம் தொண்டு நிறுவனத் தால்வழங்கப்பட்டது. அமைச்சர் வராமல் தாங்கியை திறக்க மாட்டோம் என்று அந்த நிறுவனம் அடம்பிடிக் கின்றது என்கின்றார்கள் பிரதேச சபை அதிகாரி கள். தாங்கியை கட்டி வைத்து அதனை அண்ணாந்து பார்த்தவாறே பல மைல்கள் நடந்து சென்று தண்ணீர் குடிக்க வேண்டி யிருக்கிறது என்று அழுகிறார்கள் மக்கள். (உ-ரி-86)



### புதுவருடத்தை முன்னிட்டு மதுபானசாலைகளுக்கு 2 நாள்களுக்கு ஓய்வு

யாழ்ப்பாணம்,ஏப்.12

சித்திரைப் புதுவருட விடுமுறைக் காலத்தை முன் னிட்டு சகல மதுபானசாலை களும் நாளையும் நாளை மறுதினமும் மூடப்படும் என்று யாழ்.மாவட்ட மது பானத் திணைக்கள அத்தி யட்சகர் கே.தர்மசீலன் தெரி வித்துள்ளார்.

போயா விடுமுறை மற்றும் பண்டிகை நாள்களில் மது பாவனையால் இடம்பெறக் கூடிய குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்குடன் சகல மதுபானசாலைகளும் மூடப் படுகின்றன.

இந்த அறிவித்தலுக்கு அமைவாக யாழ். மாவட்டத் தில் உள்ள சகல மதுபான சாலைகளும் நாளையும், நாளைமறுதினமும் மூடப் படும்.

இதனை மீறும் மதுபான நிலையங்களின் உரிமை யாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-14)

### நுணாவில் ஆலயத்தில் பட்டப் பகலில் திருட்டு

தென்மராட்சி,ஏப். 12

நுணாவில் மேற்கு பேச்சி யம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் மாலை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ள தாக சாவகச்சேரிப் பொலி ஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு இடம் பெற்ற பூஜையைத் தொடர்ந்து கோயிற்கதவு களை மூடிவிட்டுச் சென்ற பூசகர் மீண்டும் 4 மணிப் பூசைக்காக ஆலயத்துக்குச் சென்ற போது அங்கிருந்த சில பொருள்கள் திருடப் பட் டுள்ளமை தெரிய வந்துள் ளது.

ஆலய களஞ்சிய அறை யிலிருந்த மோட்டர், ஒலி பெருக்கிச் சாதனங்கள் என் பனவும் உண்டியலில் இருந்த பணமும் திருட்டுப் போயுள்ள தாக ஆலய நிர்வாகத் தின ரால் சாவகச்சேரிப் பொலி ஸில் முறையிடப்பட்டுள் ளது. (ஒ-16-9)

**மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகள்**

## வர்த்தக நடவடிக்கைகளுக்காக 8.30 – 6 மணி வரை திறக்கும்

நவாலி, ஏப்.12

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் இனிவரும் நாள்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை வர்த்தக நட வடிக்கைகளுக்காகத் திறந் திருக்கும்.

இவ்வாறு கடந்த ஞாயிற் றுக்கிழமை சங்க மண்டபத் தில் சங்கத் தலைவர் திரு நாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற கிளைக் குழுத் தலைவர் செயலாளருடனான கலந்துரையாடலின்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிளை களில் வர்த்தக நடவடிக்கை கள், சங்கத்தின் தற்போதைய செயற்பாடு தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

ஒவ்வொரு கிளைகளும் சங்க வளர்ச்சிக்காக தினமும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். மாதம் ஒன்றுக்கு இரண்டரை இலட் சம் ரூபாவினை வருமான மாகக் காட்டவேண்டும்.

அதேநேரம் கிளைக் குழுக் களின் ஒத்துழைப்பும், பங் களிப்பும் சங்கத்துக்கு கட்டாய மானது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டன. (ந-100)

## திருத்திய பஸ்கள் நெடுந்தீவில் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.12

நெடுந்தீவில் சேவையில் உள்ள இரண்டு பஸ்களும் தற்சமயம் திருத்தி அமைக்கப் பட்டுள்ளன.

இரட்டைக் கதவு பெரிய பஸ் காலை 6.30 மணிக்கும், மாலை 5.30 மணிக்குமான படகு சேவையுடன் இணைக் கப்பட்டுள்ளது. மற்றைய சிறிய பஸ் ஏனைய சேவை களில் ஈடுபடுத்தப்படவுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கு அதிகள வான மக்கள் யாழ்.நகருக்குச் செல்கின்றனர். அதேநேரம் மாலை 5.30 மணிக்கு அவர் கள் திரும்பி வருகின்றனர்.

அந்தச் சேவையில் கூடு தல் பயணிகளை ஏற்றக் கூடியதாக பஸ் சேவை இருக்க வேண்டும். அதனாலேயே இந்த சேவை இடம்பெறு வதாக தெரிவிக்கப்படுகின் றது.

**நெடுந்தீவில் இருந்து காலை 6.30 மணிக்கு அதிகளவான மக்கள் யாழ். நகருக்குச் செல்கின்றனர்.மாலை 5.30 மணிக்கு திரும்பி வருகின்றனர்.**

இதனால் பொருள்களை எடுத்துவரும் பயணிகள் இலகு வாகத் தமது பிரயாணத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது. (ந-7)

## செயலமர்வு

தென்மராட்சி, ஏப்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திச் செயலமர்வு எதிர்வரும்18 ஆம் திகதி வியாழக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் இடம்பெறும்.

செயலமர்வுக்கு தெரிவு செய்யப்பட்ட கணித பாட ஆசிரியர்களுக்கான கடிதங்கள் [illegible] வைக்கப்பட [illegible]ளன. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தவறாது கலந்துகொ[illegible]ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண[illegible]மார் அறிவித்துள்ளார். (ந-9)

## தீவுகளுக்கு பயணிப்போருக்கு உயிர் பாதுகாப்பு அங்கிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.12

படகுப் போக்குவரத் துச் சேவையில் உள்ள தீவுகளுக்கு, பயணிகளின் பாதுகாப்பு கருதி உயிர்ப் பாதுகாப்பு அங்கிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெடுந் தீவு, அனலைதீவு, எழு வைதீவு போன்ற இடங் களுக்கே இந்த அங்கிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவு ஊர்காவற் றுறை பிரதேச செயலர்கள் இடர் முகாமைத்துவ அமைச் சுக்கு வழங்கிய கோரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அங்கிகள் தற்சம யம் இடர் முகாமைத்துவ யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. இவை பிர தேச செயலகங்களுக்கு வழங்கப்படும் என தெரி கின்றது. (ந-7)

**மலேரியா அற்ற இலங்கை**

## பாடசாலை மட்ட சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.12

பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான 'மலேரியா அற்ற இலங்கை' என்னும் சித்திரப் போட்டியினை மலேரியா தடுப்பு இயக்கத்தினர் நடத்தவுள்ளனர்.

மலேரியா அற்ற இலங்கையை உருவாக்க சிறுவர்களுக்கு உணர்த்துவதற்கும் அறிவை அபிவிருத்தி செய்வதற்கும் கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதார மற்றும் போசனை பிரிவின் அனுசரணையுடன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

'மலேரியா அற்ற இலங்கை' என்னும் பிரதான தலைப்பின் கீழ் பின்வரும் உப தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து சித்திரம் வரையலாமென அறிவிக்கப் பட்டுள்ளது.

மலேரியாவை ஒழிப்போம். மருந்து தெளித்த நுளம்பு வலையின் உள்ளே நித்திரை செய்வோம்.

உங்களுக்கு காய்ச்சல், தலைவலி, உடல்வலி காணப் படுகின்றனவா? அது மலேரியாவாக இருக்கலாம். தாமத மின்றி இரத்தப் பரிசோதனை செய்யுங்கள்.

2014 ஆம் ஆண்டில் இலங்கையின் மலேரியாவை முற்றாக ஒழிப்பதற்காக நாம் எல்லோரும் ஒன்று கூடு வோம். மலேரியா பரவும் இடங்களை அழிப்போம்.

நீங்கள் மலேரியா இருக்கின்ற நாட்டுக்குப் போவ தாயின் மலேரியா தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளுங் கள்.

உரிய மருந்தை இடைவிடாமல் பெற்றுக் கொண்டால் மலேரியாவை முழுமையாக குணமாக்கலாம்.

தரம் 6 தொடக்கம் 8 வரையான மாணவர்கள் கனிஷ்ட பிரிவிலும், தரம் 9 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் போட்டியில் பங்குபற்றலாம். வரையப்பட்ட சித்திரங்களை பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மலேரியா ஒழிப்பு இயக்கப் பணிப்பாளர் அலுவலகம் இல 555/5, அல்விட்டிகல மாவத்த, கொழும்பு 5 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சித்திரங்களுக்கு 20 ஆயிரம் ரூபா, 15 ஆயிரம் ரூபா, 10 ஆயிரம் ரூபா பணப் பரிசில்களும், சான்றிதழ்களும், பிரதேச மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு திறமைச் சான்றிதழ்களும் வழங்கப்படுமென அறிவிக் கப்பட்டுள்ளது. (ந-9)

### சமாதான நீதிவானாக நியமனம்

கரணவாய் தெற்கு, அண்ணா சிலையடியைச் சேர்ந்த லயன் மாணிக் கம்பரமானந்தம் சமாதான நீதிவானாக பருத்தித் துறைமாவட்ட நீதிபதி திரு மதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமா ணம் செய்து கொண்டார்.



இவர் தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமை யாளர் ஆவார். அண்ணாசிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத் தின் தலைவராக, செயலாளராக, பொருளாளராகவும் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பரிபால சபைத் தலை வராகவும், லயன்ஸ் கழக வடமராட்சிக் கிளைத் தலைவ ராகவும் இவர் பல ஆண்டுகாலம் பணி புரிந்துள்ளார். (ந-8)


★ ★ ★

துன்னாலை தெற்கைச் சேர்ந்த நல்லதம்பி கணேசன் நீதி அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுகல் கிசை மாவட்ட நீதிபதி பிரதீப். எம். அ.பேரத்ன முன்னிலையில்சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற் சங்க சம்மேள னத் தின் தொழி லுறவு அலுவலரான இவர் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் பொது சனத் தொடர்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகின்றார். இவர் மொஸ்கோ பல்கலைக் கழக பட்டதாரி ஆவார். (ந-8)



★ ★ ★

மன்னார் தாராபுரத்தைச் சேர்ந்த அப்துல் மஜீத் அப் துல் றஹீம் அகில இலங்கை சமாதான நீதிவா னாக மன்னார் மாவட்ட நீதிபதி எ.யூட்சன் முன்னிலையில் அண் மையில் சத்தியப் பிரமாணம்செய்து கொண்டார். இவர் மன்னார் மின்சார சபையின் உத்தியோகத்தரும் தாராபுரம் கிழக்கு சிவில் பாது காப்பு உறுப்பினரும் வட்டக் கண்டல் நியூஸ்டார் விளையாட்டுக் கழக உப செயலாளரும் வட்டக்கண்டல் தமிழ் கலவன் பாடசாலை, கலாவேவ மத்திய கல்லூரி, கெகுனு கொல தேசிய பாடசாலைகளின் பழைய மாணவருமாவார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் வஞ்சகம் தொடர்ந்தால் இந்திய ஒருமைப்பாடு நொறுங்கும்

## தமிழீழத்துக்கு ஆதரவாகப் பேசியவர்கள் மீது வழக்குப்பதிவைக் கண்டித்து – வைகோ

தமிழ் இனத்துக்கும், தமிழ் ஈழ மக்களுக்கும், தாய்த் தமிழகத்தின் வாழ்வாதார உரிமைகளுக்கும், தமிழக மீனவர்களுக்கும் இந்திய அரசு வஞ்சகமும், துரோக மும் தொடர்ந்து செய்து வருமானால், இந்தியாவின் ஒரு மைப்பாடு உடைந்து நொறுங்கும். ரஷ்யாவில் ஏற்பட்டது போல் இந்தியா பல நாடுகளாகப் பிரியும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

தமிழீழத்துக்கு ஆதரவாகப் பேசிய தா. பாண்டியன் மற்றும் ராமசாமி மீது வழக்குப்பதிவு செய்துள்ளதாகக் கண்டித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கடந்த மார்ச் 4 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெற்ற மக்கள் கூடல் நிகழ்ச்சியைப் பிரதிபலிக்க தமிழகம் எங்கும் ஈழத்தோழமை நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

அதில், மதுரை வழக்கறிஞர் சங்கச் செயலாளர் வழக் கறிஞர் ஏ.கே.ராமசாமி தனது உரையில், ஈழத் தமிழ் மக்க ளைக் கொன்று குவிக்கும் சிங்கள அரசுக்கு இந்திய அரசு தொடர்ந்து உதவுகின்ற துரோகத்தைக் கண்டித்தார். இலங்கையை நட்பு நாடு என்று இந்தியா கூறக்கூடாது. ஜெனிவா மனித உரிமைகள் சபையில்இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்திய அரசு செயல்படக்கூடாது : தமிழ் இனத் துக்கு தொடர்ந்து இந்திய அரசு துரோகம் செய்யு மானால் இந்தியாவின் ஒருமைப்பாடு கேள்விக்குறியாகும். சுதந்திரத் தமிழ் ஈழத்திற்காகவும், தாய்த் தமிழக உரிமைக்காகவும் போராடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மககள் விடுதலை அமைப்பின் பொதுச் செயலாளர் மீ.தா.பாண்டி யன் தனது உரையில், இந் திய அரசின் துரோகம் ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் தொடருமானால், இந்திய வரைபடத்தில் எதிர்காலத் தில் தமிழ்நாடு நீடிக்குமா? என்பது கேள்விக்குறியாகும் என குறிப்பிட்டுள் ளார்.

இவர்கள் இருவர் மீதும் தமிழக பொலிஸார் இந்திய தண்ட னைச் சட்டம் 153பி பிரிவின் கீழ் தேச ஒருமைப் பாட்டுக்கும், இறையாண்மைக்கும் குந்தகம் விளை விக்கும் விதத்தில் செயல்பட்டதாக வழக்குப் பதிவு செய்திருப்பதை வன்மையாக் கண்டிக்கிறேன். இந்தி யாவின் ஐக்கிய முற்போக்குக் கூட் டணி அரசு தொடர்ந்து இத்தகைய துரோகத்தைச் செய்து வருவதால், தமிழகத்தின் இளம் தலைமுறையினரின் நெஞ் சங்களில் இந்திய ஒருமைப்பாடு கேள்விக்குறியாகி விட்டது என்பதுதான் இன்றைய கால கட்டத்தின் எச்சரிக்கையாகும்.

## கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம்

ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் கடந்த செவ் வாய்க்கிழமை காலை கிணற்றில் இருந்து மீட்கப் பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த வீரமுத்து கனகம்மா (வயது-62) என்பவரே சடலமாக மீட் கப்பட்டவர் ஆவார். சடலம் உடல் கூற்றுப் பரிசோதனை களுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. இந்தச் சம்ப வம் தொடர்பாக மேலதிக விசாரணை களை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (கு-14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் இணைந்த குளியலறையுடன் 4 படுக்கையறைகளைக்கொண்ட வீடு வாகனத் தரிப்பிடவசதியுடன் வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கும் உகந்தது)

தொடர்பு: 077 3161 617
(35930) (40.6)

**07.04.2013 அன்று நடைபெற்ற கிளாலி புனித தோமையார் ஆலய கட்டட புனரமைப்பிற்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பின் முடிவுகள்**

முதலாம் பரிசு - 3383 2ஆம் பரிசு - 4042
3ஆம் பரிசு - 6488

10 ஆறுதல் பரிசுகள்
1. 3971 2. 5045 3. 533 4.4163 5. 3472 6. 6623 7. 8049
8. 225 9. 3227 10. 3200

நிர்வாகம்
புனித தோமையார் ஆலயம், கிளாலி.

**கண்ணீர் அஞ்சலி**

**பரமகுரு இராசகுரு** (பிரசித்த நொத்தாரிசு)
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

உத்தியோகத்தர்களும்
பிரசித்த நொத்தாரிசுகளும்
யாழ்ப்பாணம்.

## இந்திய வீடுகள் பளையில் கையளிப்பு

தென்மராட்சி, ஏப்.12

பளை சோரன்பற்றுப் பகுதியில் இந்திய, வீட மைப்புத் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

பளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமை யில் இந்த நிகழ்வு நடை பெற்றது.

நிகழ்வுக்கு இந்தியன் வீடமைப்புத்திட்ட உயர் அதிகாரிகள், விருந்தினர்களாக கலந்துகொண்டு வீடு களை உரிமையாளர் களிடம் கையளித் த னர்.

போர் வேளையில் குடியிருப்புகள் உட்பட சொத்துக்களை இழந்த 65 பயனாளிகளுக்கு இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை**
**சித்த மருத்துவ அலகு**
**சித்த மருத்துவ அலகு விரிவுரைகள் ஆரம்பம்**

1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இறுதி வருட மாணவர்களுக்கான 2012/ 2013 ஆம் ஆண்டுக்கான விரிவுரைகள் 17.04.2013 புதன்கிழமை ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகிறேன்.
(சி/8329)(6.2) பதிவாளர்.

**மரண அறிவித்தல்**

**மேரி ஆன் (நேசராணி) மரியாம்பிள்ளை**



யாழ்ப்பாணம், குருசோ வீதியைப் பிறப்பிடமாகவும் வளன்புரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட மேரிஆன் (நேசராணி) மரியாம்பிள்ளை நேற்று (11.04.2013) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான சூசைப்பிள்ளை - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான திரு.திருமதி சின் னையா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் பபி, காலஞ் சென்றவர்களான ஜெராட், றெஜி மற்றும் கமிலஸ், ஆனந்தி, சாந்தி (கனடா), லோஜினி, ஜெயா, சுரேஸ், ரமேஸ், தர்சினி (கனடா), கிங்சிலி ஆகியோரின் அன்புத் தாயும் வின்சன்லோகா, வனஜா, சித்திரா, அன்ரன், லைடன், பவானி, ரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமியும் இளஞ்செழியன், யூட், நிரோசன், இந்துசன், சுரேஜி, கொன்சி, அஜித், றஞ்சித், நிசாந்தன், காலஞ்சென்ற திலீபன் மற்றும் கார்த்திக்கா, கிசாந்தினி, யசோதினி, மேரிடிலக்சி, லடிஸ், லக்சிகா, சுலக்சன், டிலக்சன், நிரோசி, கிசா, நிந்துசன், நிரோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (13.04.2013) சனிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து (வளன்புரம், கொழும்புத்துறை) புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப. 3 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வளன்புரம்,
கொழும்புத்துறை.
(35947) (23-6..)
தகவல்:
ஜெயா (நேசராணி) மகள்
தொ.பே: 0779050213.

## பாறையுடன் மோதிய படகு

யாழ்ப்பாணம், ஏப்.12

நயினாதீவு கடலில் மீன்பிடிக்கச் சென்ற படகொன்று பாறை யுடன் மோதி விபத்துக் குள்ளானது.

நயினாதீவு மேற்குக் கடற்பரப்பில் கடந்த வாரம் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தை அடுத்து படகு உடனடியாக குறி காட்டுவான் கரைக்கு கொண்டுவரப்பட்டு திருத்தம் செய்யப்பட் டது. (17-7)




**மரண அறிவித்தல்**

**திருமதி சின்னப்பிள்ளை இராசையா**



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், புதிய செம்மணி வீதி, ஞானவைரவர் கோயிலடி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை இராசையா நேற்று (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோயிலடி,புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதுக்கிய நிதி முடிவடைந்தது பணிகள் யாவும் இடைநடுவில்

தென்மராட்சி, ஏப். 12
கட்டட நிர்மாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்ததால் வேலைகள் பூர்த்தியடையவில்லை. அதனால் ஒப்பந்ததாரர் வெளியேறியுள்ளார்.

கட்டட வேலைகள் செய்யப்படாமையால் அதனைப் பயன்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபைக்கு 45 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிகளைக் கொண்ட நகர மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது.

மண்டப நிர்மாண மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட சில வேலைகளைப் பூர்த்தி செய்யாத நிலையில் வேலைகளை நிறுத்தி ஒப்பந்தக்காரர் வெளியேறியுள்ளார்.

மண்டபத்துக்கு மேடை அமைத்தல் கூரைக்கு உள் சீற் அடித்தல், தளத்துக்கு மாபிள் பதித்தல், வடிகால் அமைத்தல், ஜன்னல் கிறில் வேலை, படிகளில் பாதுகாப்புக் கம்பியிடல் போன்ற வேலைகள் செய்யாமலேயே ஒப்பந்தக்காரர் வெளியேறியுள்ளார்.

வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இதனைச் செயற்படுத்திய உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிறுவனமும் மூடப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்படாத வேலைகள் தொடர்பாக மதிப்பீடுகள் புதிதாகத் தயாரிக்கப்பட்ட போது பத்து மில்லியன் ரூபா தேவையென அறிக்கையிடப்பட்டது.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியால் நடத்தப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக நகரசபைத் தலைவர் சுட்டிக் காட்டி கேட்டபோது தனது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்வதாக ஜனாதிபதி வாக்களித்திருந்தார்.

இந்த நிதியை எதிர்பார்த்திருந்த வேளையில் கடந்த வாரம் நகரசபைத் தலைவர், செயலாளரைத் தமது அலுவலகத்துக்கு அழைத்திருந்த மாகாண பிரதம செயலாளர், ஜனாதிபதியின் நிதியிலிருந்து நிதிவழங்க முடியாது என்றும் நகரசபையின் நிதியில் இருந்து வேலைத் திட்டத்தைப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

மாவட்ட அபிவிருத்தியில் அக்கறையுள்ள போது, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அளித்த ஜனாதிபதியின் வாக்குறுதி குறித்து நகரசபை தலைவரால் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பயன்பாட்டுக்கென நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தை விரைவில் பூர்த்தி செய்து மக்களின் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நகரசபை வரியிறுப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# முகமாலைப் பிரதேசத்திலேயே அதிகளவான மிதிவெடிகள்

## ஹலோட்ரஸ்ட் அறிக்கையில் தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.11
இலங்கையில் முகமாலைப் பிரதேசமே எண்ணிக்கையான மிதிவெடிகளைக் கொண்ட பிரதேசமாக காணப்படுகிறது. இந்தப் பகுதியில் எமது பணிகளை ஆரம்பித்து ஒரு வருட காலத்தினுள் 3 ஆயிரத்து 500 மிதிவெடிகளை அகற்றியுள்ளோம் என்று ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

'ஹலோட்ரஸ்ட்' நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகமாலைப் பிரதேசத்தில் கடந்த 8 ஆம் திகதி எதிர்பாராத வெடி விபத்து ஒன்று இடம்பெற்றது. தாங்கி எதிர்ப்புக் கண்ணிவெடி இருந்ததால் ஏற்பட்டதாக தெரிய வருகின்றது. இதில் எமது நிறுவனப் பணியாளரான கோணேசமுதலி முருகவேல் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். வேறு எந்தப் பணியாளர்களும் பாதிக்கப்படவில்லை.

இலங்கையில் 2002 ஆம் ஆண்டு எமது பணி ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுதான் முதலாவது உயிரைப் பறித்த விபத்தாகும்.

முகமாலை மிதிவெடிப் பிரதேசம் கடந்த 2002 ஆம் ஆண்டு முன்னுரிமைப் படுத்தப்பட்ட பாதுகாப்புப் பகுதியாக்கப்பட்டு அடையாளமிடப்பட்டது.

இலங்கையில் இந்தப் பிரதேசமே மிகப் பெரிய மிதிவெடிப் பிரதேசமாகக் காணப்படுவதுடன் அதிகளவானமிதிவெடிகள் காணப்படும் பிரதேசமாகவும் இது உள்ளது.

இந்த 13 சதுர கிலோ மீற்றர் மிதிவெடி வயலில் எமது நிறுவனம் கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி பணியை ஆரம்பித்ததில் இருந்து இன்று வரை 3 ஆயிரத்து 500 மிதிவெடிகளை அகற்றியுள்ளது.

இந்தப் பிரதேசத்தைத் துப்புரவு செய்வதன் மூலம் 49 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேர் மீளக்குடியமர உதவுவதுடன் மொத்தமாக 481 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 635 பேர் மீளக்குடியமர்வதற்காக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தப் பகுதிகளைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழும் கிராம மக்களுக்கு பாதுகாப்பான நிலத்தை வழங்கவும் அவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்தவும் உதவுவதுடன் புகையிரதப் பாதை அபிவிருத்திக்காக நிலத்தைத் துப்புரவு செய்து வழங்கவும் அத்துடன் சமூகத்தினரது இரண்டாம் தர வீதிச் சேவைக்காகவும் இந்தப் பணி மேற்கொள்ளப்படுகின்றது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

# பொலிஸ்ரோந்து பணியில் கிராம அலுவலர் பங்கு இல்லை

வலி.வடக்கு, ஏப்.12
யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் பகுதிகளில் இரவு ரோந்து நடவடிக்கைகளில் பொலிஸாருடன் கிராம அலுவலர்கள் இணைந்து செயற்படுவதில்லை என்ற நிலைமை காணப்படுகிறது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இரவு ரோந்து நடவடிக்கைகளின்போது பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கிராம அலுவலர்களும் தமது பகுதிகளில் கடமைக்குச் செல்ல வேண்டும் என்பது விதியாகும்.

கிராம அலுவலர்கள் கடமையாற்றும் பிரிவுகளுக்கு வெளியால் வேறு வேறு இடங்களில் இருக்கின்றமை மற்றும் கடந்த கால போர் காரணமாக இத்தகைய ரோந்து நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படாமை போன்ற கரணங்களால் இத்தகைய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

இதே வேளை -பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளின் போது கிராம அலுவலர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கைகளின் விவரம் பொலிஸ் ஏடுகளில் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளது. பொலிஸ் நிலையங்கள் இதனையிட்டு தலைமையகத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-86)

# நெடுந்தீவில் களைகட்டிய புத்தாண்டுச் சந்தை

## ஒடியல்மா ஒரு கிலோ 90 ரூபாய்

யாழ்ப்பாணம், ஏப்.12
நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் புதுவருடச் சந்தை கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் நடத்தப்பட்டது. சந்தையை நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி ஆரம்பித்து வைத்தார்.

தரமான உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புக்கள் உண்டு. நெடுந்தீவில் விவசாயம், பனம்பொருள் போன்ற உள்ளூர் உற்பத்திகள் தரமான முறையில் அமைந்துள்ளன. இந்தச் சந்தையில் உள்ள பொருள்களைக் கொண்டு இதனை நிர்ணயிக்கக் கூடியதாக உள்ளது என்று இதன் போது அவர் கருத்துக் கூறினார்.

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், விவசாயிகால் நடைவளர்ப்புச் சங்கம், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் உட்பட சிறு கைத்தொழில் உற்பத்திப் பொருள்களும் சந்தையில் இடம்பெற்றிருந்தன.

அனேகமாக உள்ளூர் மக்களுக்கு கிடைக்க முடியாதுள்ள கட்டாபாரைக் கருவாடுகளும் அன்றைய சந்தையில் இருந்தன.



விவசாய உற்பத்திப் பொருள்களை தனியார் கடைகளிலும் பார்க்க மிகவும் குறைந்த விலையிலேயே மக்கள் பெறக்கூடியதாக இருந்தது.

வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் ஒடியல்மா, பனாட்டு போன்றவற்றைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர்.

விவசாய சங்கத்தின் கடையில் ஒடியல் மா ஒரு கிலோ 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

சந்தை ஆரம்ப நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி, பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியன், பலநோக்கு கூட்டுற வுச் சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம் உட்பட அரச அலுவலகங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப்பெருமளவு மக்கள் கலந்துகொண்டு பொருள்களை வாங்குவதில் ஆர்வம் காட்டினர். (ம-7)

# வீதிகளில் சமாந்தரச் சவாரி செய்தால் கடும் நடவடிக்கை

## போக்குவரத்து பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.12
வீதிகளில் சமாந்தரமாக சைக்கிளில் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று யாழ். மாவட்ட வீதிப்போக்கு வரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தம் நோக்குடன் இந்த நடைமுறை இறுக்கமாககப்பட்டுள்ளது.

சைக்கிள்களில் வீதி களில் பயணிப்போர் தமது சைக்கிள்களின் தரத்தை உரிய வகையில் பேண வேண்டும். முக்கியமாக சைக்கி ளில் பிறேக் அவசியம் இருக்க வேண்டும். இரவில் பயணிப்போரின் சைக்கிள்களில் வெளிச்சம் இருக்க வேண்டும்.

அத்துடன் வீதிகளில் சைக்கிளில் சமாந்தரமாகப் பயணிப்பதால் ஏனைய வாகன சாரதிகளுக்கும் பாத சாரிகளுக்கும் இடையூறு ஏற்படும்.

இதன்காரணமாக ஏதேச்சையான விபத்துக்கள் ஏற்படுவதுடன் உயிரிழப்புகளும் ஏற்படும் நிலை உள்ளது. இது தொடர்பாக அறிவித்தல் வழங்கப்பட்டும் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் இதனைப் பின்பற்றுவதில்லை. இதற்காக பாடசாலை மட்டங்களில் பொலிஸாரால் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வீதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது வீதிநடைமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளனர். (ம-14)

# சனத்தொகையியல் முதுமாணி கற்கை விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.12
சனத்தொகையியல் முதுமாணி கற்கை நெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று உயர்பட்டக் கற்கை நெறிப் பீடாதிபதி பேராசிரியர் ஏ.சத்தியசீலன் தெரிவித்தார்.

முதுமாணியில் அபிவிருத்தி, முதுமாணியில் பிராந்திய திட்டமிடல் கற்கைநெறி யாழ்.பல்கலைக் கழக உயர்பட்டபீடத்தின் ஊடாக இடப்பெறமாட்டாதா என்று கேட்கப்பட்ட போது இவ்வாறு கூறினார்.

கடந்த காலங்களில் முதுமாணியில் அபிவிருத்தி, முதுமாணியில் பிராந்திய திட்டமிடல் ஆகிய இரு கற்கை நெறிகளும் இருதடவைகள் இடம்பெற்றுள்ளன.

மேற்படி இரு கற்கை நெறிகளையும் மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன் சம்பந்தப்பட்ட பேராசிரியர்களுடன் பேசியுள்ளோம்.

விரைவில் இதற்கான முடிவு எட்டப்பட்டு கற்கை நெறிகள் மீள ஆரம்பிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுப்போம்.

இரு கற்கை நெறிகளும் இங்கு ஆரம்பிக்கப்பட்டால் குறைந்த செலவில் மிகப் பயனுள்ள முதுமாணி கற்கையை இங்குபெறலாம்.

விரைவில் சனத்தொகையில் முதுமாணி கற்கைநெறி ஆரம்பிக்கப்படும் என்று உயர்பட்டபீடாதிபதி பேராசிரியர் ஏ.சத்தியசீலன் மேலும் தெரிவித்தார். (ம-41)

# சாதனை புரிந்த மாணவர் கௌரவிப்பு

வலி.வடக்கு, ஏப்.12
இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பாடசாலை மட்டத்தில் சாதனைகளைப் புரிந்த மாணவர்களை இணுவில் ஒன்றியத்தால் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கடந்த இரண்டு ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் விளையாட்டுக்கலை இலக்கியத்துறைகளில் முதல் இடத்தைப் பெற்ற மாணவ, மாணவிகள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

முதல் தடவையாக இடம்பெறும் இத்தகைய நிகழ்வுகள் தொடர்ந்தும் எதிர்காலத்திலும் இணுவில் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

# வீதி திருத்தத்துக்கு போடப்பட்ட கற்களில் சறுக்கி வீழ்ந்த மூதாட்டி

## மானிப்பாய் பிரதேச சபையிடம் நஷ்டஈடு கோருகிறார்

நவாலி, ஏப்.12
வீதித் திருத்த வேலைகளுக்காகப் போடப்பட்ட கற்கள் மீது சறுக்கி வீழ்ந்த நிலையில் படுகாயமடைந்த 70 வயதான மூதாட்டி மானிப்பாய் பிரதேச சபையிடம் நஷ்டஈடு கோரியுள்ளார்.

மாரிசன்கூடலைச் சேர்ந்த மூதாட்டி ஒருவரே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட மாசியப்பிட்டி சங்கக் கடை வீதியைத் திருத்துவதற்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கற்கள் பறிக்கப்பட்டு பரவப்பட்டுள்ளது. இதுவரை அடுத்தகட்டப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் மாரிசன்கூடலைச் சேர்ந்த குறித்த மூதாட்டி இந்தக் கற்களில் சறுக்கி வீழ்ந்து காயமடைந்துள்ளதுடன் அவரது மூக்கிலும் பாதிப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிரதேச சபைக்குச் சென்று இவர் நஷ்டஈடு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகத் துல்லியமாக இரவிலும் படம் பிடிக்க கூடிய கமரா




இருள் சூழ்ந்த நேரங்களில் அல்லது இரவு வேளைகளில் காட்சிகளை துல்லியமாகப் படம்பிடிக்கக்கூடிய மிகவும் சிறிய கமரா ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

CHOBi Cam Pro 3 எனும் நாமத்தைக் கொண்ட இந்தக் கமராவானது 11 மெகாபிக்சல்களாகக் காணப்படுவதுடன் 1080P காணொலி பதிவு வசதியையும் உள்ளடக்கியுள்ளது.

இதில் இணைக்கப்பட்டுள்ள பற்றரியானது தொடர்ச்சியாக 120 நிமிடங்கள் வரையான காணொலிப் பதிவு செய்யும்வரை நீடித்து உழைக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது.

மேலும் இதன் சேமிப்பு வசதிகளை microSDHC கார்ட் மூலமாக 32 GB வரை அதிகரிக்கக்கூடிய வசதியும் தரப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கமராவின் பெறுமதியானது 54 டொலர்களாக அமைந்துள்ளது.

இக்கமராவில் இணைக்கப்பட்டுள்ள பற்றரியானது தொடர்ச்சியாக 120 நிமிடங்கள் வரையான காணொலிப் பதிவு செய்யும்வரை நீடித்து உழைக்கக்கூடியதாகக் காணப்படுகின்றது

## அறிமுகமாகின்றது GoNote Mini Netbook

இவற்றில் 4GB சேமிப்பு வசதி தரப்பட்டுள்ளதுடன் 3000mAh பற்றரியும் இணைக்கப்பட்டுள்ளது.



Ergo Electronics எனும் நிறுவனம் தனது புதிய தயாரிப்பான GoNote Mini Netbook எனும் கணினிச் சாதனத்தை அறிமுகப்படுத்துகின்றது.

7 அங்குல அளவுடையதும் 800 x 480 Pixel Resolution உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ள இச்சாதனமாது 1.2 GHz வேகத்தில் செயலாற்றவல்ல Rockchip RK2918 ARM Cortex&A8 Processor மற்றும் பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றைக் கொண்டுள்ளதோடு கூகுளின் Android 4.0 Ice Cream Sandwich இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் இவற்றில் 4GB சேமிப்பு வசதி தரப்பட்டுள்ளதுடன் 3000mAh பற்றரியும் இணைக்கப்பட்டுள்ளது.

இச்சாதனத்தின் அளவானது 7.93 x 4.73 x 0.93 ஆகவும் நிறையானது 1.5 பவுண்ட் ஆகவும் காணப்படுகின்றது. அத்துடன் இதன் விலை 99 அமெரிக்க டொலர்களாகும்.

# LG Lucid 2 கைபேசி விரைவில்





கைபேசி உற்பத்தியில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துள்ள LG நிறுவனமாது Lucid 2 எனும் கைபேசி உற்பத்தி தொடர்பான அறிவித்தலை கடந்த வருடம் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த கைபேசி அண்மையில் விற்பனைக்கு வந்தது.

அன்ரோயிட் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்ட இக்கைபேசியானது 1.2GHz வேகத்தில் செயலாற்றவல்ல Dual&Core Qualcomm Snapdragon Processor, 1.3 மெகா பிக்சல் உடைய காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா, 2460mAh Silicon Oxide மின்கலம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

மேலும் இதன் திரையானது 4.3 அங்குல அளவு மற்றும் 540 x 960 Pixel Resolution உடையதாகவும் தொடுகை முறையிலான செயற்பாடுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

# உலகின் மிக இலேசான பொருள்



உலகின் மிக இலேசான பொருளை உருவாக்கி சீன விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். கார்பன் ஏரோ ஜெல் என அழைக்கப்படும் இப்பொருள் காற்றின் எடையை விட 6 இல் ஒரு பங்கு எடை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் ஜி ஜியாங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உலகின் மிக இலேசான பொருளை உருவாக்கியுள்ளனர். காற்றின் எடையில் 6இல் ஒரு பங்கு எடையே கொண்ட இந்த ஏரோஜெல் எனப்படும் பொருள் 0.16 மி.கி/கன செ.மீ., எடை கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பாக மிகவும் எடை கொண்ட பொருளாகக் கருதப்பட்ட கிராபைட் ஏரோஜெல் எடையை விட கார்பன் ஏரோ ஜெல் மிகவும் எடை குறைவானதாகும். முன்னதாக, கடந்த ஆண்டு ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கிராபைட் ஏரோஜெல்லை உருவாக்கினர். இதன் எடை 0.18 மி.கி/கன செ.மீ., ஆகும். இத்தகைய ஏரோஜெல்கள், செமிசாலிட் ஜெல்லை காயவைத்து உருவாக்கப்படுகின்றன. இதன்காரணமாக இவற்றின் உட்பகுதிகள் காற்றால் நிரம்பியிருப்பதால், இவை மிகவும் எடை குறைந்ததாக உள்ளன.

கார்பன் ஏரோஜெல்கள் மிகவும் நீட்சித்தன்மை கொண்டவை. கார்பன் ஏரோஜெல்லை அழுத்தும் போது அதற்கு மீளும் தன்மை உண்டு. எண்ணெய் உறிஞ்சும் தன்மை மிக அதிகம் கொண்ட பொருள் கார்பன் ஏரோஜெல்.

தற்சமயம் உபயோகத்தில் இருக்கும் எண்ணெய் உறிஞ்சும் கொண்ட பொருள்கள் தனது எடையில் 10 மடங்கு அளவு உறிஞ்சும் தன்மை கொண்டவை. ஆனால் கார்பன் ஏரோஜெல் தனது எடையில் 900 மடங்கு அதிகளவு எண்ணெய் உறிஞ்சும் தன்மை கொண்டது [illegible] இந்த பண்பு [illegible] இந்த பொருள் முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மின்சாரம் அற்ற வேளையில் ஸ்மார்ட் கைபேசிகளை 'சார்ஜ்' செய்வதற்கான நவீன சாதனம்

இயற்கை அழிவுகள் போன்றவற்றினால் மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஸ்மார்ட் கைபேசிகளை மின்னேற்றம் செய்வதற்கென SOS Charger அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

எளிமையான முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாகக் காணப்படும் இந்த நவீன சாதனமானது 1500mAh மின்னோட்டத்தை வெளிவிடுவதோடு 3 - 5 நிமிடங்கள் வரை மின்னேற்றம் செய்த பின்னர் 5 - 12 நிமிடங்கள் வரை அழைப்புக்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு மின்னை உற்பத்தி செய்கின்றது.

மேலும் இச்சாதனத்தையும் கைபேசியையும் இணைப்பதற்காக USB இணைப்பி காணப்படுகின்றதுடன் மின்னேற்றம் செய்யப்படும் அளவுகளை அறிந்து கொள்வதற்கொன LED மின்குமிழ்களும் பொருத்தப்பட்டுள்ளன. இச்சாதனத்தின் பெறுமதியானது 35 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 141 கிராம சேவகர் வெற்றிடம் யாழ். மாவட்டத்தில் நிலவுகிறது

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் கீழ்க் குறிப்பிட்ட கேள்விகளை எழுப்பி யிருந்தார்.**

கொழும்பு, ஏப்.12

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 141 கிராம சேவகர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. இவை விரைவில் நிரப்பப்படும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல வினாவுக்கான விடையளிப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் கீழ்க் குறிப்பிட்ட கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அதில் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமசேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை, அவற்றில் பணியாற்றும் கிராமசேவகர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் நிரப்பப்படுமா? என்று கேட்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் 18 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. அவற்றில் 9 பிரிவுகளுக்கு மாத்திரமே கிராம சேவையாளர்கள் உள்ளனர். ஏனைய 9 பிரிவுகளுக்கும் கடந்த வருடம் வர்த்தமானிப் பத்திரிகையில் கிராமசேவையாளர்களுக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டன. அவற்றின்படி போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதிலிருந்து நேர்முகப் பரீட்சை நடத்தி தெரிவு செய்யப்படுபவர்கள் மூலம் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நிலவும் கிராம சேவையாளர் பதவி வெற்றிடங்கள் எத்தனை எனவும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர்,

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் மூன்று கிராமசேவையாளர்களுக்கும், வேலணை-8, ஊர்காவற்றுறை-4, யாழ்ப்பாணம்-11, நல்லூர்-11, சண்டிலிப்பாய்-8, சங்கானை-7, உடுவில்-11, தெல்லிப்பழை-15, கோப்பாய்-10, தென்மராட்சி-18, கரவெட்டி-11, பருத்தித்துறை-11, மருதங்கேணி-9 மாக 141 கிராமசேவையாளர்களுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை எனத் தெரிவித்தார். (ஐ-22)

# படையினரின் புத்தாண்டை புறக்கணித்தனர் மக்கள்

**முல்லைத்தீவில் நேற்று வெறிச்சோடிய மைதானம்**

புதுக்குடியிருப்பு, ஏப்.12

படையினரால் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்பட்ட புத்தாண்டு நிகழ்வுகளில் முல்லைத்தீவு மக்கள் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்-சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் 5 ஆவது பிரிகேட்டின் ஏற்பாட்டில் மாபெரும் கலை நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வுகளுக்கென மீனவர் சங்கங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அமைப்புகள் என்பவற்றிடமிருந்து சுமார் 12 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி வசூலிக்கப்பட்டு நிகழ்வுகள் பெரும் எடுப்பில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

நேற்று முல்லைத்தீவுக் கடற்கரை மைதானத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றபோது அங்கு மக்கள் செல்லவில்லை. பொதுமக்களுக்குப் பதிலாக அரச அதிகாரிகள் சிலர் பிரசன்னமாகியிருந்தனர். அதைவிட படையினரின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்பட்டது.

இதேவேளை புத்தாண்டு நிகழ்வை ஒட்டி நடந்த ஆணழகன் போட்டிகளிலும் குறைந்த எண்ணிக்கையானோரே கலந்துகொண்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-410)

# ஆயுள்வேத மருந்தகத்துக்கு வைத்தியர் வருகை தாமதம்

**குடத்தனை மக்கள் சிகிச்சை பெறுவதில் அவதி**

வடமராட்சி, ஏப்.12

வடமராட்சி கிழக்கில் உள்ள குடத்தனை நடுக்குடத்தனையில் நிறுவப்பட்டுள்ள இலவச ஆயுள்வேத மத்திய மருந்தகத்துக்கு வைத்தியர் உரிய நேரத்துக்கு வராமையால் நோயாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண ஆயுள்வேத வைத்தியத் திணைக்களத்தினால் சுமார் ஒருவருடத்துக்கு முன்பு வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கென தனியாக ஆயுள்வேத மத்திய மருந்தக சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

நடுக் குடத்தனையில் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் இந்த மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. இங்கு வாரத்தில் ஒரு நாள் மருதங்கேணியிலும் நடமாடும் வைத்திய சேவை நடத்தி வருகின்றது.

ஏனைய நாள்களான விடுமுறை தவிர்ந்த 5 தினங்களும் நடுக் குடத்தனையில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. எனினும் சிகிச்சைக்காக பலர் காத்திருக்க வைத்தியர் தினமும் முற்பகல் 10 மணிக்குப் பின்னரே வைத்தியசாலைக்கு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நேர காலத்துடன் சிகிச்சைகளைப் பெற்று தமது வழமையான அன்றாடக் கடமைகளைத் தொடர வேண்டும் எனும் நோக்கில் வரும் நோயாளர்கள் மணிக்கணக்கில் காத்திருந்து சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து, குறிப்பிட்ட நேரத்துக்கு வைத்தியர் வருகை தந்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க ஆவன செய்ய வேண்டும் என குடத்தனைப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-8)

# வைத்தியசாலைச் சூழலில் ஒலி எழுப்புவதற்குத் தடை

யாழ். போதனா வைத்தியசாலைச் சுற்றுவீதிக் கடைகளில் ஒலி எழுப்பத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடைகளில் அதிகரித்த ஒலியுடன் பாடல்கள் ஒலிக்கவிடப்படுவதால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்கவே மாநகரசபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மாநகர முதல்வர் யோ.பற்குணராஜா தெரிவித்தார்.

வணிகர் கழகப் பிரதிநிதிகள், இ.போ.ச. மற்றும் தனியார் பஸ் உரிமையாளர்கள், ஓட்டோ சாரதிகளுடன் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக யாழ். போதனா வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள கடைகளிலிருந்து அதிகரித்த ஒலியில் பாடல் ஒலிக்கவிடப்பட்டதுடன் வாகன இரைச்சலும் அதிகரித்துள்ளது. இதனால் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் நோயாளர்களின் நலன் கருதி வைத்தியசாலைச் சுற்று வீதிகளில் வாகனங்கள் ஒலியெழுப்பத் தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கண்காணிக்க இனிவரும் நாள்களில் மாநகரசபை கண்காணிப்பில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-16-7)

# இலங்கை வரும் வெளிநாட்டவரால் மலேரியா நோய் பரவும் அபாயம்

கொழும்பு, ஏப்.12

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் பயணிகள் வாயிலாக மலேரியா நோய் பரவும் அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளதாகத் தேசிய மலேரியாத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சுரத் தெனியகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா, ஆபிரிக்கா, மியன்மார் போன்ற நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சிலருக்கு மலேரியா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நோயாளர்களிடம் இருந்து நோய்க்காவி நுளம்பின் மூலம் மலேரியா நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆபத்தைத் தடுக்கும் வகையில், வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் விமானநிலையத்தில் இரத்தப்பரிசோதனை மேற்கொண்ட பின்னரே அனுமதிக்கப்பட வேண்டியுள்ளனர். இது தொடர்பான திட்டம் ஒன்று உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும் எனச் சுரத் தெனியகே தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டில் மலேரியா நோயை முற்றாக இல்லாதொழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென இந்த ஆண்டை 'மலேரியா தடுப்பு ஆண்டு' எனப் பெயரிடப்படவுள்ளது - என்றார். (ஐ-22)

# இன்று வருகிறாள் 'குமுதினி'

யாழ்ப்பாணம், ஏப்.12

நெடுந்தீவுக்கான சேவையை வழங்கும் குமுதினி படகு திருத்தம் செய்யப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை மீண்டும் சேவையை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமுதினி படகின் சுக்கான் கடந்த வாரம் உடைந்ததில் தனது சேவையை நிறுத்திக்கொண்டது.

திருத்த வேலைகள் நெடுந்தீவுத் துறைமுகத்திலேயே வைத்து மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-7)

# விபத்தில் இளைஞன் காயம்

வவுனியா, ஏப்.12

வவுனியா மன்னார் வீதியில் மரக்காரம் பளைச் சந்தியில் இடம் பெற்ற பஸ்-சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது. இதில் நெளுக்குளத்தைச் சேர்ந்த எஸ். நிரோசன் (வயது-22) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

மன்னார் வீதியில் செட்டிக்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி வந்த தனியார் பஸ், சைக்கிளில் வந்து கொண்டிருந்த இளைஞனை மோதியது. இதில் படுகாயமடைந்த இளைஞன் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இதேவேளை இவ்விபத்துச் சம்பவத்தை அடுத்து ஆத்திரமடைந்த பொதுமக்கள் பஸ் மீது கற்களை வீசித் தாக்கினர். அப்போது சம்பவம் அறிந்து சிவில் உடையில் வந்த பொலிஸார் பொதுமக்கள் மீது தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

(ஐ-400-402)

## கடந்த வருடத்தில் நாடு முழுவதும்

# பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக 2089 வன்புணர்வு சம்பவ முறைப்பாடு

கொழும்பு, ஏப்.12

கடந்த வருடம் நாடு முழுவதும் சிறுவர், பெண்களுக்கு எதிரான வன்புணர்வுச் சம்பவங்கள் குறித்து 2089 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், மேற்படி முறைப்பாடுகளில் 175 முறைப்பாடுகள் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களாகவும், 330 முறைப்பாடுகள் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களாகவும் உள்ளன எனத் தெரிவித்தார்.

இதனைவிட கடந்த வருடத்தில் 576 முறைப்பாடுகள் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களாகப் பதிவாகியுள்ளன.

இதே வருடத்தில் சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு வகையான துஷ்பியோகங்கள் தொடர்பிலும் 1194 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் கருத்துப்படி, அதிக வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்ற மாவட்டமாக அனுராதபுரம் காணப்படுகிறது. அங்கு 173 வன்புணர்வுச் சம்பவங்கள் நடைபெற்றதாக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அடுத்து குருநாகல் மாவட்டத்தில் 166 முறைப்பாடுகளும், கொழும்பில் 129 முறைப்பாடுகளும், கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 111 முறைப்பாடுகளும், காலி மாவட்டத்தில் 106 முறைப்பாடுகளும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், 93 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இவை அனைத்தும் சிறுமிகள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்ற மாவட்டமாகக் கண்டி மாவட்டம் உள்ளது. அங்கு இது தொடர்பில் 31 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அடுத்து கொழும்பு, அனுராதபுரம் மாவட்டங்களும் தலா 30 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.

அத்துடன் அதிகளவிலான சிறுமிகள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள மாவட்டமாகவும் அனுராதபுரமே காணப்படுகிறது. அங்கு 55 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் சிறுமிகள் 48 பேரும், களுத்துறை மாவட்டத்தில் சிறுமிகள் 41 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 40 சிறுமிகளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்த எண்ணிக்கையில் கொழும்பு மாவட்டத்திலேயே இடம்பெற்றுள்ளது. அந்த எண்ணிக்கை 143 எனப் பதிவாகியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் சிறுவர்கள் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். குருநாகலில் 99 சம்பவங்களும், இரத்தினபுரியில் 67 சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனவும் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

(ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட கூடைப்பந்து

# ஆண், பெண் பிரிவுகளில் யாழ். அணி சம்பியன்





யாழ்ப்பாணம், ஏப்.12

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பிரிவுகளிலும் யாழ்.மாவட்ட அணிகள் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

இந்த இறுதியாட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகர சபை கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆண்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது. அதில் யாழ்.மாவட்ட அணி 68:13 எனற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆகியது.

அடுத்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்திலும் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது. அதில் யாழ். மாவட்ட அணி 44:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆகியது. (ற-23-400)

### அளவெட்டி பாரதி தாச்சித் தொடர்

## சாந்தை விநாயகர் சம்பியன்

கைதடி, ஏப்.12

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் மட்டுப்படுத்திய கழகங்களுக்கு இடையில் நடத்திய தாச்சிச் சுற்றுத் தொடரில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை வென்று பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

போட்டியின் ஆரம்பத்தில் இருந்தே சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் ஆதிக்கம் செலுத்தி அதிரடியாகப் புள்ளிகளைப் பெறத் தொடங்கியது. இடைவேளை வரை சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் ஆறு புள்ளிகளையும் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் ஒரு புள்ளியையும் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. போட்டியின் முடிவில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் 10 புள்ளிகளையும், புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் 5 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

ஆட்டத்தின் சிறந்த விளையாட்டு வீரராக சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வை. ஆனந்தஜேஸ்கரன், கே.ஜினதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தத் தொடரில் 12 கழகங்கள் பங்குபற்றின. (ற-288)

## மட்டுவில் கண்ணகை, நுணாவில் பாரதி இறுதியாட்டத்துக்குத் தெரிவாகின

தென்மராட்சி, ஏப்.12

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தென்மராட்சிப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச இளைஞர் கழங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் மட்டுவில் கண்ணகை இளைஞர் கழக அணியும், நுணாவில் பாரதி இளைஞர் அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

இந்தத் தொடரில் 32 அணிகள் பங்குபற்றின. அரையிறுதி ஆட்டங்களில் நுணாவில் பாரதி அணியும், ஐங்கரன் வி.க அணியும் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் மட்டுவில் கண்ணகை அணியும் மீசாலை யுனைட்டட் அணியும் மோதிக் கொண்டன. (ற-9)

### இமையாணன் ம.வி.க உதைபந்தாட்ட தொடர்

# இறுதியாட்டத்தில் வதிரி பொமர்ஸ்

கரணவாய், ஏப்.12

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம், சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தப்படும் இந்தச் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

அதில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகமும், சக்கோட்டை சென் சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. வடமராட்சிப் பிரதேசத்தின் மிகவும் பலம் பொருந்திய இரு அணிகள் மோதிக் கொள்வதைப் பார்க்க இரசிகர்கள் பெருமளவில் மைதானத்தில் கூடியிருந்தனர்.

ஆட்டம் ஆரம்பமான இரண்டாவது நிமிடத்திலேயே சென்.சேவியர் அணி வீரர் கனியூட் மிகவும் அருமையான கோல் ஒன்றை அடித்து எதிரணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். அதையடுத்துப் பதிலடி கொடுக்கும் முயற்சியில் இறங்கியது பொமர்ஸ். அதனால் முதற்பாதி ஆட்டத்தில் கூடுதலான நேரம் பந்து பொமர்ஸ் அணியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. எனினும் கிடைத்த சில வாய்ப்புகளை பொமர்ஸ் அணியின் முன்கள வீரர்கள் கோட்டை விட, இரு அணிகளும் மேலதிக கோல்களைப் பெறாத நிலையில் 1:0 என்ற நிலையில் முதற்பாதி ஆட்டம் நிறைவுபெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானவுடனேயே இரு அணிகளும் கோல்களைப் பெறுவதற்காக கடும் முயற்சியில் இறங்கினார்கள். இரு அணி வீரர்களும் எதிரணியின் பகுதிக்குள் முன்னேறித் தாக்குவதில் குறியாக இருந்தனர். எனினும் இரு அணிகளும் கோல் எதையும் பெறமுடியவில்லை.

அதையடுத்து சென். சேவியர் அணி வெற்றி பெறும் என்ற நிலை மைதானத்தில் காணப்பட்டது. இந்த அணி இரசிகர்கள் பெரும் உற்சாகத்துடன் காணப்பட்டனர்.

ஆட்டம் நிறைவடைய 7 நிமிடங்கள் இருக்கையில் ஆட்டத்தின் போக்குத் தலைகீழாக மாறியது. சக்கோட்டை அணியின் கோல் பிரதேசத்துக்கு அண்மையில் கிடைத்த நேரில் உதை சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தியது பொமர்ஸ் அணி. பொமர்ஸ் அணி வீரர் சாரங்கன் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கோலாக்கினார். அதையடுத்து ஆட்டம் 1:1 என்ற ரீதியில் சமனிலையாகி விறுப்பானது. அந்த விறுவிறுப்பே சக்கோட்டை அணிக்கு வினையாகியது. சங்கோட்டை அணியின் கோல் பிரதேசத்துக்குள் ஏற்பட்ட விதி மீறல் காரணமாக பொமர்ஸ் அணிக்கு இன்னொரு வாய்ப்புக் கிடைத்தது.

வாய்ப்புக் கிடைத்தால் கேட்க வேண்டுமா? அதைக் கோலாக மாற்றி அணியை முன்னிலைப்படுத்தினார் பொமர்ஸ் அணி வீரர் கோபி.

உற்சாகமானது பொமர்ஸ் அணி. அந்த உற்சாகத்தில் சாரங்கனிடம் சிக்கிய பந்து மீண்டும் கோல் கம்பத்துக்குள் புகுந்தது. பொமர்ஸ் அணியின் வெற்றி உறுதியாகியது.

ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது சக்கோட்டை சென். சேவியர் அணியினர் போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டியில் தொடர்ந்து விளையாட முடியாது என்றனர். ஆனால் விளையாடுவதற்குரிய சூழ்நிலை காணப்படுவதால் தொடர்ந்து விளையாடுமாறு போட்டி நடுவரால் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்ததால் நடுவரால் ஆட்ட நேரத்தைக் கணக்கில் எடுத்து பொமர்ஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இறுதியில் 3:1 என்ற கோல் கணக்கில் வதிரி பொமர்ஸ் அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இன்று நடைபெறவுள்ள மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவாணந்தா விளையாட்டுக் கழகமும், நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. (ற-400)

## எஸ். தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் தொடர் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்ரல்.12

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி நடத்தும் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையே அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இந்தத் தொடர் 19 ஆம் திகதி ஆரம்பமாகி இரு தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நடந்து முடிந்த 6 தொடர்களில் முதல் வருடம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், இரண்டாம், மூன்றாம் வருடங்கள் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், அடுத்த மூன்று ஆண்டுகளும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் சம்பியனாகியிருந்தன. (ற-400)

## புத்தூர் கலைமதி சம்பியன்

கொழும்புத்துறை,ஏப்.12

அரியாலை 94 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவையொட்டி வடமாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட விலகல் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி மோதியது. புத்தூர் கலை மதி வி.க. அணி 26:28, 25:21, 25:19 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது. (135)





கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே சதுரங்கப் போட்டிகள் நடைபெற்றன. அதில் 19 வயதுப் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட வட்டக்கச்சி மகாவித்தி யாலய அணி. (ற-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெயில் வாணவேடிக்கை வென்றது சலஞ்சர்ஸ்



ஐ.பி.எல் தொடரின் நேற்றைய முதல் ஆட்டத்தில் கொல் கத்தா நைட் ரைடர்ஸ் அணியை, ரோயல் சலஞ்சர்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக பிஸ்லாவும், கம்பீரும் களமிறங்கினார் கள். முதலாவது பந்துப் பரிமாற்றத்தி லேயே நைட் ரைடர்ஸ் அணிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஆறாவது பந்தில் ஹென்றி குக்ஸின் பந்தில் ராகுலிடம் பிடிகொடுத்து ஓர் ஓட்டத்தைப் பெற்றநிலையில் வெளி யேறினார் பிஸ்லா.

அடுத்துக் களமிறங்கினார் கைல்ஸ் கம்பீரும் கைல்ஸும் நிதானமாக ஓட்டங் களைச் சேர்ந்தனர். 8ஆவது பந்துப் பரி மாற்றத்தில் அவர்களைப் பிரித்தார் வினய் குமார். வினய்குமா ரின் பந்தில் ஹென்றி குக்ஸிடம் பிடிகொடுத்து 16 ஓட்டங்களு டன் நடையைக் கட்டினார் கைல்ஸ். அடுத்து வந்த பதான் அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க முயன்றார். எனினும் 17 பந்துகளில் 27 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஹென்றிகுக் ஸின் பந்தில் வினய் குமாரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய திவாரி நிதானமாக ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்த கம்பீருடன் இணைந்து கொண்டார். இருவரும் நிதானமாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். நம்பிக்கை அளித்துக் கொண்டிருந்த கம்பீர் வினய்குமாரிடம் மாட்டிக் கொண்டார். வினய்குமாரின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார் கம்பீர். அப்போது அவர் 46 பந்துகளில் 57 ஓட்டங்க ளைப் பெற்றிருந்தார். அணி 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்துக் களமிறங்கிய மோர்கன் கைவிரித்தார். மோர்கன் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த வீரர்களும் சோபிக்காத நிலையில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது நைட் ரைடர்ஸ்.

ரோயல் சலஞ்சர் சார்பில் பந்துவீச்சில் ஆர்.பி.சிங் 3 இலக் குகளையும், ஹென்றி குக்ஸ், வினய்குமார் தலா இரண்டு இலக்கு களையும் கைப்பற்றினார்கள்.

155 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங் கியது ரோயல் சலஞ்சர்ஸ். ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினார்கள் கெய்லும், அகர்வாலும்.

பந்து எல்லைக் கோட்டை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. ஓட்ட எண்ணிக்கையும் எகிறத் தொடங்கியது. இருவரது இணைப்பாட்டத்தையும் பிரித்தார் மக்லெரன். 6 ஓட்டங்களு டன் வெளியேறினார் அகர்வால் அடுத்துக் களமிறங்கி னார் கோஹ்லி. கெயிலும் கோஹ்லியும் இணைந்து நைட்ரைடர் பந்து வீச்சாளர்களைப் போட்டுத் தாக்கினார்கள். பந்து எல் லைக் கோட்டுக்கு மேலாகப் பறத்த வண்ணமிருந்தது. கோஹ்லி 27 பந்து களில் 35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பாலாஜி யின் பந்தில் மோர்கனிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அடுத்து கெயிலு டன் இணைந்தார் டீ வில்லியர்ஸ் இரு வரும் அதிரடியாக ஆடி ஆட்டத்தை முடித்து வைத்தனர். 17.3 பந்துப் பரிமாற் றங்களில் 158 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது ரோயல் சலஞ்சர்ஸ். கெயில் ஆட்டமிழக்காமல் 9 சிக்ஸர் கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்களைப் பெற்றிருந் தார். டீ வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். நைட்ரைடர்ஸ் சார்பில் பந்துவீச்சில் மக் லெரன், பாலாஜி தலா ஒரு இலக்கைக்கைப் பற்றினர்.ஆட்டநாயகனாக கெயில் தெரிவு செய்யப்பட்டார். (ற)

# புனேயிடம் வீழ்ந்தது ராஜஸ்தான்

ராஜஸ்தான் றோயல்ஸை 7 இலக்குகளால் வீழ்த்தியது புனேவோரியர்ஸ்.

ஐ.பி.எல் சீசன் 6 போட்டித் தொடரின் 13 ஆவது போட்டி நேற்று இரவு பூனே 'சுப்பரட்டாரோல்' மைதானத்தில் இடம் பெற்றது.இதில் புனே வோரியர்ஸ் அணியை எதிர்த்து ராஜஸ்தான் ரோயல் அணி விளையாடியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப ஆட்டக்காரர்களாக குஷால் பெரேரா, ரஹானி ஜோடி களமிறங்கியது. போட்டியின் முதல் பந்திலேயே பிரவீன் குமார், குஷால் பெரேராவை ஆட்டமி ழக்கச் செய்து அதிர்ச்சி கொடுத்தார்.

ரஹானியுடன் இணைந்தார் அணித்தலைவர் ராவிட். இருவரும் தமது வழமையான பாணியில் நிதானமாகவும் வேகமா கவும் ஓட்டங்களைச் சேர்க்கத் தொடங்கினர்.

இந்த இணையை 12ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே பூனே பந்து வீச்சாளர்களால் பிரிக்க முடிந்தது. அணி 81 ஓட்டங்களைப் பெற்றபோது ராஹானி 30 ஓட்டங்களுடன் ரோகித்சர்மாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் ராவிட் அரைச்சதம் கடந்தார். பின்னி (1), ராவிட் (54), ஜக்னிக் (12) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இறுதியில் 5 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது அவ் அணி.

பந்து வீச்சில் புனே அணி சார்பில் யுவராஜ்சிங், றோகித்சர்மா ஆகியோர் தலா இரு இலக்குளையும் பிரவீன்குமார் ஒரு இலக்கை யும் வீழ்த்தினர்.

146 என்ற வெற்றி இலக்கை விரட்டத் தொடங்கியது புனே வோரியர்ஸ். தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கிய உத்தப்பா, பிஞ்ச் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தது. இதில் உத்தப்பா 32 ஓட்டங்களையும், பிஞ்ச் 64 ஓட்டங்களையும் பெற்றனர்.

இறுதியில் 19.6 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது புனே வோரியர்ஸ்.

ராஜஸ்தான் அணி சார்பில் ப்ளுக்னர் 2 இலக்குகளையும் ஸ்விமித் சிங் ஒரு இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக புனே வோரியஸின் வெற்றிக்கு வித்திட்ட பிஞ்ச் தெரிவானார். (16)

# தொடரைக் கைப்பற்றியது இந்திய மகளிர் அணி

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டி யில் 46 ஓட்டங்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றுள்ளது இந் திய மகளிர் அணி. இந்த வெற்றி யின் மூலம் 2-0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது இந்திய அணி.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மூன்று போட்டி கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் அகமதாபாத்தில் நடந்தது. நாணயசுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி 50 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 6 இலக்குகள் இழப்பிற்கு 256 ஓட்டங்கள் எடுத்தது.

அதிரடியாக விளையாடிய அணித்தலைவி ஹர்மன்பிரீத் கவுர் 11 பவுண்டரி, 2 சிக்சரு டன் 103 ஓட்டங்களையும், பூனம் ராட் 80 ஓட்டங்களையும் பெற எடுத்தனர்.

சவாலான இலக்கை விரட் டிய பங்களாதேஷ் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 9 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பங்களாதேஷ் அணி சார் பில் ருமானா அகமது 75 ஓட்டங் களும், அணித்தலைவி சல்மா காடுன் 35 ஓட்டங்களும், லடா மாண்டல் 28 ஓட்டங்களும் பெற்றனர். மற்றைய வீராங் கனைகள் சோபிக்கவில்லை.

இந்தியா சார்பில் எக்தா பிஸ்ட் 3 இலக்குகளையும், ஹர் மன்பிரீத் கவுர் 2 இலக்குகளை யும் கைப்பற்றினர்.

இந்த வெற்றி யின்மூலம் இந்திய அணி 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப் பற்றி முன்னிலை வகிக்கி றது. (ற)

# கம்பீரை திட்டினார் கோஹ்லி




பெங்களூரில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல். ஆட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் மோதியது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 154 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 17:3 பந்துப் பரிமாற்றங்களில் 158 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற் றது.

இந்த ஆட்டத்தில் அதிரடியாக ஆடிய பெங்களூர் அணித் தலைவர் விராட் கோஹ்லி, பிரதீப் சங்வான் வீசிய 9ஆவது பந்துப் பரிமாற்றத்தில் அடுத்தடுத்து 2 சிக்சர்களை பறக்கவிட்டு இரசிகர்களை உற்சாகப்படுத்தி னார். ஆனால் அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் பாலாஜி வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

கோஹ்லி ஆட்டமிழந்ததும் கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர் சக வீரர்களுடன் உற்சாகமாக துள்ளிக் குதித்தார். இதனால் கோப மடைந்த கோஹ்லி, கம்பீரைப் பார்த்து திட்டியபடி மைதானத்தில் துப்பி னார். அதனால் இருவருக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே ரஜத் பாட்டியா அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி விலக்கி விட்டார். இதனால் சிறிது நேரம் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (ற)



# எளிதான சுற்றில் சாய்னா நோவல்

'யோனக்ஸ் சன்ரைஸ்' பூப்பந்துத் தொடர் டெல்லியில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் உலகின் முதல்தர வீராங்கனையான லி சுவேருய் (சீனா), 3ஆம் தரநிலை வீராங்கனை வாங் யிகான் (சீனா) ஆகியோர் பங்கேற்கவில்லை. இதனால் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சாய்னா நேவால் எளிதாக அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியும்.

மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் சாய்னா நேவால், இந்தோனேசியாவின் பெலிட்ரிக்ஸ் மனுபுத்தியை சந்திக்க உள்ளார். கடந்த மாதம் நடந்த 'ஆல் இங்கிலாந்து' தொடரில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சாய்னா, மனுபுத்தியை எளிதாகத் தோற்கடித்தார். எனவே இந்தத் தொடரிலும் சாய்னாவுக்கு முதல் சுற்று எளிதாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை விடயங்களுக்கு தனிப் பிரிவு அமைக்கிறது அரசு

கொழும்பு, ஏப்.12

மனித உரிமை விவகாரங்களைக் கையாள்வதற்கான பொறுப்பு வெளிவிவகார அமைச்சிடம் வெகு விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளது என அரச வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளால் சர்வதேச ரீதியில் கடும் நெருக்கடிகளைச் சந்தித்துவரும் வேளையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு, குறித்த முடிவை எடுத்துள்ளது.

இதன்படி, வெளிவிவகார அமைச்சில் தனிப் பிரிவொன்று உருவாக்கப்பட்டு அதனூடாக மனித உரிமை

விடயங்கள் கையாளப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை விவகாரங்களைக் கையாள்வதற்கான பொறுப்பு முன்னதாக ஜனாதிபதியின் கீழ் இருந்தது. எனினும், மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான தூதுவராக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை நியமித்து, அந்தப் பொறுப்புகளை ஜனாதிபதி அவரிடம் கையளித்தார்.

இதன்படி, ஜெனிவாத் தொடர் உட்பட சர்வதேச மட்டத்திலான மனித உரிமை சம்பந்தமான கூட்டத் தொடர்களுக்கு மஹிந்த சமரசிங்கவே தலைமை வகித்துவந்தார்.

இருப்பினும், குறிப்பிட்டதொரு காலப் பகுதிக்குள் மாத்திரம் அவர் இந்த விவகாரங்களைக் கையாள்வதால் அதில் பூரணத்துவம் இருக்காது என்பதை கருத்திற்கொண்டே மேற்படி முடிவை அரசு எடுத்துள்ளது எனத் தெரியவருகின்றது.

(த)

# விசாரணை அறிக்கையை பகிரங்கப்படுத்த முடியாது

## அமெ. தூதரின் கோரிக்கையை நிராகரித்தது இராணுவம்

கொழும்பு,ஏப் 12

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றம் நடத்திய விசாரணை அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிசன் விடுத்திருந்த கோரிக்கையை இலங்கை இராணுவம் நிராகரித்துள்ளது.

1957 ஆம் ஆண்டு இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் எந்தவொரு விசாரணை அறிக்கையையும் பகிரங்கப்படுத்துவது சட்ட ரீதியில் குற்றமாகும். இவ்வாறு அறிக்கைகளை வெளியிடத் தொடங்கினால் ஆயிரக்கணக்கான விசாரணைகளின் அறிக்கையை வெளியிட நேரிடும் என இலங்கை இராணுவ உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இராணுவத்தினரின் ஒழுக்கம் தொடர்பில் சர்ச்சைகளை ஏற்படுத்தக்கூடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் இராணுவ விசாரணை அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்த முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# ஜப்பான் தூதுக்குழு ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு,ஏப் 12

ஒப்பனைத் தொழில் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஜப்பானியத் தூதுக்குழுவொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்று அலரி மாளிகையில் சந்தித்து உரையாடியது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கையில் பல்வேறு தாவரங்கள் மற்றும் மூலிகைகள் காப்புரிமை தொடர்பில் சந்தித்துள்ள பிரச்சினைகள் பற்றித் தூதுக் குழுவினருக்கு ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்தத் துறையில் சீனா இலங்கைக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

(த)

# பல்கலை மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.12

பல்கலைக்கழகங்களுக்கு 2011-2012 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்படும் மாணவர்களையும் தற்போது பல்லைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு புலோலி குரும்பைகட்டி முன்பள்ளி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் வேலும்மயிலும் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் கலந்துகொள்வார்.

(த-ரி-8)

**SUBRA**

A/L 2015

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப்பிரிவுகள்
புதுவருட சுபவேளையில் 14.04.2013 ஞாயிறு
காலை 9.15 AM

O/L Day Class ஆரம்பம்: 14.04.2013

★ ஒரு பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே.
★ தீவுப்பகுதி மாணவர்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட சலுகைக்கட்டணம்.
(c/8313)(8.6)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே.இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் சண்முகலிங்கம்

(ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்-யா/செங்குந்தா இந்துக்கல்லூரி)



நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சண்முகலிங்கம் நேற்று (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் சறோஜினிதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற தனேசன் மற்றும் வித்தியா(பிரதேச செயலகம்-வேலணை), விநோதன் (பிரதேச வைத்தியசாலை-நெடுந்தீவு) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி, நகுலேஸ்வரி, முத்துக்குமாரசாமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2013) வெள்ளிக்கிழமை வீரபத்திரர் கோயில் வீதி, கல்வியங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு. (35930)(8.6)

தகவல்:
குடும்பத்தினர்.

**2015 A/L -வரலாறு**

புதிய பிரிவுகள் ஆரம்பம்
O/L இல் வரலாறு பாடத்தில் பெற்ற பெறுபேறு எதுவாகினும் A/L இல் "A" தரச் சித்திபெற வழிகாட்டும் உங்கள் ஆசான்

M.பத்மன் B.A (Hons) History, M.A (History)

வரலாறு பாடத்தில் மாவட்ட, தேசிய மட்டங்களில் சாதனை மிக்க பெறுபேற்றுக்கு வழிகாட்டும் இந்த ஆசிரியரின் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்.

D.M.I யாழ்.நகர் | உயர்கலைக் கல்லூரி, குப்பிளான் | புகழ் கல்வி நிலையம் மாவிட்டபுரம்

வகுப்புகள் ஆரம்பம் 13.04.2013 (சனிக்கிழமை)

**இத்தாலி மொழி**

இத்தாலி வேக் பெமிற்றில் செல் வோர், இத்தாலி செல்லவுள்ளோர் மற்றும் கற்க ஆர்வமுள்ளோர் அனைவருக்கும்.

BCLL 21, பலாலி வீதி | நெல்லியடி (சோதி ஒழுங்கை முன்)
021 373 4121, 0771327818

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(20772)(15-14)

**BCLL**

பல மொழிகளுக்கு ஒரு நிறுவனம்

* ஆங்கில மொழி
* இத்தாலி மொழி
* பிரெஞ்சு மொழி
* ஜேர்மன் மொழி
* சிங்கள மொழி

21, பலாலி வீதி (அப்பலோ hospital முன்) | பிரதான வீதி, நெல்லியடி (சோதி ஒழுங்கை முன்)
021 373 4121, 0771327818

**கார்ச்சாரதி தேவை**

40 வயதுக்கு மேற்பட்ட கார்ச்சாரதி தேவை.
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், கொக்குவில் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0785285342
(35923)(6.8)

**ABI BABY MART in**

பரிசு மழை

1000/= மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களிற்கும் பரிசுப்பொருள்கள்! உடனேயே தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். காத்திருக்காமல் உடனேயே விரையுங்கள்...!

Discount 10% - 20% வரை

★ 3000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் பெயர்கள் 13.04.2013 11 மணிக்கு குலுக்கலும் இடம் பெறும்.

#267, Brown Road, Jaffna.

**ஸ்ரார் கல்வி நிலையம்**

சுன்னாகம், ஏழாலை இரு இடங்களிலும்

O/L DAY CLASS

ஆரம்பம்:
12.04.2013 காலை 8.00 மணி

**கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு**

உயர் தரத்திலான கொங்கிறீற் கற்கள், வேலித்தூண்கள், கிணற்றுக் கற்கள் என்பவற்றை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு:- 0777716243

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில்நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1½ Months)

ஆங்கிலத்தில் சரளமாக கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகின்றது
தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல் சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகின்றது.

**Diploma In English** (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தரகாலத் தேவையும் அதிலே உங்களின் புலமை எனைதும் இன்றியமையாதது
இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது
தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exam-Sponsor/Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது

**B1 Exam-Student Visa** மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5 இற்கு ஒப்பானது இது British High Commission இனால் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

Batch I - 13.04.2013 Batch II - 20.04.2013 Batch III - 20.04.2013 Batch IV - 22.04.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpuliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# லக்ஷ்மி இஞ்சினியரிங்
# Lukshmee Engineering



* கணினி பழுதுபார்த்தல், வலையமைப்பு (Computer Repair, Net works, Computer Services)
* மின்இணைப்பு வேலைகள் (House & Industrial wiring)
* மீளச்சுற்றுதல் (Rewinding Works)
  பான், மோட்டார், கிறைண்டர், டைனமோ, ரான்ஸ்போமர்.
* குழாய் பொருத்துதல் (Plumbing Works)
* மின் ஒட்டுகல், கேற் ,கிறில், ரஸ், ரோலிங் சட்டர் வேலைகள் (Welding. Gate, Grill , Truss, Roller Shuter works)
* கடைச்சல் வேலைகள் (Lathe Works)
* ஓவ்செற் அச்சு இயந்திரங்கள் பழுது பார்த்தலும் அதற்கான கடைச்சல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
* பேப்பர் கட்டர் கத்தி தீட்டிக்கொடுக்கப்படும். (இயந்திரம் மூலம்)
* வாகன திருத்த வேலை (Vehicle Repair)
  டீசல், பெற்றோல் வாகனங்கள் மற்றும், ஜெனரேற்றர்கள் திருத்தப்படும்.

**TP.021 567 0256**

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.





# புது வருட வாழ்த்துக்கள்




## நலம்பெற புதுவருட ஆசீர்வாதங்கள்

The Hands that Protect LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.

Kenlima - 0773322234

பெயர்:
Name: ____________________
தே.அ.அ.இல:
ID No: ____________________
முகவரி
Address: ____________________
தொலைபேசி இல:
Tele Nos: ☎ ____________________
மின்னஞ்சல்:
e-mail: ____________________
LIC ஆயுள் காப்புறுதி:
LIC Policy No (If any) ____________________
கூட்டுத்தாபன காப்புறுதி இல.

இக்கூப்பனை பூரணப்படுத்தி இம்மாதம் 19ஆம் திகதியோ அதற்கு முன்பாகவோ கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்

## இப் பரிசுகளை வெல்லுங்கள்

அதிஸ்டம் பார்க்கும் திகதி இம்மாதம் 23 ஆகும்.

Life Insurance Corporation (Lanka) Ltd
Sharnell Building, 29/2, Visaka Road, Colombo 4.
Tel: 011 255 2277, Fax: 011 259 0495



யாழ்.நகர மத்தியில்

# உதயன் விருந்தினர் விடுதி




* குடும்ப அறை வசதி உண்டு.
* குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் குளிரூட்டப்படாத அறைகள்.
* யாழ்ப்பாண உணவு வகைகள் தயாரித்து தரப்படும்.
* பரந்த வாகன நிறுத்துமிட வசதி.
* காலை உணவுடன் கூடிய அறை வசதி.

குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.

## இன்றே ஒருமுறை வருகை தந்து பாருங்கள்

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

021 222 2330
021 567 7603


# ஓர் ஆண்டு கழிந்ததுவோ.....?
# நெஞ்சு விட்டகலாத நினைவலைகள்



தோற்றம்
11.10.1947

மறைவு
23.04.2012

திதி: துதியை
(12.04.2013- வெள்ளி)

அமரர்
## ஆழ்வான் கோபால்

ஓராண்டாய்
ஏங்கித் தவிக்கின்றோம்
ஆண்டவன் அருளால்
பெற்றிடுக சாந்தி.

உங்கள் நினைவோடு வாழும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுவட்டு வெளியீடு

'ததேயு நாதம்' எனும் புனித யூதாததேயு பற்றிய கிறிஸ்தவ பாடல்கள் அடங்கிய இறுவட்டு, இளவாலை புனித யூதாததேயு ஆலய முன்றலில் இன்று மாலை 4மணிக்கு வெளியிடப்படும்.

தொழிலதிபர் ஆனந்தனின் அனுசரணையில் ஏ.ஆர்.வி தயாரிப்பில், ஏ.ஆர். விஜயகுமாரின் இசையில் இந்த இறுவட்டு வெளிவருகின்றது. (ந)

## மணவாளக் கோலத் திருவிழா

சுழிபுரம், ஏப்.12

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மணவாளக் கோலத் திரு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். (ந-28)


# பொருளியற் கல்லூரி / BARATHY

எமது மூன்று நிறுவனங்களிலும் **A/L 2015** கலை வர்த்தகப் பிரிவு

## மீண்டும் புதிய பிரிவு நாளை ஆரம்பம்

**13.04.2013 சனிக்கிழமை (காலை 8.00மணி)**

நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் முன்னணி, ஆசிரியகுழுவினால்

| பாடம் | பொருளியற் கல்லூரி | | BARATHY |
|---|---|---|---|
| | நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ். றோட், இணுவில். | பிரதான வீதி, சித்தன்கேணி |
| * பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் | மகேந்திரன் |
| * கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | நிருக்குமரன் |
| * வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| * தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் | மாலா |
| * இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | N.T.தரன் | N.T.தரன் |
| * புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| * நாடகமும்/அரங்கியலும் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| * வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| * அரசியல் | கோகுலன் | கோகுலன் | கோகுலன் |
| * அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் | R.P.ரமா |
| * கிறிஸ்தவ நாகரிகம், கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| * இந்து சமயம் | N.T.தரன் | N.T.தரன் | N.T.தரன் |
| * ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் | ஆனந்தன் |
| * இலகு கணிதம் | செந்தூரன் | செந்தூரன் | செந்தூரன் |
| * சித்திரம் | கிரிஸ் | கிரிஸ் | கிரிஸ் |
| * சங்கீதம் | சுமநிவி | சுமநிவி | சுமநிவி |
| * மனைப்பொருளியல் | ரஜிதா | ரஜிதா | ரஜிதா |
| * ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| * I.C.T | அர்பி | அர்பி | அர்பி |
| * விவசாயம் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் | விஷ்ணுதேவன் |

Note: *யாழ் நகர் பொருளியற் கல்லூரிக்கு வரும் மாணவர்கள் கவனத்திற்கு:*
யாழ் நகரில் எமது நிறுவனத்தை ஒத்த பெயரில் மாணவர்களை ஈர்க்கும் வகையில் எமக்கு தொடர்பில்லாத நிறுவனம் எங்கள் அருகில் இருக்கின்றது. இங்குள்ள பிரபல ஆசிரியர்கள் அங்கு எவருமே கற்பிப்பதில்லை என்பதை அறியத்தருவதோடு, நீங்கள் வரும் பொழுது நாவலர் றோட்டில் உள்ள பொருளியற் கல்லூரி எது என்பதை அவதானித்து வரவும்.

**உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.**

| | யாழ் நகரில் | இணுவிலில் | BARATHY |
|---|---|---|---|
| கலைப்பிரிவு | 8.00 A.M. | 9.00 A.M. | 12.00 P.M. |
| வர்த்தகப்பிரிவு | 8.00 A.M. | 2.00 P.M. | 8.00 A.M. |

(சி/8327)(5-6)

இயக்குநர், ஆசிரியர்கள்.


# மரண அறிவித்தல்



## ஐயாத்துரை பரராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், புகையிரத திணைக்களம்)

7ஆம் கட்டை, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பரராஜசிங்கம் நேற்று (11.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், குலசிங்கம் (அமெரிக்கா), விமலன் (கனடா), கபிலன் (லண்டன்), கஜந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தினி, சுபாஜினி, பாமா, சிவானுஜன் ஆகியோரின் மாமனும், அன்னலட்சுமி, தனலட்சுமி, சிவபாக்கியம், இராயேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சின்னத்துரை, இராஜதுரை, செல்வரட்ணம், குமாரவேலு, சுப்பிரமணியம், அன்னம்மா, அன்னலட்சுமி, சரஸ்வதி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7ஆம் கட்டை,
சண்டிலிப்பாய்.

(35939) (45.6)

தகவல்:
மகேஸ்வரி (மனைவி).


# வருடாந்த வாலிபர் பாசறை

**காலம்: 16.4.2013 - 20.04.2013**

**இடம்: மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை**

**பதிவுகள்:16.4.2013 மாலை 04.00 மணி**
(ஊழியரின் சிபார்சு அவசியம்)

வாலிபனே
தேவனை மறந்தாயோ?

மேலதிக விபரங்களுக்கு
போதகர் அன்ரன்
தொலைபேசி இல:0775033200

# நாதஸ்வர இசை விழா

பிரபல நாதஸ்வர இசைக்கலைஞர்
பத்மஸ்ரீ டாக்டர்
ஷேக் சின்ன மௌலானாவின் பேரன்

## போல் ஷேக் சின்ன காசிம்

அவர்களின்
*நாதஸ்வர இசை விழா*
*மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை*
*மாலை 05.00 மணியளவில்*
*16.4.2013 - 21.04.2013*
*வரை நடைபெறும்.*
*அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.*



**பிரவேசம் இலவசம்...**

மேலதிக தொடர்புகளுக்கு:
போதகர் சாம் ராஜசூரியர்
தொலைபேசி இல: 077 723 8300

(சி/8325)(6)

# இனிய புத்தாண்டை முன்னிட்டு

**GLOBAL TECH இன் அதிரடி விலைக் கழிவு**
**13.04.2013 - 13.05.2013**

மலேசியாவில் 2011 ஆம் ஆண்டில்
தங்க விருதைப் பெற்ற Fujipure A/C
இப்பொழுது யாழ். மண்ணில் யாழ். மக்களுக்காக...!




**GLOBAL TECH AIR CONDITIONING & REFRIGERATION (Pvt) Ltd.**

கிளை அலுவலகம்

320A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 221 9870

தர்ஷன் - 077 2106044 வெங்கட் - 077 3202854
கோகுல் - 077 3204173 கணேஷ் - 077 2106030

(சி/8148) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org